
தர்மசக்கரம்










துன்மதி ௵ ஆவணி ௴ சக்கரம் 30 ஆரம் 8

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639115, திருச்சி ஜில்லா

செய்ந்நன்றி மறவாமை

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. — திருக்குறள்

நமக்கு உதவி புரிந்தவர்களுக்குப் பதிலுதவி செய்ய விரும்புகிறோம். உதவிபுரிவது தம் கடமை என்று உணர்ந்தவர்கள் பதிலுதவியாகப் பணத்தையோ பொருளையோ ஏற்கமாட்டார்கள். உங்கள் பெயரால் டிபாஸிட் சந்தா ஒன்று வைத்துக்கொண்டு அன்னவர்களுக்கு மாதந்தோறும் தர்ம சக்கரம் இதழ் போய்ச்சேரும்படி செய்யலாம். அவர்கள் இதை அருட் பிரசாதமாக ஏற்றுப் பயன்படுத்துவார்கள். இது செய்ந்நன்றி மறவாமை மட்டுமன்றி மாதந்தோறும் உங்களை அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறது. நாமும் நமக்கு உதவி புரிந்தவர்களை ஆத்மீகத்தில் ஈடுபடுத்திய பாக்கியம் பெற்றவர்களாவோம்.

சந்தா விவரம்

1. டிபாஸிட் சந்தா ரூ. 100

ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்மசக்கர பத்திரிகை தங்களுக்கு வந்துகொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

2. ஆண்டு சந்தா ரூ. 12

ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

3. சகாய சந்தா ரூ. 8

தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலாதவர்கள் ரூபாய் எட்டுமட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்மசக்கர உதவி நிதி' யினின்று ஈடுசெய்துகொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-25 வெளிநாடு வருட சந்தா ரூ. 35-00

13.8.81

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30	துன்மதி ௵ ஆவணி ௴	ஆரம் 8

பொருளடக்கம் பக்கம்

வருட சந்தா :	உள்நாடு	ரூ. 12-00	வெளிநாடு	ரூ. 35-00
தனி இதழ்	,,	ரூ. 1-25	,,	ரூ. 3-00

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்-ராமேஸ்வரம்

இவ்வாண்டு ஏப்ரல் 12ம் தேதி ஸ்ரீராமநவமி அன்று இம்மடாலயம் துவக்கப் பெற்றது. அன்று முதல் அங்கு மகேஸ்வரபூஜைமுறையில் அன்னம் வழங்குதல் நடைபெற்று வருகிறது. 1—6—81 முதல் 31—7—81 முடிய எல்லா வேளைகளிலும் 3189 பேர் உணவு ஏற்றுக்கொண்டனர். உண்டியல் மூலமும் அன்பர்கள் நேரில் தந்ததுமாக நன்கொடை வரவு 1—6—81 முதல் 31—7—81 முடிய ரூ. 1430-00 மூலதனமாக வைத்துக்கொண்டு வட்டியைமட்டும் செலவிடுமாறு வந்த தொகை 1—6—81 முதல் 31—7—81 முடிய ரூ. 12302-00. ஏப்ரல் மாதத்திலிருந்து இதுவரை ஆகியுள்ள உணவுச் செலவு ரூ. 10392-50. இம்மடாலயத்திற்கு தேவையாயுள்ள ஜலவசதி, கக்கூஸ் வசதிக்கான கட்டடவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 31—7—81 முடிய ஆகியுள்ள கட்டடச் செலவு ரூ. 65076-14.

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—வில்லுப்பட்டியில் (கொடைக்கானல்) 19—8—81 புதன்கிழமை

இடம்: ஓம் பிரம்மானந்த ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4•30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆர்காடு ஜில்லா—வேலூரில் 23—8—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

கோவை ஜில்லா—பல்லடத்தில் 30—8—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: காந்திரோடு, ஹைஸ்கூல் எதிரிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—சிவகிரியில் 30—8—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: நடுநிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 6—9—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—ஆத்தூரில் 13—9—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு சோமசுந்தரி சமேத சோமநாதர் திருக்கோவில் அம்மன் சன்னிதி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

தஞ்சையில் 13—9—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: வீரராகவ ஆரம்பப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும், ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 30 | துன்மதி ஹு ஆவணி மீ | ஆரம் 8

பிரார்த்தனை

तव दास्यसुखैकसङ्गिनां भवनेष्वस्त्वपि कीटजन्म मे ।
इतरावसथेषु मास्म भूदपि मे जन्म चतुर्मुखात्मना ॥

— यमुनाचार्य

தவ தாஸ்ய ஸுகைக ஸங்கினும்
பவனேஷ்வஸ்த்வபி கீடஜன்ம மே ।
இதராவஸதேஷு மாஸ்ம பூதபி மே
ஜன்ம சதுர்முகாத்மனா ॥

— *யமுனச்சார்யர்*

இறைவா! மகிழ்வோடு உனக்குப் பணிவிடை பண்ணும் பக்தர் வீட்டில் நான் புழுவாக வாவது பிறப்பெடுப்பேனாக. ஏனையவர் வீட்டில் நான்முகப் படைப்புத் தெய்வமாகவும் நான் பிறப்பெடுக்கலாகாது.

கண்ஆவா ரேனும்உனைக் கைகுவியார் ஆயின்அந்த
மண்ஆவார் நட்பை மதியேன் பராபரமே.

— *தாயுமானவர்*

அருள் விருந்து

பேராசையைத் தகர்த்துத்தள்ளவல்லது தூய அன்பு.

நலனும் கேடும் அவரவர் விதைத்த வினையின் விளைவாம்.

போகத்துக்கு எல்லையுண்டு. யோகத்துக்கு எல்லை இல்லை.

தர்மத்தைக் கடைப்பிடிப்பவனை யாண்டும் தர்மம் காப்பாற்றுகிறது.

தீய எண்ணத்தை நல்ல எண்ணத்தைக்கொண்டு நிவர்த்தி பண்ணுக.

மனதைப் பரத்தின்பால் செலுத்துதற்கேற்ப அதற்கு அமைதி உண்டாகிறது.

கீழ்மையைத் தியாகம் பண்ணுவதற்கேற்ப மேன்மை தானாக வந்தமைகிறது

அருள் நாட்டம் வலுப்பதற்கேற்பப் பொருள் நாட்டம் பின்னணிக்குப் போகிறது.

அருள்தாகம் எடுத்திருப்பவன் அதிவிரைவில் பரமனை நோக்கிப் பயணம் போகிறான்.

நல்ல மனம் படைத்திருப்பவனுக்கு உடலைப்பிடித்துள்ள நோய் துன்பம் செய்யமாட்டாது.

ஸத்தியத்தினின்று வழுவாது இருப்பவனிடம் நல்லறிவு தானே வடிவெடுத்து வருகிறது.

ஒருவன் பிறர்க்கு எதை எடுத்து வழங்குகிறானோ அதைத் தெய்வம் அவனுக்கு எடுத்து வழங்குகிறார்.

சன்மார்க்கத்தைத் தான் அனுஷ்டிக்காது பிறர்க்கு அதை எடுத்துப் போதிப்பவனைப் பிறர் பாராட்டுவதில்லை.

அருள்ஜோதியை நாடி நடப்பவனை அவன் உண்டுபண்ணும் நிழலாகிய துன்பம் அவனை ஒன்றும் செய்யமாட்டாது.

மனிதன் புரிந்துள்ள கொடிய பாபச் செயலுக்கும் நிவர்த்தி உண்டு. அது அவன் செய்யும் தீர்மானத்தை ஒட்டியதாகும்.

சமபத்தின் பெயரால் மனதில் ஊறிக்கிடக்கும் கோணலை யுக்தியைக் கொண்டு அகற்ற இயலாது. அக்கோணலின் விளைவாக வரும் துன்பத்தைச் சகித்தல் வேண்டும். அச்சகிப்பு ஒருநாள் அன்னவனுக்கு மெய்ஞ்ஞானத்தை ஊட்டும்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் தக்ஷிணேசுவர ஆலயத்தில் தமது அறையில் சிறிய கட்டிலின்மீது அமர்ந்திருந்தார். அவருடைய மனதோ ஆழ்ந்து அந்தர்முக திருஷ்டியில் மூழ்கியிருந்தது. அந்த அறையில் தரையின்மீது விரிக்கப்பட்டிருந்த பாயின்மீது மகிமசரண், ராம், மனேமோகன், நவசைதன்யர், மகேந்திரர் ஆகியோர்களும் மற்றும் சில அன்பர்களும் அமர்ந்திருந்தனர். அவர்கள் எல்லாரும் பரமஹம்சதேவரை உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். அன்று ஹோல யாத்ரா நாள் ஆகும். அதை ஹோலிப் பண்டிகை என்றும் பகர்வார்கள். அந்த நன்னாளை முன்னிட்டு ஸ்ரீ கிருஷ்ணனும், ராதையும் வழுத்தப்படுகிறார்கள். அவர்களின் விக்ரஹங்கள் ஓர் ஊஞ்சலில் வைக்கப்பட்டிருந்தன. இடையிடையே அந்த ஊஞ்சல் அசைக்கப்பட்டது. அந்த விக்ரஹங்களின்மீது குங்குமம் தூவப்பட்டது. அதே நன்னாளில்தான் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் அவதரித்தார். ஆக இந்த இரண்டு காரணங்களை முன்னிட்டு அத்திருநாள் குதூகலத்துடன் கொண்டாடப்பட்டது.

பரமஹம்சதேவருடைய மனது இப்பொழுது அதீதநிலையினின்று இப்பிரபஞ்ச ஞாபகத்துக்குச் சிறிது சிறிதாக வருவதன் அறிகுறிகள் தென்பட்டன.

மகிமசரணை நோக்கிப் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "அன்புக்குரிய ஐயனே, ஈசுவரப் பக்தியைப்பற்றிய விஷயங்கள் சில வற்றை எங்களுக்கு எடுத்து இயம்புவீராக."

மகிமசரண் நாரத பஞ்ச ராத்ராவிலிருந்து சில பகுதிகளை எடுத்து இங்ஙனம் பாடலாயினர். பக்திபூர்வமாகப் பகவான் ஆராதிக்கப்படுவாராகில் அதற்கு நிகரான தபசு வேறு யாது உளது?

பக்திபூர்வமாகப் பகவான் ஆராதிக்கப்படாவிட்டால் தவத்தால் ஆவது வேறு யாது உளது?

அகத்திலும் புறத்திலும் பகவானுடைய காட்சியைக் காணுவதற்குத் தவத்தால் வரும் பயன் யாது உளது?

நான்முகக் கடவுளாகிய பிரம்மதேவனே! என் அருமைச் செல்வனே! ஓயாது தவம் புரிந்துகொண்டிருப்பதை நிறுத்திவிடுவாயாக. பேரறிவுப் பெருங்கடலாகிய சங்கரனை நீ சென்றடைவாயாக.

பக்தர்கள் பாராட்டும் தூய பக்தியை அப்பெம்மானிடமிருந்து பெற்றுக்கொள்வாயாக. உலகப்பற்று என்னும் தளைகளினின்று அந்தப் பக்தியானது உன்னை விடுவிக்கவல்லதாம்.

மகிமசரண் மொழிந்ததாவது: "பண்டொரு காலத்தில் நாரதர் கடும் தவம் புரிந்துகொண்டிருந்தார். அவ்வேளையிலே இப்பொழுது பாடப்பெற்றுள்ள கருத்துக்களடங்கிய பாடல்கள் அவருடைய காதில் வந்து வீழ்வனவாயின."

பரமஹம்சதேவர்: "பக்தர்களுள் இரண்டு விதமான பாகுபாடுகளிருக்கின்றன. ஒரு கூட்டத்தார் ஜீவகோடிகள் என இயம்பப் பெறுகிறார்கள். உலகில் நாம் காணும் சாதாரண பக்தர்கள் இந்தக்கூட்டத்தில் சேர்ந்திருக்கிறார்கள். மற்றொரு கூட்டத்தார் ஈசுவரகோடிகள் என இயம்பப் பெறுகின்றனர். அவர்களிடம் தெய்வீக சம்பத்துக்கள் ஏராளமாக அமைந்திருக்கின்றன. ஜீவகோடிகள் பகவான்மீது வைக்கிற பக்திக்கு வைதிக பக்தி என்று பெயர். அதைச் சர்வசாதாரணமாகப் பலரிடத்துக் காணலாம். சாஸ்திரநியதிகளுக்கு உட்பட்டதாக அது அமைந்திருக்கிறது. வைதிக பக்தி படைத்திருக்கும் பக்தனொருவன் புஷ்பம், சந்தனம், குங்குமம் ஆகிய திரவியங்களைக்கொண்டு கடவுளைப் போற்றுகிறான். நியமித்துள்ள எண்ணிக்கைக்கு உட்பட்டு ஈசுவர நாமத்தை அவன் ஜபிக்கிறான். பரமனைக் குறித்து அவன் சிறிதுநேரம் தியானம் பண்ணுகிறான். அவரைப் போற்றிப் பாடல்கள் சிலவற்றைப் பாடுகிறான். இத்தகைய பக்தி மார்க்கத்தை ஞான மார்க்கத்தோடு ஒப்பிடலாம். இதை முறையாகக் கையாண்டு வந்தால் இதன் வாயிலாகப் பக்தனொருவன்

சமாதிநிலையடைகிறான். சமாதிநிலை வாய்க்கப் பெற்ற ஜீவன் ஒருவன் மீண்டும் இப்பிரபஞ்ச ஞாபகத்தைப் பெறுவதில்லை. பரம்பொருளில் அவன் லயமாகிறான்.

''மற்று ஈசுவரகோடி ஒருவனுடைய பாங்கு இதினின்று வேறுபடுகிறது. நித்திய அநித்திய வஸ்து விசாரம் சிறிதளவு ஆரம்பதசையில் அவனிடம் நிகழ்கிறது. இவ்வுலக வாழ்வை நித்தியமானது அன்று என்று ஆரம்பதசையில் அவன் ஒதுக்குகிறான். பக்தி ஓங்கிய பிறகு தன் கருத்தை அவன் மாற்றியமைக்கிறான். இப்பிரபஞ்சம் என்பது பிரம்மத்தினுடைய புறத்தோற்றம் என அவன் அனுபூதியில் அறிய வருகிறான். ஓர் உபமானத்தின் மூலம் இதைத் தெளிவுபடுத்தலாம். மாடிக்குச் செல்ல விரும்புகின்ற மானிடன் ஒருவன் படிகளை முதலில் ஒவ்வொன்றாக ஒதுக்கித் தள்ளுகிறான். அதன் விளைவாக அவன் மாடியை எட்டுகிறான். மாடியை எட்டியான பிறகு அந்த மாடியையும் அதைச் சென்றடைவதற்கு அமைந்துள்ள படிக்கட்டுகளையும் ஒரே வஸ்துவால் அமைக்கப்பெற்றவைகள் எனக் காண்கிறான். செங்கல்லையும், சுண்ணம்பையும் கொண்டே மாடியும் அமைந்திருக்கிறது; படிக்கட்டுகளும் அமைந்திருக்கின்றன. இவ்வுண்மையை அறிந்தான பிறகு அவன் படிகளின் மீது நின்றுகொண்டிருந்தாலும் சரி, மாடியின் மீது நின்றுகொண்டிருந்தாலும் சரி இரண்டு நிலைகளிலும் அவனைத் தாங்கிப் பிடிக்கும் வஸ்து ஒன்று என்பதை அறிய வருகிறான். அங்ஙனம் ஈசுவரகோடி பக்தனொருவன் யாண்டும் ஈசுவர சான்னித்தியத்திலேயே இருப்பதாக அனுபூதிமான் வாயிலாக அறிய வருகிறான்.

''சுகதேவன் யாண்டும் சமாதியிலேயே மூழ்கியிருந்தான். அவன் அடைந்திருந்த நிலையை நிர்விகல்ப சமாதி என்றும், ஜடசமாதி என்றும் சொல்லலாம். பிரபஞ்சத்தைக் கருத்தில் வாங்காது மனதை யாண்டும் அதீத நிலையில் வைத்திருந்த இந்தச் சுகதேவன் பரீக்ஷித்து மன்னனுக்குப் பாகவதத்தை எடுத்துப் புகட்ட வேண்டிய கடமைக்குத் தெய்வாதீனமாக உள்ளானான். இந்த அரிய பெரிய செயல் நிறைவேறுதல் பொருட்டு நாரத மகரிஷி சர்வேசுவரனால் இவனிடம் அனுப்பப்பட்டார். நாரதர் வந்து பார்த்தபொழுது சுகதேவன் கல் போன்று அசைவற்று இருந்தான். பிரபஞ்ச ஞாபகம் ஏதும் இவனிடத்தில்லை. இந்நிலையிலிருந்த சுகதேவனுக்கருகில் அமர்ந்துகொண்டு நாரதர் நான்கு பாடல்களைப் பாடினார். வீணையை மீட்டிக்கொண்டு ஹரியின் மகிமைகளைப்பற்றி அவர் பாடினார். முதல் பாடல் பாடியபொழுது அசைவற்றுக் கல் போன்று இருந்த சுகதேவனுடைய சரீரம் முழுதிலும் புளகாங்கிதம் ஏற்பட்டது. இரண்டாவது பாடலைப் பாடியபொழுது இவன் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பொழிந்தது. ஏனென்றால் இவனுடைய ஹிருதய கமலத்தில் பகவானுடைய புனிதம் நிறைந்த வடிவம் பிரகாசித்துக்கொண்டிருந்ததை ஞானக் கண்கொண்டு காணலாயினன். இவ்விதம் இவன் படைத்திருந்த நிர்விகல்ப சமாதி சவிகல்ப சமாதியாக மாறியமைந்தது. இக்காரணத்தை முன்னிட்டு இவனை ஓர் ஈசுவரகோடி என இயம்பலாம்.

''ஹனுமான் ஒரு பரம பக்தன். அவன் பரம்பொருளைச் சாகாரத்திலும் நிராகாரத்திலும் அனுபூதியின் வாயிலாக அறியலாயினன். அதன் பிறகு அவன் தன் மனதை ராமன் வடிவத்திலேயே சதா நிலைத்திருக்கச் செய்தான். அதன் விளைவாக அவன் யாண்டும் சிதானந்தத்திலேயே திளைத்திருந்தான். அத்தகைய ஹனுமானும் ஓர் ஈசுவரகோடி ஆவான்.

''பிரஹலாதனுக்கு இரண்டு விதமான அனுபூதிகள் வாய்க்கலாயின. ஸோஹம் அனுபூதி ஒன்று. தாஸோஹம் அனுபூதி மற்றொன்று. சில வேளைகளில் அவன் தன்னைத் திருமாலின் தொண்டனாக உணரலாயினன். வேறு சில வேளைகளில் அவனுடைய ஜீவ வியக்தியானது மகாவிஷ்ணு என்னும் அகண்ட சச்சிதானந்தத்தில் ஒன்றுபட்டு இருந்தது. அத்தகைய பாங்கு படைத்திருந்த பிரஹலாதனுக்குப்பக்தி ஏன் ஊற்றெடுத்து ஓடாதிருக்கும்? சில வேளைகளில் அவன் தன்னைத் தன் வழிபடு தெய்வத்திற்குத் தொண்டனாக வைத்துக்கொண்டான். அங்ஙனம் அவன் பூண்ட இணக்கம் அவனைப் பரமானந்தத்தில் திளைத்திருக்கச் செய்தது. இந்நிலையில் பரம்பொருள் முற்றி

லும் பேரின்ப வடிவுற்று மிளிர்கிறது. அப்பேரின்பத்தைப் பரவச நிலையில் அனுபவிக்கும் நிலையில் பக்தனிருக்கிறான். பிரஹலாதன் இத்தகைய அரியபெரிய பாரமார்த்திகப் பெருநிலைக்கு உரியவனாயிருந்ததினால் அவனும் ஓர் ஈசுவரகோடியாகக் கருதப்படுகிறான்.

"பக்தன் என்னும் அகங்காரம் ஒரு தெய்வ சம்பத்து ஆகும். ஞானி என்னும் அகங்காரம் மற்றொருவித தெய்வ சம்பத்து ஆகும். பாலன் என்பது இன்னும் ஒரு தெய்வ சம்பத்தாம். இத்தனை விதமான தெய்வ சம்பத்துக்களுக்கு இலக்காகும் ஆத்ம சாதகர்கள் யாருக்குமே தீங்கிழைக்க முடியாது. சங்கராச்சாரியர் ஞானம் என்னும் அகங்காரத்தை உடைத்திருந்தார். ஆதலால்தான் பாஷ்யங்களை இயற்றுவது அவருக்குச் சாத்தியமாயிற்று. பாலன் என்னும் அகங்காரம், பிரபஞ்சப் பொருள் எதனிடத்தும் பற்றுவைக்காத நிலையாம். பாலன் ஒருவன் முக்குணங்களில் கட்டுப்படாது இருக்கிறான். சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களுக்கும் அப்பாற்பட்டவனாக அவன் இருக்கிறான். கோபித்துக்கொண்டவன்போன்று ஒரு வேளையில் அவன் தென்படுகிறான். அடுத்த வேளையில் அவன் பூண்டிருந்த கோபம் மாயமாய் மறைந்து போகிறது. ஒரு வேளையில் அவன் மணலில் வீடு கட்டுகிறான். அடுத்த க்ஷணத்தில் அவன் கட்டிய வீட்டை அறவே மறந்துவிடுகிறான். கூட்டாளிகளோடு அவன் குலாவி விளையாடுகிறான். அவர்களை விட்டுப்பிரிந்ததும் அவன் அவர்களை மறந்துவிடுகிறான். இத்தகைய செயல்கள்யாவும் அவன் மூன்று குணங்களுள் எந்தக் குணத்தாலும் பாதிக்கப்படாதவன் என்பது வெளியாகிறது.

"பக்தன் ஒருவன் படைத்திருக்கும் பாங்கை இங்ஙனம் எடுத்து இயம்பலாம். 'இறைவா, நீ பிரபு. நான் உனக்குத் தொண்டு புரியும் தாசன். இத்தகைய நான் பக்தியை அடிப்படையாகக்கொண்டதாம். சரீரம் இருக்கிறவரையில் ஏதேனும் ஓர் அகங்காரம் படைத்திருப்பது தவிர்க்க முடியாததாம். அகங்காரங்களுள் 'நான் தொண்டன்' என்னும் அகங்காரத்தில் தீங்கு ஏதுமில்லை. ஆதலால் பக்தன் தீங்கில்லாத அந்த அகங்காரத்தை உறுதியாகப் பிடித்துக்கொள்கிறான்.

"ஆத்ம சாதகன் ஒருவன் எவ்வளவுவேண்டுமானாலும் தத்துவ விசாரம் செய்யலாம். ஆயினும் அகங்காரம் அவனைவிட்டு அகன்று போகாது. அகங்காரத்தை ஒரு மட்பாண்டத்தோடு சீர்தூக்கலாம். அதன் உள்ளும் புறமும் இருக்கும் சமுத்திரத்தோடு பிரம்மத்தை ஒப்பிடலாம். இந்தச் சமுத்திரத்தினுள் அகங்காரம் என்னும் மட்பாண்டம் மிதங்கிக்கொண்டிருக்கிறது. அதன் உள்ளும் புறத்திலும் எங்குமே நீர் வியாபித்திருக்கிறது. எனினும் அந்த மட்பாண்டம் தனது வியக்தியை விடாது பிடித்து வைத்திருக்கிறது. இத்தகைய அகங்காரத்தை உடையவனாகப் பக்தன் ஒருவன் இருக்கிறான். இந்த அகங்காரம் இருக்கும் வரையில் 'நீ, நான்' என்னும் வேற்றுமையும் நிலைத்திருக்கிறது. அதோடு கூட 'இறைவா, நீ பிரபு; நான் உன்னுடைய பக்தன்; நீ தலைவன்; நான் உன் தொண்டன்' என்னும் உணர்வும் நிலைத்திருக்கிறது. பொதி பொதியாகச் சாதகன் ஒருவன் ஆராய்ச்சி பண்ணலாம். ஆயினும் இத்தகைய அகங்காரம் அவனுடைய உள்ளத்தை விட்டு அகலாது. இனி மட்பாண்டம்இல்லாத நீர்ப்பரப்பைக் கருத்தில் வாங்கிப் பார்ப்போம். அந்நிலையில் 'நான்' என்னும் சொல்லுக்கு இலக்காகப் பொருள் ஏதுமில்லை. அந்நிலையே ஜீவாத்மன் பரமாத்மனில் ஒடுங்கிய நிலையாம்."

இப்பொழுது நரேந்திரன் அறையினுள் வந்து பரமஹம்சதேவரை வணங்கினான். அவர்கள் இருவருக்குமிடையில் பேச்சு நிகழ்ந்தது. அப்பேச்சுக்கிடையில் பரமஹம்சதேவர் தாம் இதுகாறும் அமர்ந்திருந்த சிறியகட்டிலினின்று கீழே இறங்கிவந்து தரையின்மீது விரிக்கப்பட்டிருந்த பாயின் மீது அமர்ந்தார். இதற்கிடையில் அந்த அறையினுள் ஏனைய பக்தர்களும் மற்றவர்களும் வந்து கூடினர்.

பரமஹம்சதேவர் (நரேந்திரனைப் பார்த்து): "நீ நன்றாய் இருக்கின்றாயா? அடிக்கடி நீ கிரீஷ் சந்திரகோஷை அவருடைய இல்லத்தில் சென்று சந்திக்கிறாய் என்று நான் கேள்விப்படுகிறேன். அது உண்மைதானா?"

நரேந்திரன்: "ஆம் ஐயனே, இடையிடையே நான் அவரைச் சென்று சந்திக்கிறேன்."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

3-5. ஒட்டுடன்பற்று இன்றி உலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புஉணர்வது
[எந்நாளோ.

முற்றத்துறந்த முனிவர் எனப் பட்டினத்தார் போற்றப் பெறுகிறார். உலகைத் துறந்த பாங்கில் அவர் புத்தர் பெம்மானுக்கு ஒப்பாவார். ஆதலால் தியாகத்திலே அவர் தமிழ் நாட்டுப்புத்தர்எனப் பாராட்டப்படுகிறார். அவர் துறவியான பிறகு அவரோடு பத்ரகிரியாரும் கொஞ்சகாலம் வாழ்ந்திருந்தார். திருவிடைமருதூரில் கோயிலின் கீழ்வாயிலண்டை பட்டினத்தார் சிற்சில வேளைகளில் ஓய்வு பெற்று வந்தார். அதே கோயிலின் மேல்வாயிலண்டை பத்ரகிரியார் விச்ராந்தி பெற்று வந்தார். பிக்ஷை ஏற்பதற்குப்பத்ரகிரியாரிடம் திருவோடு ஒன்று இருந்தது. பட்டினத்தாரோ திருவோட்டையும்கூட உடைமையாகக் கொள்ளவில்லை. பிக்ஷை ஏற்பதற்குத் தம் கரங்களையே பாத்திரமாக அவர் பயன்படுத்தி வந்தார். கௌபீனத்தைத் தவிர வேறு எந்த உடைமையும் அவரிடத்து இல்லை. திருவோட்டில் பிக்ஷை ஏற்று உண்பதும் அதே வேளையில் தம்மை அணுகிற நாய்களுக்குக் கொஞ்சம் உணவு அளிப்பதும் பத்ரகிரியாருடைய செயலாயிருந்து வந்தன. ஒரு நாள் கீழ்க்கோபுர வாயிலில் அமர்ந்திருந்த பட்டினத்தாரிடம் மற்றொரு துறவி வந்து தம் பசியை ஆற்றுதற்கு ஏதாவது உணவு அளிக்கும்படி வேண்டினார். அப்படி வேண்டினவரிடம் குடும்பி ஒருவன் மேல் கோபுர வாயிலில் வசித்து வருகிறான் என்றும் அங்குச் சென்றால் உணவு கிடைக்கும் என்றும் இயம்பினார். அவரை நாடிவந்த துறவியும் அங்ஙனமே செய்தார். தாம் படைத்திருந்த திருவோட்டையும் மன்னுயிர்களுக்கு வழங்கிய உணவையும் முன்னிட்டுத் தாம் ஒரு குடும்பியாகப் பட்டினத்தாரால் கருதப்பட்டது திடீரென்று அவருடைய உள்ளத்தில்ஒரு விழிப்பை ஊட்டியது. அதன் விளைவாக அந்தத் திருவோட்டை எடுத்துப் பத்திரகிரியார் தூரவீசி எறிந்துவிட்டுப் பட்டினத்தாரைப் போன்றே பரிக்கிரஹம் ஏதுமின்றி முற்றத்துறந்த முனிவர் ஆனார். உடலைப்பற்றிய உணர்வோ அதைப் போஷித்தல் பொருட்டு உணவைப் பற்றிய சிந்தனையோ எள்ளளவும் இல்லாதிருப்பவனே துறவியர்களுள் தலைசிறந்த துறவியாகிறான். அத்தகைய பண்பாடு பட்டினத்தாரிடத்தும், பத்ரகிரியாரிடத்தும் சிறப்பாக அமைந்திருந்தது. தீவிர துறவின் விளைவாக யார் உள்ளத்தில் உடலைப்பற்றிய உணர்ச்சியோ, உணவைப்பற்றிய சிந்தனையோ எழாது இருக்கின்றதோ அத்தகைய தீவிர துறவியைத் துறவி வேந்தனாகிய சிவபெருமானே காப்பாற்றி வருகிறார். அன்னவர்களுக்குக் குறிப்பிட்ட வேளைகளில் பிக்ஷை படைக்கும் எண்ணம் பக்தர்கள் உள்ளத்தில் தற்செயலாக எழுகிறது. அதன் விளைவாக அத்துறவியர்களைத் தேடிச் சென்று பக்தர்கள் பிக்ஷை படைக்கின்றனர். காலப்போக்கை முன்னிட்டு இக்கோட்பாடு ஒருபொழுதும் மாறுவதில்லை.

3-6. கண்டதுபொய் என்று அகண்டா காரசிவம்
மெய்எனவே
விண்டசிவ வாக்கியர்தாள் மேவுநாள் எந்நாளோ.

விண்ட — விளக்கிய; மேவுநாள் — அடையும் நாள்.

ஐம்பொறிகளுக்குப் புலனாவது பிரபஞ்சம். ஐம்பொறிகள் தாமே நிலையற்றவை. மேலும் புலப்படுபவைகளைத் தெளிவாகவும், உள்ளபடியும் தெரிவிக்கும் தன்மை பஞ்சேந்திரியங்களுக்கு இல்லை. சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். மலைப்பிரதேசங்களில் மேகம் சஞ்சரிக்கிறபொழுது வானவில்கள் பக்கம் பக்கம் தென்படுகின்றன. அவைகளைப் பார்க்கும் மனிதர்களுள் ஒருவன் இருந்த இடத்தில் நின்று கொண்டும், மற்றொருவன் வானவில் தென்படுகிற இடத்துக்குப் போகிறான் என்றும் வைத்துக் கொள்வோம். இவர்களுள் முதலாமவனுக்குத் தென்படுகின்ற வானவில் காட்சி இரண்டாவது மனிதனுக்குத் தோற்றத்தில் இல்லை. அதற்குப் பதிலாக அவன் தூரத்தில் மற்றொரு வானவில்லைப் பார்க்கிறான். சூழ்நிலைக்கேற்ப இங்ஙனம் வானவில்லின் காட்சி

இடம் மாறுகிறது. எனவே தோற்றத்திலிருந்தாலும் வானவில் காட்சி மெய்க்காட்சியாகாது. அது வெறும் தோற்றமேயாம்.

மனம் செயல் புரிகிறபொழுது பிரபஞ்சம் காட்சியளிக்கிறது. அயர்ந்த உறக்கத்தில் மனம் ஒடுங்கியிருக்கிற பொழுது பிரபஞ்சமும் மறைந்துபட்டுப்போகிறது. இந்த மனதோ நிலையற்றது. இத்தகைய நிலையற்ற மனதுக்கும் குறைவுபட்டுள்ள இந்திரியங்களுக்கும் புலனாகும் பிரபஞ்சத்தை மெய்ப்பொருள் எனலாகாது.

ஜாக்கிரதாவஸ்தையில் பிரபஞ்சத்தை மனிதன் ஒரு பாங்கில் பார்க்கிறான். சொப்பனவஸ்தையில் அதற்கு நிகராக மனிதன் தன் மனப்பான்மைக்கு ஏற்ப மற்றோர் உலகை உண்டுபண்ணிக் கொள்ளுகிறான். சுஷுப்தி அவஸ்தையில் இந்த இரண்டுவித உலகங்களும் மறைந்துபட்டுப் போகின்றன. எனவே ஓர் அவஸ்தையில் இருந்து, மற்றோர் அவஸ்தையில் இல்லாது போவதுமாகிய உலகை மெய்ப்பொருள் எனலாகாது. எது ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் மறைந்துபட்டுப் போகிறதோ அது மெய்ப்பொருள் ஆகாது. வானவில் போன்று எது ஓரிடத்தில் இருந்தும், மற்றோரிடத்தில் இல்லாதும் போகிறதோ அது மெய்ப்பொருள் ஆகாது. கால தேச நிமித்தத்தை முன்னிட்டுத் தோன்றவும், மறையவும் செய்கின்ற மாயப் பிரபஞ்சம் மெய்ப்பொருள் ஆகாது.

ஜாக்ரதம், சொப்பனம், சுஷுப்தி ஆகிய மூன்று அவஸ்தைகளுக்கும் பொதுவாய் நிலை மாறாது இருப்பது துரியம். அத்துரியமே பரவஸ்து. அதற்குத் துவக்கமுமில்லை; முடிவுமில்லை. அத்துரியமே பரசிவம் இவ்வுண்மையை ஆத்ம சாதகர்களுக்குத் தெளிவுபட விளக்கியருளிய சிவவாக்கியருடைய திருவடிகளைப் போற்றி நான் உய்வடையும் நாள் எந்நாளோ என்பது இக்கண்ணியின் பொருள்.

3-7. சக்கர வர்த்தி தவராஜ யோகிஎனும்
மிக்கதிரு மூலன்அருள் மேவுநாள் எந்நாளோ.

அரசர்களுக்கெல்லாம் பேரரசனாயிருப்பவன் சக்கரவர்த்தி என அழைக்கப்படுகிறான். அதே விதத்தில் கவிஞர்கள் எல்லாருக்கும் தலை சிறந்த கவியாயிருப்பவன் கவிச்சக்கரவர்த்தி என இயம்பப் பெறுகிறான். பதஞ்சலி முனிவருக்கு நிகராகத் திருமூலர் ராஜயோகம் அல்லது அஷ்டாங்க யோகத்தின் உச்சத்தை நிறை நிலையில் அடையப்பெற்றவர். எனவே திருமூலரைத் தவசிகளுக்கிடையில் சக்கரவர்த்தி எனவும் யோகிகளுக்கிடையில் சக்கரவர்த்தி எனவும் கூறலாம். அத்தகைய பண்புகளனைத்தும் அமையப்பெற்றுள்ள திருமூலருடைய அருளுக்கு நான் என்று இலக்காவேன்? என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

3-8. கந்தர்அநு பூதிபெற்றுக் கந்தர்அநுபூதிசொன்ன
எந்தை அருள்நாடி இருக்குநாள் எந்நாளோ.

அருணகிரிநாதர் சுப்ரமணியக் கடவுளின் பரம பக்தர் ஆவார். பக்தி சாதனங்களில் ஈடுபடுவதற்கு முன்பு அவருடைய வாழ்வு சிறிது காலம் இந்திரியங்களின் சுகபோகத்துக்கு அடிமைப்பட்டுக் கீழ்மையில் உழன்று கிடந்தது. வழிபடு தெய்வமாகிய முருகனுடைய திருவருளால் அவருடைய வாழ்வு திடீரென்று புனிதம் வாய்ந்ததாகத் திருந்தியமைந்தது. அறை ஒன்று நெடுநாள் இருள் சூழ்ந்து கிடக்கலாம். அதனுள் விளக்கைக்கொண்டு வந்ததும் நெடுநாளிருந்த இருள் அக்கணமே அகன்று போகிறது. அதற்கு நிகரானது அருணகிரி நாதருடைய மண்ணுலக வாழ்வு. நெடுநாளாக மனிதனை வாட்டுகின்ற சிற்றின்ப இயல்பு அகலுதற்கு நெடுங்காலம் எடுத்துக் கொள்ளுகிறது என்பது உண்மையன்று. சான்றோர்களைப் பற்றிய பழமொழி ஒன்று உண்டு. சான்றோர் ஒவ்வொருவனுக்கும் பொருந்தாத பழங்காலம் ஒன்று இருந்தது; சிறு நெறியில் உழலும் அற்பனுக்கும் உய்வு காலம் ஒன்று உண்டு என்பது அப்பழமொழியாம். இது அருணகிரி நாதர் விஷயத்தில் முற்றிலும் பொருந்தும். இறைவன் அருளுக்குப் பாத்திரமாகின்ற ஆத்மா ஒரே ஜன்மத்தில் கீழ்மைகளனைத்தையும் துடைத்துத் தள்ளிவிட்டுப் புண்ணியனாவது திண்ணம் என்பதற்கு இவர் சான்று ஆகிறார். அனன்ய பக்தியும், தீவிரத் துறவும் பாங்கில் ஒன்றேயாம். அருணகிரி நாதர் படைத்திருந்த தீவிரமான பக்தி தமக்கும் வாய்க்க வேண்டுமென்று தாயுமானவர் இக்கண்ணியின் வாயிலாகத் தெய்வத்திடம் பிரார்த்திக்கிறார்.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

22. பரமண்டலத்திலிருக்கின்ற எங்கள் பரம பிதாவே, உம்முடைய ராஜ்யம் வருவதாகுக.

கண்களைத் திறந்து பார்த்தால் ஆகாயம் காட்சிக்குரியதாகிறது. அங்ஙனம் அகக்கண் திறக்கப்பட்ட ஞானிகளுக்கு இறைவன் காட்சிக்குரியவர் ஆகின்றார். கண்ணுடையவர்களுக்கு உலகம் இருப்பதுபோன்று ஞானக் கண் திறக்கப்பட்டவர்களுக்குக் கடவுள் ராஜ்யம் இங்கேயே இருக்கிறது. செத்த பிறகு வைகுண்டம் என்பதும், பரலோகம் என்பதும் சோம்பேறிகளுடைய பிதற்றல்கள். "இறைவா! உன் ராஜ்யத்துக்கு ஒருநாளைக்கு நான் வந்து சேருவேன்" என்று சோம்பல்படைத்த கிறிஸ்தவர்கள் பகர்கிறார்கள். "இறைவா! இன்னும் பல பிறப்புக்களுக்குப் பிறகாவது உன் காட்சி பெறுவோம்" என்று சோம்பல் படைத்த இந்துக்கள் பகர்கிறார்கள். இறைவனுடைய ராஜ்யம் இங்கேயே இப்பொழுதே இருக்கிறது. ஒரு சிலர் உலகையும் தங்களையும் மறந்து தியானத்தில் மூழ்குகின்ற பொழுது இறைவன் சாம்ராஜ்யம் இங்கிருப்பதை உணர்கிறார்கள். சாதனையில் ஈடுபட்டு வந்தால் நம்மிடத்தில் உள்ள அக்ஞானம் நீங்கி இறைவனுடைய ராஜ்யத்தை நம் அகத்தில் காணலாம். அகத்தில் தெய்வக் காட்சி ஏற்பட்டு விட்டால் புறத்தில் நம்மைச் சுற்றிலும் தெய்வம் இருப்பதைக் காணலாம். அகம், புறம் ஆகிய எங்கும் தெய்வத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இக்கருத்தைத்தான் இயேசுநாதருடைய இப்பிரார்த்தனை விளக்குகிறது.

23. பரமண்டலத்தில் இருக்கின்ற எங்கள் பரம பிதாவே, உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செயல்படுவது போன்று பூமியிலும் செயல்படுவதாகுக.

இறைவன் திட்டப்படி எல்லாம் நிகழ்கின்றன என்பதுஉண்மை. மனிதன் அதை மறந்து தன்னிச்சைப்படி செயல்கள் நிகழ்கின்றன என்று எண்ணிக்கொள்கின்றான். இறைவனுடைய திட்டத்தில் தம்மை ஒப்படைத்துவிடுகின்றவர்களுக்கு அகங்காரம் இல்லை. தன்னுடைய இச்சைக்கு இடம் கொடுப்பவனுக்கு அகங்காரம் ஏற்படுகிறது. ஒரு மனிதன் ஓர் இடத்துக்கு மாலை நான்கு மணிக்குப் போய்ச் சேருவதாகத் திட்டம் போடுகின்றான். அவன் நான்கு மணிக்கு அந்த இடத்தைப் போய் அடையும் பஸ்ஸில் அமர்ந்துகொள்கின்றான். அப்படி அமர்ந்து கொள்வதோடு அவனுடைய வேலை முடிகிறது. அதன் பிறகு அங்குப்போய்ச் சேருவது அவனுடைய திட்டமன்று. அங்ஙனம் உலகுக்குப்பயன் தருகின்ற நற்காரியத்தைச் செய்யவேண்டுமென்று மனிதன் திட்டம் போடலாம். அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நேர்மை அல்லது இறைவனிடத்துத் தன்னை ஒப்படைத்துவிடவேண்டும். அப்பொழுது யாவும் இறைவன் திட்டப்படி நிகழும். அதற்கு மாறாகப் பொருளுக்காகவும், பேர் புகழுக்காகவும் ஒரு செயலில் ஈடுபடுகின்றவன் அச்செயலை நிறைவேற்ற விரும்புகிறான். அப்பொழுது தன் விருப்பத்தை இறைவனுடைய விருப்பம் என்றும் சொல்லுகின்றான். அது இறைவனுடைய விருப்பமன்று. மனம் தூய்மை அடைந்து ஆத்மீக ஞானம் உண்டாகும் வரையில் இறைவனுடைய திட்டம் என்ன என்பது நமக்கு விளங்காது. அக்ஞானத்தில் இருக்கின்ற நாம் நம்முடைய விருப்பத்தை இறைவனுடைய விருப்பம் என்று சொல்லிக் கொள்கின்றோம். நமக்கு ஞானோதயம் ஏற்பட்டு நம்முடைய ஜீவவியக்தியை ஒழித்துவிட்டுப் பரத்தோடு பூரணமாக ஒன்றுபடுகின்ற பொழுது இறைவனுடைய விருப்பத்தை நிறைவேற்றும் கருவிகளாக நாம் இருக்கின்றோம். அக்ஞானத்தில் இருக்கின்ற நாம் கடவுள் தம் விருப்பப்படி நம்மை நடாத்திச் செல்கின்றார் என்ற நம்பிக்கை உடையவர்களாக இருக்க வேண்டும். அக்ஞானத்தில் உள்ள நாம் "இறைவா, நீ அனைத்தையும் அறிவாய். உன்னுடைய இச்சை எது என்பதை நான் அறியேன். உன் இச்சைப்படி என்னைச் செயல்படுத்து. நான் உன் கையில் உள்ள கருவியாவேன்" என்று பிரார்த்திக்கவேண்டும். விவேகம் வரும்பொழுது அகங்காரத்தை ஒதுக்கிவிட்டு இறைவனிடத்து நம்மை ஒப்புவித்து விடவேண்டும். உலகத்தை இயக்கும் திட்டம்

அவனுடையதாக இருக்க நம்மை இயக்கும் திட்டம் அவனுக்குப் புறம்பாக எப்படி இருக்க முடியும்? அவன் திட்டப்படி எல்லாம் நிகழ்கின்றன என்பதை உணர்கின்றவளவு நாம் துன்பத்திலிருந்து விடுபடுகின்றோம்.

24. பரமண்டலத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே எங்களுக்கு வேண்டிய தினசரி உணவை இன்றைக்குத் தந்தருளும்.

இங்குத் தினசரி உணவு என்பது இறைவனுடைய அருளைக் குறிக்கிறது. இன்றைக்கு என்பது இந்த நொடியிலேயே என்று பொருள்படுகிறது. மனிதன் உடல், உள்ளம் ஆகிய இரண்டையும் வளர்க்கக் கடமைப்பட்டிருக்கின்றான். உடலை நல் உணவு வளர்க்கிறது. இறைவன் அருள் உள்ளத்தை வளர்க்கிறது. சான்றோர்கள் உணவைவிட இறைவன் அருளைப் பெரிதாகக் கருதுகிறார்கள். காந்தியடிகள் ''உணவில்லாமல் பல நாட்கள் வாழமுடியும். ஆனால் பிரார்த்தனை இல்லாது என்னால் ஒரு நாளையும் கழிக்க முடியாது" என்று பகர்ந்திருக்கின்றார். இளம்பெண் ஒருத்தி கடவுளைக் காணவேண்டுமென்ற வேட்கை உடையவளாக இருந்தாள். காட்டுக்குச் சென்றால் ஆங்குக் கடவுள் வருவார் என்று கேள்விப்பட்டாள். எனவே காட்டுக்குச் சென்று கடவுள் தரிசனத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தாள். கடவுள் ஆங்கு நிச்சயமாக வருவார், அவரைக் காணலாம் என்ற நம்பிக்கையுடன் அவள் அங்குக் காத்துக்கொண்டிருந்தாள். வயது வந்து அவள் குமாரியானாள். அப்பருவத்தையும் கடந்து அவள் வயது முதிர்ந்த கிழவியானாள். அவ்வளவு காலம் கடவுளைக் காணவேண்டும் என்ற ஆவலோடு அவள் அங்குக் காத்துக்கொண்டிருந்தாள். கடவுள் ஆங்கு வரவில்லை. ஆனால் அவள் நம்பிக்கையை இழந்துவிடாது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் அவர் வருகையை எதிர்பார்த்துக்கொண்டே இருந்தாள். கடைசியாகக் கடவுள் ஆங்கு வந்தார். அவள் கடவுள் தரிசனம் பெற்றுப் புனிதவதியானாள்.

அந்தப் பெண்ணின் விசுவாசம் நமக்கு வேண்டும். கடவுள் தரிசனம் எந்த க்ஷணத்தில் வேண்டுமென்றாலும் நமக்கு வாய்க்கும் என்று நாம் அறிந்திருக்கவேண்டும். ஆனால் அதே சமயத்தில் கடவுள் தரிசனத்திற்காக நாம் பொறுமையுடன் காத்திருக்கவேண்டும். உடனுக்குடன் கடவுள் அருளைப் பெறத் தகுதி உடையவர்கள் மிகமிகச் சிலரே ஆவர். நம்மில் பெரும்பாலோர் மனதில் ஏராளமான அழுக்குகள் இருக்கின்றன. நம்மிடம் ஏராளமான குறைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் நாம் போக்கியாகவேண்டும். நம்மை ஒழுங்குபடுத்துவதற்கு நாம் அதிகம் பாடுபட்டாகவேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்கு வேண்டியகாலம் எடுத்துக்கொள்ளாது நாம் கடவுளைக் காண முடியாது. பணிவுடையவர்கள் போன்று நம்மைக் காட்டிக்கொள்வது அகங்காரத்தின் ஒரு கூறாகும். நம்முடைய முயற்சியினாலும், இச்சையினாலும் கடவுளை அறிந்துகொள்ள முடியுமென்று நாம் செய்யும் கற்பனை அறியாமையின் விளைவு ஆகும். நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சியினால் மட்டும் நம்மைத் தூய்மைப்படுத்தி நாம் கடவுள் தரிசனம் பெற்றுவிட முடியாது. சாதனை என்ற விலை கொடுத்துக் கடவுளை யாரும் வாங்கிவிட முடியாது. கடவுள் காட்சிபெற்ற பெரியோர்கள் எல்லாரும் அவருடைய அருளால் தான் அவர் கிட்டுவார் என்று பகர்ந்துள்ளார்கள். "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற கோட்பாடு இக்கருத்தை விளக்குகிறது.

''சாஸ்திர ஆராய்ச்சி, நுண்ணறிவு, நூலறிவு ஆகிய இவற்றால் ஆத்ம சொரூபம் அறியப்படுவதன்று. அவர் அருளைப் பெறுகிறவர்கள்தாம் அவரை அறிய முடியும்." இங்ஙனம் கடோபநிஷதம் பேசுகிறது. ஆக, கடவுள் அருள் இருந்தால்தான் கடவுளைக் காண முடியும் என்ற உண்மை தெளிவாகின்றது.

கடவுள் அருள்புரிவதில் பக்ஷபாதம் உடையவராய் இருக்கிறாரா என்னும் ஐயம் எழுகிறது. பக்ஷபாதம் இல்லாவிடில் அவர் ஏன் ஒரு சிலருக்கு மட்டும் அருள்புரிய வேண்டும்? கடவுளிடம் பக்ஷபாதம் இல்லை. அவருடைய அருள் புண்ணியவான்கள் பாபிகள் ஆகிய எல்லார்க்கும் சமமாக வந்து கொண்டிருக்கிறது. மழைத்துளி எல்லா இடங்களிலும் விழுகிறது. ஆனால் பண்பட்ட நிலம்தான் அம்மழை நீரைப் பயன்படுத்தி நல்ல விளைவைக் கொடுக்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது: ''அருள்

காற்று ஓயாது வீசிக் கொண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்துவதற்குப் பாய்மரத் துணியை விரித்துக் கட்டவேண்டும்.'' கடவுள் அருள் ஓயாது நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய முயற்சியாலும், சாதனையாலும் நம்மை நாம் ஒழுங்குபடுத்தும் பொழுது அவ்வருள் நமக்குத் துணைபுரிகின்றது. விழிப்புடன் நாம் ஆழ்ந்து சாதனை செய்து கொண்டிருக்க வேண்டும். மனதை இறைவன்பால் திருப்புவதற்கு எல்லா விதமான முயற்சிகளும் எடுத்துக்கொள்ள வேண்டும். நம் மனது உண்மையில் இறை நாட்டம் கொண்டிருக்கிறதா? என்று அறியவேண்டும். நம் மனதே நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. சில பூஜா காரியங்களைச் செய்வதாலும், ஆலயத்துக்குச் செல்வதாலும், சில சமயச் சின்னங்களை அணிந்து கொள்வதாலும், பொதுநலச் சேவை செய்வதாலும், சாஸ்திர ஆராய்ச்சி பண்ணுவதாலும், சத்சங்கத்தில் இருப்பதாலும் நம் மனம் கடவுளை நினைத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. மேற்கூறிய செயல்கள் எல்லாம் மனதைத் தூய்மைப்படுத்துவதற்கு உதவுகின்றன. அதற்கு மேல் நம் மனது இறைவனைக் காணவேண்டும் என்ற ஆர்வம் கொள்ளவேண்டும். மனம் சதா அவருடைய நினைப்பிலேயே ஓடிக்கொண்டிருக்க வேண்டும். "உன்னை மறந்தால் உயிர் வாழேன்" என்று ஒரு பக்தர் பகர்கிறார். அந்த நிலை ஈசனுடைய காட்சி பெறுவதற்கு உற்ற நிலையாகிறது. மனதில் இறைவன் காட்சி பெறவேண்டும் என்ற ஆர்வம் எத்தகையதாக இருக்கிறதோ அதற்கு ஏற்பக் கடவுள் காட்சி வந்து அமைகிறது. நீரில் மூழ்கி இருப்பவன் சுவாசிப்பதற்குக் காற்று வேண்டுமென்று எவ்வளவு துடியாகத் துடிப்பானோ அவ்வளவு துடியாக நம் உள்ளம் கடவுளைக் காணவேண்டுமென்று துடிக்கவேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆறு மாதகாலம் உண்ணவும் உறங்கவும் செய்யாமல் கடவுள் காட்சி பெறவேண்டும் என்ற நாட்டத்திலேயே மூழ்கிக் கிடந்தார். மாலைப்பொழுதில் ஆலயத்தில் அடிக்கும் மணி ஓசையைக் கேட்டதும் அவருடைய உள்ளம் தாங்க முடியாத துயரத்துக்கு உள்ளாகிவிடும். "தாயே, என் வாழ்நாளில் மேலும் ஒரு நாள் கழிந்து விட்டது என்பதை இம்மணி ஓசை தெரிவிக்கின்றது. இப்படியே ஒவ்வொரு நாளும் உன் காட்சி பெறாது என் வாழ் நாள் முடிந்து போய் விடுமோ?'' என்று அலறி முகத்தைத் தரையில் தேய்த்துப் புலம்பித் தேம்பித் தேம்பி அழுவார். இதைத்தான் அருள் வேட்கை என்று பகரவேண்டும். இத்தகைய மனநிலை வேண்டுமென்றுதான் நாம் இறைவனிடம் பிரார்த்திக்கவேண்டும். இந்த மனநிலையை இப்பொழுதே எங்களுக்குத் தா. என்று ஏசுநாதர் இப்பிரார்த்தனையில் விண்ணப்பிக்கின்றார்.

இந்த மனநிலையைப் பெறுவதற்கு நாம் தீவிரமாகச் சாதனை செய்து கொண்டே இருக்கவேண்டும். அம்மனநிலை எப்பொழுது வருமென்று நாம் சொல்லமுடியாது. நம் மனது பக்குவமாவது இறைவனுக்குத் தெரியும். அது அவருடைய அருளைப் பெறுவதற்கு ஏற்ற பக்குவத்தை அடைந்துவிட்டால் அவருடைய அருள் உடனே வந்து விடுகின்றது. பொறுமையாக நாம் சாதனை செய்து கொண்டு அவருடைய அருளுக்குக் காத்திருக்க வேண்டும். உலகப்பற்று உள்ளத்திலிருந்து அறவே ஒழியும் பொழுதுதான் இறைவன் அருள் புரிகின்றார். பற்றுள்ள பொருளிடம்தான் மனம் ஓடும். உலகப்பற்று மனதில் இருக்கும்பொழுது மனம் தெய்வச் சிந்தனை செய்யாது. எனவே உலகப் பற்று ஒழிவதற்கு நாம் சாதனைகள் புரியவேண்டும். பலர் உலகப்பற்றை ஒழிப்பதற்குப் பதிலாக உலகப்பற்றை வளர்ப்பதற்குச்செயல்கள் புரிகிறார்கள். அத்தகையவர்கள் கடவுள் காட்சி பெற நீண்டகாலம் எடுத்துக் கொள்கிறார்கள். "எத்தொழிலைச் செய்தாலும் ஏது அவஸ்தைப்பட்டாலும் முக்தர் மனம் இருக்கும் மோனத்தே'' என்ற அருள் வாக்கைச் செயல் முறைக்குக் கொண்டு வருவதற்கு நாம் முயல வேண்டும். உலகப்பற்று உள்ளத்திலிருந்து அகன்று மனம் தெய்வத்தின்பால் திரும்பிக் கொண்டிருக்கின்றதா? என்பதை நாம் கண்காணித்துக்கொண்டே இருக்கவேண்டும். இதை நாம் சரியாகச் செய்தால் ஈசனுடைய அருளுக்கு நாம் பாத்திரமாகின்றோம். ஈசன் கருணை கூர்ந்து நம் உள்ளம் அவருடைய அருளுக்குப் பாத்திரமாவதற்குத் துணைபுரிவாராக.

அவனன்றி அணுவும் அசையாது

(255ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண நிலையில் பேச்சுக்கு அதிக இடம் உண்டு. உயர்நிலைக்குப் போகப்போகப் பேச்சு குறைகிறது. அதீத நிலையில் மௌனம் நிலவுகிறது. கல்லால மரத்தின்கீழ் தென்முகமாக வீற்றிருக்கும் தக்ஷிணாமூர்த்தி மௌனமாகவிருந்து தத்துவத்தைப் புகட்டுகிறார். அவர் கையில் சின்முத்திரையைத் தாங்கி இருக்கின்றார். அச்சின் முத்திரை மூலம் தத்துவம் முழுவதையும் புகட்டிவிடுகின்றார். அவர் புகட்டும் மேலாம் பாடத்தைச் சனகர், சனந்தர், சனாதனர், சனத்குமாரர் என்னும் பிரம்மாவின் நான்கு மானச புத்திரர்கள் கேட்டுப் பொருள் உணர்ந்து அப்பொருளில் மூழ்கி இருக்கின்றார்கள். அப்படி அவர் புகட்டும் மௌனோபதேசம் நம் போன்றவர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாததாக இருக்கிறது. தத்துவத்தைப் புகட்டுகின்ற குருவும், அதைக்கேட்கின்ற சிஷ்யர்களும் மௌனமாகவிருந்து செயல்பட்டு வருகிறார்கள். சாதாரண நிலையில் இருக்கின்ற நாம் தத்துவத்தைக் குறித்து நமக்கிடையில் சர்ச்சை செய்து கொண்டிருக்கின்றோம். பேச்சு பலமாகவிருந்த பொழுதிலும் தத்துவத்தை முழுதும் உணராதவர்களாக இருக்கின்றோம்.

ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் சிஷ்யர்களுக்கிடையில் ஆத்ம விசாரம் செய்வதற்கு அனுமதி தந்தார். அப்படி ஆத்ம விசாரம் செய்தபொழுது ஒவ்வொருவரும் தங்கள் புத்தி சாதுரியத்தைக் காட்டித்தர முயன்றார்கள். உண்மையை அறிந்துகொள்வதற்கு அவர்கள் மறந்து விட்டார்கள். விவேகானந்த சுவாமிகளும், ஸ்ரீராமகிருஷ்ணரின் மற்றச் சிஷ்யர்களும் கடவுள் கொள்கையைப்பற்றி ஒரு சமயம் சம்வாதம் செய்தார்கள். கடவுளை மறுத்துப் பேசவேண்டியது விவேகானந்தருடைய கடமையாக அமைந்தது. கடவுள் உண்டு என்று நிலைநாட்டவேண்டியது மற்றச் சிஷ்யர்களுடைய கடமையாக இருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்களுக்கு நடுவராக இருந்தார். கடவுள் இல்லை என்பதை நிலைநாட்டுவதற்கு ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் யுக்திபூர்வமாகப் பல சான்றுகள் கொடுத்துப் பேசினார். அவர் எடுத்துக்காட்டிய நியாயங்களை யாவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை உருவாயிற்று. முடிவு சொல்லுவதற்கு முன்பு ஸ்ரீ ராமகிருஷ்ணர் அறையை விட்டு வெளியே சென்றார். அறைக்கு வெளியில் ஓர் அருமையான காட்சியைக் கண்டார். விசாலமான சாக்கடை ஒன்று கங்கையில் கலந்துகொண்டிருந்தது. சாக்கடையின் எதிர்க்கரையில் ஒரு பிணத்தைப் பல நாய்கள் மௌனமுடன் இன்பமாகப் புசித்துக்கொண்டிருந்தன. சாக்கடையைக் கடந்து எதிர்க்கரைக்குப் போக முடியாத நாய்கள் அவற்றைப் பார்த்துக் குலைத்துக்கொண்டிருந்தன. அக்காட்சியைக் காண்பதற்குத் தம்சிஷ்யர்கள் அனைவரையும் அறையைவிட்டு வெளியே வரும்படி அவர் அழைத்தார். அக்காட்சியைக் காணும்படி அவர்களுக்குக் கூறினார். அவர்கள் அதைப் பார்த்ததும் அறைக்குள் அவர்களை அழைத்துச் சென்றார். அக்காட்சியின் பொருள் அவர்களுக்கு விளங்கியதா? என்று கேட்டார். விவேகானந்தரைத் தவிர மற்றவர்கள் வாய்பேசாதிருந்தார்கள். விவேகானந்தர் தலைகுனிந்தவராகப் பகர்ந்ததாவது: "எதிர்க்கரையில் பிணத்தைப் புசித்துக்கொண்டிருந்த நாய்கள் பேரின்பத்தை அனுபவிக்கும் அனுபூதிமான்களுக்குச்சான்றாக அமைகின்றன. சாக்கடையைக் கடந்து அக்கரைக்குப் போகமுடியாது குலைத்துக்கொண்டிருந்த நாய்கள் தத்துவத்தை அனுபவத்தில் அறியாது வாயால் பிதற்றிக்கொண்டிருக்கின்ற மக்களுக்குச் சான்றாகின்றன. நாங்கள் இப்பொழுது சர்ச்சை செய்தது அக்குலைக்கும் நாய்களுக்கு நிகராகின்றது. தத்துவத்தை அனுபவிக்க முடியாதவர்களாக நாங்கள் இருக்கின்றோம்." தேனீ பூவைச் சுற்றி வட்டமிட்டு ரீங்காரம் செய்துகொண்டிருக்கும். அது மலருக்குள் சென்று தேனை அருந்த ஆரம்பித்து விட்டால் ரீங்காரம் செய்வது நின்றுவிடும். அங்ஙனம் பேரின்பத்தை அடையும் வரையில் நாம் வாயால் பிதற்றிக்கொண்டிருப்போம். பேரின்பத்தை அனுபவிக்க ஆரம்பித்து விட்டால் பேச்சு அறவே நின்றுவிடுகின்றது. பேரின்

பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற பெரும் விருப்பம்தான் நம்மைச் செயலில் உந்திக் கொண்டிருக்கிறது.

பேரின்பத்தை அனுபவிப்பதற்கு முன்பு மனது என்னும் மாயை நம்மை ஆட்டிப்படைக்கின்றது. மனது என்பது இன்னது என்பதே விளங்காததாக இருக்கிறது. இல்லை என்று சொல்வதற்கு முடியாமலும் இருக்கிறது என்று சொல்லுவதற்கு முடியாமலும் ஒருசக்தி நம்மை ஆட்டிப்படைத்து வருகிறது. அந்தச் சக்தி தான் நம் மனது. மனதற்ற நிலையில் பரிசுத்த நிலை அல்லது தெய்வீக நிலை இருக்கிறது. அதைத் தாயுமானவர் 'மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்' என்று பகர்கின்றார். மன திருக்கும் வரையில் துன்பங்களும் கவலைகளும் நம்மைப் பற்றுகின்றன. சரீரம் அழிகின்ற பொழுதும் மனது அழிவதில்லை. இப்பொழு துள்ள சரீரம் அழிந்த பிறகு மனம் மற்றொரு சரீரத்தை எடுத்துக்கொண்டு செயல்புரிகிறது. ஆகவே மனமிருக்கும் வரையில் நமக்கு விடுதலை அல்லது ஓய்வு இல்லை. மனம் ஒழியும் பொழுது தான் நமக்கு விடுதலை அல்லது பூரண சுதந்திரம் கிடைக்கிறது. மனது செல்லும் இடங்களிலெல்லாம் இன்பதுன்பங்களை வளர்த்துக்கொண்டே இருக்கிறது. மனதை நாம் எதனிடத்தில் வைப்பதில்லையோ அதனிடத்திலிருந்து நமக்கு இன்பமும் துன்பமும் இல்லை. இதனை வள்ளுவர்

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

என்று பகர்ந்துள்ளார்.

மனம் மூன்று குணங்களுக்கு வசப்பட்டிருக்கிறது. தமோ குணத்துக்கு வசப்பட்ட மனது செயலற்றுக் கிடக்கிறது. நம்முடைய முன்னேற்றத்துக்கு அது பயன்படுவதில்லை. ரஜோ குணத்துக்கு வசப்பட்ட மனது ஆசை வசப்பட்டு நம்மைச் செயல்புரியும்படி தூண்டுகிறது. மனதில் குழப்பத்தையும், கொந்தளிப்பையும், இன்பத்தையும், துன்பத்தையும் உண்டு பண்ணிக் கொண்டிருப்பது ரஜோகுண மனமே ஆகும். சத்துவ குணத்துக்கு வசப்பட்ட மனது நம்மைப் பெருநிலைக்கு எடுத்துச் செல்கிறது. பெருநிலை அடைவதற்குரிய வழியைக் காட்டித் தருவதோடு அதன் செயல் முடிகிறது. பேரின்பம் என்னும் பெருநிலையில் சத்துவ மனத்துக்கும் இடமில்லை.

தமோகுணம், ரஜோ குணம், சத்துவகுணம் உடைய மனத்தின் செயலை ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஓர் உபமானத்தின் மூலம் விளக்குகின்றார். வழிப் போக்கன் ஒருவன் வனத்தில் மூன்று திருடர்களிடம் அகப்பட்டுக்கொண்டான். அம் மூன்று திருடர்களும் அவனிடமிருந்த பொருளைப் பறித்துக்கொண்டனர். அவனைக் கொன்றுபோட்டுவிடலாம் என்று ஒருவன் கூறினன். பாபம்! அவனைக் கொல்வதால் நமக்கு என்ன லாபம்? அவன் கை கால்களைக் கட்டித் துன்புறும்படி செய்துவிட்டுப் போய் விடலாம் என்று மற்றவன் கூறினன். அவ்விருவரும் சென்ற பிறகு மூன்றாமவன் வழிப்போக்கனுடைய கை கால்களைக் கட்டியிருந்த கட்டுக்களை எல்லாம் அவிழ்த்துவிட்டு அவன் போய்ச் சேரவேண்டிய ஊருக்கும் வழிகாட்டினன். அவன் போய்ச் சேரவேண்டிய ஊர் காட்சியில் தென்படும் வரையில் அவன் காட்டைக் கடப்பதற்கு வழிகாட்டியாகவும், பாதுகாப்பாகவும் அவனுடன் சென்றான். ஆபத்துக்களை எல்லாம் கடந்து சென்று ஊர் காட்சியில் தென்பட்டதும் அவனைச் சுகமாக அங்குப் போய்ச் சேரும்படி அனுப்பி வைத்தான். அவ்வளவு தூரம் உதவி செய்த அவனைத் தன்னுடன் வீட்டுக்கு வரும்படி வழிப்போக்கன் அழைத்தான். ஊருக்குள் வந்தால் போலீஸ்காரர்கள் பிடித்துக்கொள்வார்கள் என்று அவனுடன் வீட்டுக்குப்போக அந்த மூன்றாம் திருடன் மறுத்துவிட்டான். இவ் உபமானத்தில் வரும் வழிப்போக்கன் நமக்குச் சான்று ஆகின்றான். காடு என்பது இவ்வுலகம் ஆகும். மூன்று திருடர்கள் என்பவர்கள் தமோகுணம், ரஜோகுணம், சத்துவகுணம் என்பன ஆகும். அபகரித்துக் கொண்ட செல்வம் ஆன்மீகமாகும். கொன்று விடலாம் என்று சொன்ன திருடன் நம்மிடத்திலுள்ள தமோகுணமாகும். தமோகுணத்தில் மூழ்கி இருக்கும்பொழுது நமக்கு எவ்வித முன்னேற்றமும் இல்லை. கை கால்களைக் கட்டிப்போட்டுத் துன்புறுத்திய திருடன் ரஜோ குணமாகும். நம்மிடமுள்ள ரஜோகுண மனமே நாம் படுகின்ற துன்பங்களுக்கு எல்லாம் காரணமாகும். கை கால்களில் இருந்த கட்டுக்

களை அவிழ்த்துப் பாதுகாப்பாகத் துணை சென்று போய்ச் சேரவேண்டிய ஊரைக் காட்டித் தந்த திருடன் சத்துவ குணமாகும். சத்துவ குணம் நம்மிடமுள்ள உலகபந்தங்களையெல்லாம் அறுத்து வீடு பேற்றினுக்கு வழிகாட்டி உலக வாழ்க்கையில் நமக்குப் பாதுகாப்பாக இருக்கின்றது. ஆனால் அத்திருடன் ஊருக்கு வர மாட்டேன் என்று சொன்னது போன்று முக்தி நிலைக்குச் சத்துவகுணமும் வருவதில்லை. முக்தி நிலை மனதற்ற நிலையாகும். ஆகையால்தான் 'மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்' என்று தாயுமானவர் பகர்கின்றார்.

மனதுக்குக் கடினத்தன்மை என்றும், இரக்கத்தன்மை என்றும் இரண்டு நிலைகள் இருக்கின்றன. ஈவு இரக்கம் இல்லாத மனது கடினத்தன்மை உடைய மனது ஆகிறது. இரக்கமுடைய மனது உயிர்களிடத்தில் அன்பும், தெய்வத்தினிடத்தில் உருகுதலும் செய்கிறது. கடினமனம் படைத்தவனைக் கருமி என்றும், கொடியவன் என்றும் பகர்கிறோம். இரக்க மனம் படைத்தவனைக் கருணாகரன் என்றும், நல்லவன் என்றும் பகர்கின்றோம். சான்றோர்களுடைய மனது இளகிய மனதாக இருக்கிறது. சிற்றுயிர்களிடத்தும் அவர்கள் பேரிரக்கம் காட்டுகின்றார்கள். சிற்றுயிர்கள் படும் துன்பங்களை அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள். ஆட்டுக்குட்டி வேதனை அடைந்ததைப் பார்த்துப் புத்தருடைய உள்ளம் அதன்மீது பேரிரக்கம்கொண்டது. வாடிய பயிரைக் கண்டபோது வள்ளலார் உள்ளம் வாடியது. அத்தகைய பேருள்ளம் படைத்தவர்கள் யாரோ சிலர் இருக்கிறார்கள். மனிதனையே கொலை செய்கின்ற வன்மை உள்ளம் படைத்தவர்களும் இருக்கிறார்கள். கொடுமை மனது வாய்ந்த மக்கள் கொடுமை செய்வதற்குக் கூசுவதில்லை. உலக நிலையில் சிறிது வன்மைக்கும் இடம் உண்டு. வன்மையான உள்ளம் படைத்தவர்களிடம் சிறிது வன்மையைக் காட்டித்தான் ஆகவேண்டும். இரக்கம் காட்டவேண்டிய இடத்தில் இரக்கம் காட்ட வேண்டும். உலக வாழ்வில் வன்மையும் இரக்கமும் உயிர்களைச் செயல்படுத்தி வருகின்றன. ஆனால் பாரமார்த்திக நிலையில் வன்மைக்கோ, இரக்கத்துக்கோ இடம் இல்லை. வன்மையும், இரக்கமும் கடந்தநிலை ஆகும் அது. பாரமார்த்திக நிலையில் பேதத்துக்கு இடம் இல்லை. மனம் ஒழிந்த நிலையில் பேதமும் ஒழிந்துபோகிறது. மனம் தோற்றத்துக்கு வரும்பொழுதுதான் பேதமும் வடிவெடுக்கிறது.

எத்தனை மனிதர்களோ அத்தனை மனங்கள் இருக்கின்றன. மனதுக்கேற்ப உலகக் காட்சி உண்டாகிறது. ஒவ்வொரு மனிதனும் தன் மனதுக்கேற்ற உலகத்தைக் காண்கின்றான். நல்ல மனம் படைத்தவர்களுக்கு உலகம் நல்லதாகத் தோன்றுகிறது. கெட்ட மனம் படைத்தவர்களுக்கு உலகம் கேடு உடையதாகத் தோன்றுகிறது. ஒரு சமயம் துரியோதனனும் தர்மரும் உலகத்தில் தாங்கள் கண்ட காட்சியை வெளியிட்டார்கள். துரியோதனன் உலக முழுவதிலும் நல்லவர்கள் ஒருவரையும் காணவில்லை. தருமர் அதே உலகத்தில் கெட்டவர்கள் ஒருவரையும் கண்டுபிடிக்கமுடியவில்லை. நல்ல மனம் படைத்த தர்மருக்கு உலகத்தில் யாவரும் நல்லவர்களாகவே தென்பட்டார்கள். கெட்ட மனம் படைத்திருந்த துரியோதனனுக்கு உலகத்தில் யாவரும் கெட்டவர்களாகவே தென்பட்டார்கள். ஆகவே ஒருவருக்கு நலமாக இருப்பது மற்றவருக்குக் கேடாகத் தென்படுகிறது. ஒவ்வொருவரும் அவரவர்கள் மனநிலைக்கேற்ற பிரகாரம் உலகத்தைக் காண்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்கள் மனதுக்கேற்ற உலகைப் படைக்கின்றார்கள். எல்லா மனங்களும் சேர்ந்த ஒரு தொகுப்புக்கு மஹத் என்று பெயர். அப்பெரிய மனதில் நம்முடைய சிறிய மனங்களெல்லாம் அடங்கிவிடுகின்றன. ஆகையால் வேற்றுமைகளுக்கிடையில் ஓர் ஒற்றுமையைக் காண்கின்றோம். ஒருவருக்கு யானையாகத் தென்படுவது எல்லார்க்கும் யானையாகத் தென்படுகிறது. மஹத் என்னும் பெரிய மனதில் நம் சிறிய மனங்களெல்லாம் அடங்கி இருப்பதே அதற்குக் காரணம். இனி, அவரவர்கள் படைத்திருக்கிற மனநிலைக்கேற்ப ஒரு பொருளினிடத்து நல்லதையும் காண்கிறார்கள்; கெட்டதையும் காண்கிறார்கள். அதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் தென்னாட்டிற்கு யாத்திரை வந்தார். அந்த யாத்திரையில் அவரும், அவருடைய கூட்டத்தினரும் ஒரு வனத்தைக்

கடந்து வந்தார்கள். வழி முழுவதும் பக்திப் பரவசநிலையில் இருந்துகொண்டு பஜனை பாடிக்கொண்டு வந்தார்கள். வனத்தில் வந்த பொழுதும் அவர்கள் பஜனையில் மூழ்கி இருந்தனர். அப்பஜனையைக் கேட்ட புலியினிடத்து நல் இயல்பு வெளித்தோன்ற ஆரம்பித்தது. அது அக்கூட்டத்தில் சேர்ந்துகொண்டு வனத்தைக் கடக்கும் வரையில் முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கிக்கொண்டு அவர்களோடு இன்பமாக ஆடியது. ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரிடமிருந்த நல்லியல்பு அப்புலியினிடத்திருந்த நல்லியல்பைத் தூண்டியது. நாம் புலியைப் பார்க்கும்பொழுது அதைக் கொல்லவேண்டும் என்று நினைக்கின்றோம். புலி நம்மைக்கொல்ல வேண்டும் என்று நினைத்து நம்மீது பாய்கிறது.

மனத்தின் ஒரு கூறு அகங்காரமாக நம்மிடத்து வடிவெடுக்கிறது. மனிதன் அகங்காரத்தினால் செயல்களுக்குத் தன்னைக் கர்த்தாவாகக் கருதுகின்றான். ஈசனுடைய செயலை அகங்காரம் படைத்த மனிதன் தன்னுடையதாக எண்ணுகின்றான். போர்க்களத்துக்கு வந்தவுடன் அர்ஜுனன் உற்றார் உறவினர்களையும், குருமார்களையும் தான் கொல்லுவதாக நினைத்துச் சோர்வடைகின்றான். கண்ணன் விஸ்வரூப தரிசனம் காட்டி அவர்களைக் கொல்லுவது அர்ஜுனன் அல்லன் என்பதைத் தெளிவாக்குகின்றார். கண்ணனுடைய திட்டத்தால் அவையாவும் நிகழ்கின்றன என்பதையும் கண்ணனிடத்தில் தான் ஒரு கருவியாக இருப்பதையும் அர்ஜுனன் அறிகின்றபொழுது தான் அவனிடமுள்ள கர்த்ருத்வம் ஒழிகிறது.

உயிர்கள் இயல்பை வெளிப்படுத்துவதற்குச் செயல்புரிகின்றன. ஈசன் தம் திட்டத்தில் உயிர்களைத் தங்களுடைய இயல்பை வெளிப்படுத்துவதற்கு இடம் தருகின்றார். இயல்புக்கு வசப்பட்டு உயிர்கள் செயல் புரியும் பொழுது இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றன. இன்ப துன்பங்கள் மூலம் உயிர்கள் பாடம் கற்றுக் கொள்கின்றன. இயல்புக்கு வசப்பட்டுச் செயல்படும்பொழுது இன்ப துன்பங்களை அனுபவித்தே ஆகவேண்டும். இயல்பை வெல்லுகின்ற பொழுதுதான் செயலைக் கடப்பது சாத்தியமாகிறது. இயல்பை வென்றவர்கள் செயலுக்குக் கர்த்தாக்களாவதில்லை. அவர்கள் மூலம் நிகழ்கின்ற செயல்கள் இறைவனுடைய திட்டத்துக்கு ஒத்து இருக்கின்றன. இறைவனுடைய திட்டத்தில் நலத்துக்கோ, கேட்டுக்கோ இடமில்லை. மழை பொழிகின்ற செயல் நலமா அல்லதுகேடா என்னும் கேள்வி எழுகிறது. விவசாயி மழை பொழிவது பயிருக்கு நல்லது என்று எண்ணுகின்றான். எண்ணெய் ஆட்டுவதற்காக எள் காய வைத்துக் கொண்டிருக்கின்ற செக்கானுக்கு மழை பொழிவது கேடாகத் தோன்றுகிறது. மழையைப் பொறுத்த வரையில் அது நலமுமன்று, கேடுமன்று. ஆனால் அதை ஒருவர் நலமாக எடுத்துக் கொள்கிறார்; மற்றொருவர் கேடாக எடுத்துக்கொள்கிறார். பசியைத் துன்பம் என்று சொல்லுகிறோம். ஆனால் பசி ஏற்படாவிட்டாலும் துன்பம் உண்டு. பசி ஏற்படவில்லையெனில் உடலில் நோய் இருக்கிறது என்பது பொருள். பசித்துன்பம் உடல் ஆரோக்கியத்தைக் குறிக்கிறது. பசி இருந்தாலும் துன்பமாக இருக்கிறது. பசி ஏற்படாவிட்டாலும் துன்பமாக இருக்கிறது. எனவே பசியை நலமென்றும் சொல்ல முடியவில்லை; கேடு என்றும் சொல்ல முடியவில்லை. மனதை உடல் சம்பந்தமான விஷயங்களிலிருந்து பிரித்து எடுத்துப் பரநாட்டத்தில் ஈடுபாடு உடையதாக ஆக்கவேண்டும். பரநாட்டம் உடையவர்களாக நம்மை ஆக்கிக் கொள்வதுதான் நமக்கு நலம்தரும்.

பொறாமை ஒரு பொல்லாத குணமாகும். துரியோதனன் பொறாமைக்கு வசப்பட்டுப் பாண்டவர்களுக்குக் கொடுமை செய்தான். பொறாமைதான் அவனைச் செயலில் தூண்டியது. அவனுக்கு நேர்மாறாகப் பாண்டவர்கள் பொறுமை வடிவெடுத்தவர்களாக இருந்தார்கள். பாண்டவர்களுக்குள்ளும் தர்மர் பொறுமையின் வடிவமாக இருந்தார். பொறுமையைக்கடைப்பிடித்துப் பாண்டவர்கள் செயலில் ஈடுபட்டார்கள். பொறுமை, பொறாமை ஆகிய இவ்விரண்டிலிருந்தும் விடுபட்டவராகக் கண்ணன் செயல் புரிந்தார். மக்கள் தங்களிடமுள்ள இயல்பால் உந்தப்பட்டுச் செயல்புரிகிறார்கள். ஆனால் தெய்வமோ எல்லாச் செயல்களையும் விளையாட்டுப் போன்று செய்து வருகிறார். மனதை நடுநிலையில் வைத்துக்கொண்டு

செயல் புரிபவர்கள் நலம், கேடு, பொறை, பொறுமை, இன்பம், துன்பம் ஆகிய இவைகளுக்கு வசப்படாமல் இறைவனுடைய திட்டப்படி செயல் புரிபவர்களாகிறார்கள்.

வயதிலும் அனுபவத்திலும் குறைந்தவர்களாக இருப்பவர்களைச் சிறியவர்கள் என்றும் அவ்விரண்டிலும் உயர்ந்திருப்பவர்களைப் பெரியவர்கள் என்றும் பகர்கிறோம். சிறியவர்கள் பெரியவர்களாக ஆவதற்குப் பாடுபடுகின்றனர். ஆத்மபோதம் தலையெடுக்காத பொழுது சிறியவர்கள் பெரியவர்கள் என்ற வேறுபாட்டுக்கு இடமுண்டு. ஆத்மபோதம் யாரிடத்தில் தலையெடுக்கிறதோ அவர்கள் வயதையும் அனுபவத்தையும் கடந்து பெருநிலையை அடைந்து விடுகிறார்கள். சம்பந்தர் மூன்று வயதில் ஞானம் பெற்றார். வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்திருந்த அப்பர் அவருக்குப் பல்லக்குச் சுமந்தார். அவர்கள் இருவரும் எவ்வித வேறுபாடின்றி ஒருவர்க்கொருவர் அன்பும் மரியாதையும் காட்டிக்கொண்டார்கள். அங்ஙனமே ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிஷ்யர்களுள் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளும், ஸ்ரீமத் பிரம்மானந்த சுவாமிகளும் ஒருவர்க்கொருவர் அன்பும் மரியாதையும் காட்டினார்கள். பரபோதம் பெற்றவர்களுக்கிடையில் சிறியவர்கள் பெரியவர்கள் என்ற வேற்றுமை இல்லை. வேற்றுமைகளைக் கடந்த நிலையில் இருப்பவர்கள் இறைவன் திட்டத்தை உணர்ந்து அவருடைய மகிமையில் திளைத்திருக்கின்றார்கள். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற கோட்பாடு அவர்களுக்கு முற்றும் விளங்குகிறது. வேற்றுமையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் நாம் அப்பெருநிலையை அடையும்வரையில் சுக துக்கங்களுக்கு ஆளாகி ஆக வேண்டும்.

கர்மம் செய்துதான் கர்மத்தைக் கடந்து போக வேண்டும். மனதிலுள்ள ஆசாபாசங்கள் கர்மத்தின்கண் நம்மைத் தூண்டி வருகின்றன. ஆசாபாசங்களை வளர்ப்பதற்கு நாம் கர்மம் செய்யும்பொழுது அது நம் செயல் ஆகிறது ஆசாபாசங்களை அழிப்பதற்குத் திட்டம் போட்டுக் கர்மம் செய்யும் பொழுது அது சாதனையாகிறது. ஆசாபாசங்கள் அழிந்தபிறகு நம்மிடத்தில் கர்மம் நிகழ்ந்தால் அது நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. அப்பொழுது நம் மூலம் நிகழ்கின்ற கர்மம் இறைவனுடைய செயல் ஆகிறது. இறைவனுடைய திட்டத்தை நிறைவேற்ற வருகிறவர்கள் அவதார புருஷர்களாகிறார்கள். அவர்கள் திட்டம் போட்டு எச்செயலையும் செய்வதில்லை. வாழ்க்கையில் வந்து அமைவதை அமைதியோடு ஏற்று மகிழ்ச்சியோடு செயல் புரிகிறார்கள். அப்படி அவர்கள் செய்கின்ற செயல் உலக நலனை வந்துமுடிகின்றது இராமன் வாழ்க்கையில் இதை நாம் காண்கின்றோம். ராமன் காட்டுக்குப்போனது இறைவன் திட்டமாகும். தசரதன் ராமனுக்கு முடிசூட்ட விரும்பினான். அயோத்தி மக்கள் அனைவரும் ராமன் முடிசூட வேண்டுமென்று பெரு விருப்பம் கொண்டிருந்தனர். ராமன் அதற்கு எத்திட்டமும் போடவில்லை. உடனே நிலைமை மாறி அமைகிறது. முடிசூட இருந்த ராமனுக்குக் கானகம் செல்ல வேண்டுமென்ற உத்தரவு வருகிறது. இராமனுக்கு அந்நிலை ஏற்படுவதைத் தாங்கமுடியாமல் தசரதன் உயிர் துறந்தான். இராமனுக்கு அந்நிலை ஏற்பட்டதை அறிந்த அயோத்தி மக்கள் துயரத்தில் மூழ்கினார்கள். இராமன் எவ்வித மன விகாரமுமின்றி வனம் செல்லும் கடமையை ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றுகின்றான். வனத்தில் படிப்படியாக இராவண சம்ஹாரத்துக்கு உந்தப்பட்டு இராமன் அதைச் செய்து முடிக்கின்றான்.

இராமன் மகன் என்ற முறையிலும், கணவன் என்ற முறையிலும், அரசன் என்ற முறையிலும் அவ்வப்பொழுது வந்த கடமைகளைச் செய்து முடிக்கின்றான். அவன் தானாகத் திட்டம் போட்டு எந்தச் செயலிலும் ஈடுபடவில்லை. ஆகையால் எல்லாச் செயல்களையும் விருப்பு வெறுப்பின்றி ராமன் செய்து முடிக்கின்றான். இராமன் மூலம் ராவண சம்ஹாரம் என்னும் இறைவன் திட்டம் நிறைவேறுகிறது. அதற்கிடையில் ராமன் தன் வாழ்க்கையில் மக்களுக்குரிய அறநெறி இன்னதென்பதை விளக்கிக் காட்டுகின்றான். இறைவன் திட்டத்தை நிறைவேற்றுகின்றவர்கள் தங்களை அறியாது உலகுக்கு அறநெறியைக் காட்டித் தருகிறார்கள். அறநெறிக்கு உட்பட்டு வாழ்பவர்கள் 'அவனன்றி அணுவும் அசையாது' என்னும் கோட்பாட்டை அறிகிறார்கள். (முற்றும்)

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

14. வீட்டு ஈயும் லௌகிக மனிதனும்

மனித குலத்திற்குப் பயன்தரும் பூச்சிகளில் தேனியும் (Honey Bee) ஒன்று ஆகும். தேனிக்களில் மூன்று இனங்கள் உண்டு. அவை ராணி ஈ, வேலைக்கார ஈ, ஆண் ஈ என்பனவாம். தேன் கூட்டின் பணிகளைச் செய்வது வேலைக்கார ஈக்களின் வேலை. இனப்பெருக்கத்தில் ஈடுபடுவது ஆண் ஈயின் வேலை. முட்டையிட்டுத் தன் கூட்டைப் பலப்படுத்துவது ராணி ஈயின் வேலையாகும். தேனிக்களிலிருந்து நமக்குத் தேன், மெழுகு முதலியன கிடைக்கின்றன. அயல் மகரந்தச் சேர்க்கைக்குப் பேருதவிபுரிவது தேனிக்களேயாகும். அயல் மகரந்தச் சேர்க்கையால் தரமுள்ள விதைகள், காய்கள் பழங்கள் முதலியன கிடைக்கின்றன.

சாதாரணமாக வீடுகளில் காணப்படும் ஈ வீட்டு ஈ (House Fly) எனப்படும். இதனால் மனிதகுலத்திற்கு நன்மை ஏதும் இல்லாவிட்டாலும் தீமைகள் அதிகம் அசுத்தமான கிருமிகள் நிறைந்த இடத்தில் உட்கார்ந்து அதன் பிறகு உணவுப் பண்டங்கள்மீதும் இவ் ஈக்கள் உட்காருவதால் நோய்கள் பரவுகின்றன. அதனாலேயன்றோ ஈ மொய்த்த பண்டங்களை உண்ணக்கூடாதென்று நாம் சிறுவர்களுக்குப் போதிக்கிறோம். தேனி, வீட்டு ஈ என்ற இரண்டுமே ஒரே வகையைச் சேர்ந்த பூச்சிகள் எனினும் இரண்டும் இயல்பாலும் செயலாலும் வேறுபடுகின்றன. தேனி அழுக்குப்படிந்த இடத்தில் அமராது. தன் அடையில் அமரும் அல்லது புஷ்பத்தில் அமரும். ஆனால் வீட்டு ஈ ஒருவேளை தூய உணவில் அமரும்; மறு வேளை கிருமிகள் நிறைந்த இடத்தில் அமரும்.

இறைவனுடைய மெய்யன்பர்களைத்தேனிக்கு ஒப்பாகக்கொள்ளலாம். உலகப்பற்றையும், கடவுள் பக்தியையும் சேர்த்து அனுஷ்டிக்க முயலுபவர்களை வீட்டு ஈக்கு ஒப்பாகக் கொள்ளலாம். புண்ணிய நதிகள் ஏழிலும் ஏராளமாக நீர்ப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தாலும் பூமியில்படிந்த நீரைச் சாதகப் பறவை அருந்தாமல் மழை நீரைமட்டுமே அருந்துவது போன்று உலக இன்பங்கள் ஏராளமாக இருந்தாலும் அவற்றைக் கடவுளின் மெய்யன்பர்கள் லட்சியம் செய்யாமல் இறைவனது சிந்தனையிலேயே மூழ்கியிருப்பார்கள். அவர்கள் மற்றவர்களைப் போன்று பொருளை நாடித்திரியாமல் இறைவனது அருளைமட்டுமே நாடிநிற்பர். உலக விஷயங்களில் தங்கள் மனதை அவர்கள் ஒருபொழுதும் திருப்புவதில்லை. அவர்கள் தேனிக்கு நிகரானவர்கள். உத்தியோகம் ஒன்றும் கிடைக்கப்பெறாதவன் காவியுடையணிந்து காசிக்குச் சென்றான். அங்கு ஓர் உத்தியோகமும் கிடைத்தது. காவியுடை கலைந்தது. வீட்டிற்குத் திரும்பி வருகிறேன் என்று கடிதம் எழுதினான் அம்மனிதன். அவன் வீட்டு ஈக்கு நிகரானவன். ஒருவனுக்கு உலக வசதிகள் எல்லாம் இருந்தும் கடவுள் ஒருவரையே நாடி, அருள்தாகமெடுத்துக் கண்ணீர் சிந்துகிறான். காவியுடையணிகிறான். துறவில் நிலைத்து நிற்கிறான். இம்மனிதன் தேனீக்கு நிகரானவன்.

நலமனைத்தின் திரட்சியே இறைவன் எனப் பகரப் பெறுகிறது. நலனை நாடுவதும் நல்லாரை நாடுவதும் ஒன்றே. இறைவன் நன்றுடையான் தீயதிலான் ஆகிறார்.

" நான் கொண்ட விரதம் நின் அடியலால்
பிறர் தம்மை நாடாமையாகும் "

என்பது தேனி போன்றவர்களுடைய போக்காகும். இதை உணராது உலக விஷயங்களில் தம் கருத்து முழுவதையும் செலுத்துபவர்கள் தம் வாழ்வைப் பாழ்படுத்துபவர் ஆகின்றனர். இதனையுணர்ந்து நாம் வீட்டு ஈ போன்றிராமல் தேனி போன்று ஆவதற்கு இடையறாது முயல்வது நம் தலையாய கடமையாகும்.


"கடவுளின் மெய்யன்பர்கள் தேன் ஈக்கு ஒப்பானவர்கள். தேன் ஈ அழுக்கு எதிலும் உட்காராது. தேன் அடையில் உட்காரும் அல்லது புஷ்பத்தின்மீது அமரும். ஆனால் உலகப்பற்றையும் கடவுள் பக்தியையும் சேர்த்து அனுஷ்டிக்க முயலுபவர்கள் வீட்டு ஈக்கு ஒப்பானவர்கள். வீட்டு ஈ ஒருவேளை ஈசுவர நைவேத்தியத்துக்காக வைத்திருக்கும் தூய உணவின்மீது உட்காரும். அடுத்த வேளை தோட்டி தலையில் சுமந்து செல்லுகிற மலத்தின்மீது உட்காரும்."

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்.

தாயுமானவர் ஆலயத்தில்

தத்துவ அமைப்பு

(268ஆம் பக்கத் தொடர்ச்சி)



ஸ்ரீ தாயுமானவர் கோவிலின் மேல்தளத்தில் நான்காம் இடம் பெறுவது வஜ்ராயுதம். தன்னுடைய விபூதிகளை விளக்குகிற கிருஷ்ண பரமாத்மா ஆயுதங்களுள் நான் வஜ்ராயுதமாக இருக்கிறேன் என்று இயம்புகிறார். வஜ்ராயுதத்துக்கும் தெய்வங்கள் படைத்திருக்கிற ஏனைய ஆயுதங்களுக்கும் வித்தியாசம் ஒன்று உண்டு. தெய்வங்களுக்குரிய ஆயுதங்கள் அந்தந்த தெய்வத்தின் சொரூப லக்ஷணங்களாம். உதாரணமாக, உயிர்களை நல்வழியில் ஓப்புவதும் தீய போக்கினின்றே அழிவினின்றே உயிர்களைக் காப்பதும் அன்னை பராசக்தியின் செயல். தர்மத்தைக் காப்பது திருமாலின் செயல். அக்ஞானத்தை அகற்றுவது சிவனாரின் செயல். ஆக அந்தந்த தெய்வத்தின் ஆயுதங்கள் அந்தந்த தெய்வத்துக்குரிய மாறாத மகிமைகளாக வந்து அமைந்திருக்கின்றன

வஜ்ராயுதமோ மனிதன் தான் அடையும் பண்பின் வாயிலாகத் தனக்குத்தானே அமைத்துக்கொள்ளும் பேராற்றலாம். மனிதன் முறையாக முயன்றால் அவன் பேராற்றல் படைத்தவன் ஆகலாம். சான்றாக ஆஞ்சநேயரையும் பீஷ்மரையும் எடுத்துக் கொள்ளலாம். அப்பெருமக்கள் இருவரும் அற்புதமான வஜ்ராயுதங்களாக வடிவெடுத்திருந்தார்கள். பரநல சேவைக்கு அவர்கள் பயன்பட்டது போன்று வேறுயாரும் பயன்படவில்லை.

தேவர்கள் யாண்டும் அசுரர்களால் அலைக்கழிக்கப்பட்டனர். அந்த உபத்திரவத்தினின்று தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுதலும் முன்னேற்றம் அடைதலும் எங்ஙனம் என்று பிரம்மதேவனிடம் தேவர்கள் முறையிட்டார்கள். உங்களுள் சிலராவது வஜ்ராயுதமாக மேன்மை அடைந்தால் ஒழிய நீங்கள் உயர்வு அடைய மாட்டீர்கள் என்று படைப்புத்தெய்வம் பகர்ந்தார். பிறவியிலிருந்தே நைஷ்டிக பிரம்மச்சாரியாகவும் பரஞானியாகவும் இருக்கிற முனிவர் ஒருவருடைய அஸ்தியை அவர் மனமுவந்து வழங்க, அதை ஏற்றுப் பண்ணுகிற அஸ்திரம் அசுருடைய கொடுமையைத்தடுக்கவல்லதாம். அதன்படி ததீசி மகரிஷி பிரம்ம நிஷ்டையிலிருந்து தம் அஸ்தியைக் கொடுத்துவிட அதினின்று செய்த ஆயுதமே வஜ்ராயுதமாகிறது. இப்புராணத்தின் உட்கருத்தை ஆராய்வோம்.


மரங்களுள் நன்றாக முற்றிப்போன மரம் வயிரம் ஏறியது என்றும் வஜ்ஜிரம் ஏறியது என்றும் பகரப்பெறுகிறது. மரத்தில் வயிரமேறிய பகுதி வெயில், காற்று, மழையால் பாதிக்கப்படாது அது யாண்டும் உறுதியாகவே இருக்கும். இது இயற்கையின் கூறு. மானுடன் ஒருவன் பிறவியிலிருந்தே பிரம்மச்சரிய விரதம் காப்பவனாகவும் பரஞான நாட்டமுடையவனாகவும் பிறர்க்குப் பயன்படும் மனப்பான்மை படைத்தவனாகவும் வாழ்ந்து வருவானாகில் அவன் வஜ்ராயுதமாகிறான்.

ஸ்தூல அமைப்பில் வஜ்ராயுதத்துக்கு விளக்கம் இங்ஙனம் தரப்படுகிறது. கூர்மையில் அது க்ஷவரக்கத்திக்கு நிகரானது. உறுதிப்பாட்டில் அது கோடாரிக்கு நிகரானது. விறகு பிளந்தபிறகு அதே ஆயுதத்தைக் கொண்டு க்ஷவரம் பண்ணிக்கொள்ளலாம். அதன் பிறகு மீண்டும் அதை விறகு பிளக்கப் பயன்படுத்திக்கொள்ளலாம். நுண்ணறிவும்

பேராற்றலும் தபோபலமும் சேர்ந்து அமையப் பெற்றிருக்கும் மூர்த்தி ஒருவனிடத்துத்தான் இத்தகைய சிறப்புக்கள் ஒன்று சேர்ந்து இருப் பதைக் காணலாம். இலங்கைக்குச் சென்ற ஆஞ்சநேயன் அரக்கர்களோடு புரிந்த போராட் டத்தில் கோடாரியின் பாங்குடையவனகத் தென்பட்டான். தன்னை எதிர்த்து வந்த அரக் கர்களை மிக எளிதில் அவன் தோற்கடித்தான். அதே ஆஞ்சநேயன் சீதா தேவியாரைச் சந் தித்தபொழுது தன்னுடைய நுண்ணறிவைப் பயன்படுத்தினன். ஸ்ரீ ராமனிடமிருந்து தனக்கு விமோசனம் ஏதும் வராதிருந்ததினல் சீதா பிராட்டி தற்கொலை பண்ணிக்கொள்ளத் தீர் மானித்தாள். அந்த நெருக்கடியைச் சமாளித் துத் தேவியின் மனதை மாற்றியது ஆஞ்சநேய னுடைய நுண்ணறிவைக் காட்டுகிறது.

உலகம் யாண்டும் நலம் கேடு ஆகிய இரண்டு பாங்குகளுஞ்சேர்ந்து அமையப்பெற்ற தாம். சில வேளைகளில் தீமை ஓங்கி முன்ன ணிக்கு வருகிறது. வேறு சில வேளைகளில் தீமையைத் தகர்த்துத் தள்ளிவிட்டு நலன் முன் னணிக்கு வருகிறது. தீமை சுயநலப் பற்றின் விளைவு. நலன் தியாகத்தினின்றும் தூயவாழ் வினின்றும் வடிவெடுத்ததாம். மழை பெய் தான பிறகு விளைநிலத்தில் பயன்படாத களை கள் தாமாக முளைத்துவருகின்றன. அவைகளை எடுத்துத் தள்ளிவிட்டுப் பயிர்பச்சைகள் வளர்ந்துவர அந்நிலத்தைப்பயன்படுத்தவேண் டும். அதே விதத்தில் மக்களுள் கீழ் இயல்பு படைத்தவர்கள் ஏராளமாகத் தோன்றிக் கேட்டைவளர்க்கிருர்கள்.அக்கேட்டைஅகற்று தற்கும், நலனை உறுதிப்படுத்துதற்கும் நல்லார் தோன்றவேண்டும். அன்னவர்கள் தூய்மையும் தியாகமும் நிறைந்த நல்வாழ்வே வாழவேண் டும். ஆருயிர் சேவையை ஆண்டவன் சேவை யாக அவர்கள் கருதுதல்வேண்டும்.அத்தகைய நலன் வாய்க்கப்பெற்றவர்கள் எண்ணிக்கை யில் குறைந்திருந்தாலும் அவர்கள் புரிகின்ற தூயபணிவிடைகள் சமுதாயத்தில் வடிவெடுக் கும் தீமைகளுக்கு முறி ஆகும். ஆக மக்களுள் வஜ்ராயுதத்துக்கு நிகரான கூட்டத்தார் ஆயத்தமாய் வருவதே தீமையைத் தடுக்க உற்ற உபாயமாகும். வஜ்ராயுதத்தைப்பற்றிய கோட்பாடு இது.

ஸ்ரீ தாயுமானவர் கோயிலின் மேல்தளத்தில் ஐந்தாம் இடம் பெற்றிருப்பது சுவஸ்திகை. இதை வட மொழியில் சுவஸ்திகா என்பர்.



நலன்கள் யாவுக்கும் இருப்பிடம் என்பது இதன்பொருள். இரண்டு நேர்கோடுகள் ஒன்றை யொன்று ஒரே அளவில் இருந்துகொண்டு வெட்டுகின்றன. அங்ஙனம் நான்கு நுனிகள் அமைகின்றன. ஒவ்வொரு நுனியினின்றும் நான்கு சிறிய நேர்கோடுகள் ஒரே திசையை நோக்கி அமைக்கப்படுகின்றன. இந்த வடிவத் துக்குத்தான் சுவஸ்திகை என்னும் பெயர் வந்துள்ளது.

நான்கு என்னும் எண்ணிக்கை இயற்கை யின் கண்ணுள்ள பலபெருமைகளுக்கு விளக்க மாக அமைந்திருக்கிறது. இயற்கையில் திக்கு கள் நான்கு உள. காலம் கிருதயுகம், திரேதா யுகம், துவாபரயுகம், கலியுகம் ஆக நான்கு யுகங்களாக மாறியமைகிறது. மனிதன் பயிற் சியில் பெறுகிற அறிவு நான்கு வேதங்களாக வடிவெடுக்கிறது. ஆத்ம சாதனத்தில் நிறை நிலை அடைகிற யோகி பூரண யோகி ஆகிருன். பூரணயோகத்தில் கர்மயோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய நான்கு யோகங்கள் அமைந்திருக்கின்றன. இவை களுள் ஏதேனும் ஒரு யோகத்தைத் தீவிரமாகக் கையாண்டும் மனிதன் நிறைநிலை எட்டமுடி யும். ஆனல் எந்த மூர்த்தியினிடத்து இந்த நான்கு யோகங்களும் முறையாக அமைந்திருக் கின்றனவோ அந்த யோகியே பூரண யோகி

யாகிருன். இதற்கு இலக்காக இலங்குபவர் கிருஷ்ண பரமாத்மா.

மனிதன் நிறை மனிதன் ஆதல் வேண்டும். நிறைமனிதனிடத்து ஆற்றல் அன்பு அறிவு ஆகிய மூன்றும் சம இடம் பெறுகின்றன. ஆற்றலில் மேலோங்குதற்கு மனிதன் கர்யயோகத்தையும், ராஜயோகத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். அன்பில் திளைத்திருப்பவன் நல்ல பக்தியோகி ஆகிருன். நுண்ணறிவே வடிவெடுத்திருப்பவன் நிறை ஞானம் அடையப் பெறுபவன் ஆகிருன். மக்கள் எல்லார்க்கும் இத்தகைய நிறைநிலை சாத்தியம். முறையாக முயற்சி எடுத்துக்கொண்டால் மனிதன் ஒரே ஜன்மத்தில் நிறை மனிதன் ஆகலாம். இதற்குச் சின்னமாக அமைந்திருப்பது சுவஸ்திகை.

சமுதாய அமைப்பில் மக்களுள் நான்கு படித்தரத்தினரைக் காணலாம். அவர்கள் முறையே பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனப்பெயர் பெறுகிருர்கள். நல்ல சமுதாயம் ஒன்றில் அந்த நான்கு விதக் கூட்டத்தாரும் முறையாக இடம் பெறுகின்றனர். மானுட சரீரத்தில் பணிவிடைகள் புரியும் உறுப்புக்கள் நிலையில் சூத்திரர்கள் இருக்கின்ருர்கள். உணவை ஏற்றுச் செமித்து உடல் முழுதும் ரத்தமாகச் செலுத்தும் ஜீரணக்கருவிகள் ஸ்தானத்தில் வைசியர்கள் இருக்கிருர்கள். நல்வினையில் ஈடுபடும் மானுடன் ஒருவன் பயன்படுத்தும் புஜங்களுக்கு நிகராக க்ஷத்திரியன் சமுதாயத்தில் அமைந்திருக்கிருன். நலன் கேடுகளைப் பாகுபடுத்திக் கேட்டைத் தவிர்க்கவும் நலனைக் கடைப்பிடிக்கவும் தீர்மானிக்கின்ற நல்லறிவுக்கு இருப்பிடம் மூளை. அந்த ஸ்தானத்தைப் பிராம்மணன்பெறுகிருன். இந்த உறுப்புக்களுக்கிடையில் எங்ஙனம் உயர்வு தாழ்வு இல்லையோ அங்ஙனம் நான்கு வருணத்தார்களும் ஒருங்கே பாராட்டப்பெறுகின்றனர். அடுத்தபடியாக மானுட வாழ்க்கை நான்கு படித்தரங்களில் அமைகிறது. அப்படித்தரங்கள் முறையே பிரம்மச்சரிய ஆச்ரமம், கிரஹஸ்த ஆச்ரமம், வானப்பிரஸ்தஆச்ரமம், சந்நியாச ஆச்ரமம் என்னும் பெயர் பெறுகின்றன. இத்தகைய வருணத்தையும் ஆச்ரமத்தையும் பயன்படுத்துகிற மனிதன் நான்கு விதங்களில் பண்பாடு அடைந்து வருகின்ருன். அவைகள் முறையே அறம், பொருள், இன்பம், வீடு என இயம்பப் பெறுகின்றன. இந்த நான்குவிதப் பண்பாடும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என வடமொழியில் இயம்பப்படுகின்றன.


ஸ்ரீ தாயுமானவர் கோயிலின் மேல்தளத்திலே ஆறும் இடம் பெற்றிருப்பது ஏழு



நிறங்களையுடைய ஏழு வட்டங்களாம். வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் ஏழுபடித்தரங்கள் இடம்பெறுகின்றன. இந்த ஏழுமையே ஏழு ஞானபூமிகள் எனவும் இயம்பப் பெறுகின்றன. இயற்கையில் புஞ்சேந்திரியங்களுக்கு எட்டுகிற பகுதிகளில் ஏழுமையைக் காணலாம். நன்ருகக் கண்ணுக்குப் புலனுகும் நிறங்கள் ஏழு ஆக சூரிய கிரணத்தினின்று சிதைவு அடைகின்றன. காதால் கேட்கும் ஓசை சப்த சுரங்களாக விரிவடைகின்றன. இந்த ஏழுவித ஓசைக்கப்பால் ஓசை உலகில் வேறு எதுவும் இல்லை. நாவால் சுவைத்துப் பார்க்கும் உணவில் அறுசுவைகளும், இந்த ஆறுக்கும் பொதுவாக இருக்கும் சுவையற்ற நீரின் சுவையும் சேர்ந்து ஏழு சுவைகள் ஆகின்றன. கையால் தொட்டு உணர்வது ஸ்பர்ச உணர்ச்சி அல்லது ஊறு எனப்படுகிறது. மனிதனுடைய சரீரத்தில் ஏழு தாதுக்கள் அடித்துக் கொண்டிருக்கின்றன. நாடியைத் தொட்டு உணர்ந்து பார்ப்பவர்களுக்கு இந்த ஏழு தாதுக்களும் நன்கு புலனுகின்றன. ஏழு

தாதுக்களும் முறையாக அமைந்திருந்தால் அது நோயற்ற உடலாகத் திகழ்கிறது. இனி நாற்றத்தில் ஏழு கூறுகள் இருக்கின்றன. ஆனால் மோப்பத்தால் அவைகளைக் கண்டுபிடிக்கும் தன்மை மனிதனுக்கு அமையவில்லை. அவன் வளர்க்கும் நாயினிடத்து இத்திறமை நன்கு அமைந்திருக்கிறது. இதற்காகவென்று தனியாக யோக சாதனங்கள் புரிந்தால் மோப்பத்தின் மூலமாக நலன் கேடுகளை அறிந்து கொள்ளும் திறமை மனிதனுக்கு வந்து அமைகிறது. ஆனால் அந்தச் சாதனத்தை யாரும் புரிவதில்லை. புரியாததினால் ஏதும் குறையில்லை. ஆக ஏழு வட்டங்களை உடைய இந்தச் சின்னம் ஏழு ஞான பூமிகளுக்கு அடையாளமாக அமைந்திருக்கிறது.

இதன் நடுவில் ஐம் என்னும் பீஜமந்திரமும் அமைந்திருக்கிறது. பரவஸ்து தோற்றத்துக்கும் வந்திருக்கிறது; தோற்றத்துக்கு அப்பாலும் இருக்கிறது. தோற்றத்துக்கு வந்துள்ள பகுதி சகுணப் பிரம்மம் என்னும் பெயர் பெறுகிறது. இந்தச் சகுணப் பிரம்மத்தின் கூறுகளாகத்தாம், நாம் வழிபடும் தெய்வங்களாகிய சிவன், சக்தி, விஷ்ணு கணபதி, கார்த்திகேயன், சூரிய நாராயணன் ஆகியவர்கள் இடம் பெறுகிறார்கள். அந்தந்த மதத்துக்குரிய தெய்வத்தின் சொருபங்களும் இந்தச் சகுணப் பிரம்மத்தில் இடம் பெறுகின்றன.



ஸ்ரீ தாயுமானவர் கோயிலின் மூலஸ்தானத்திலே மூர்த்திக்கு மேலே மேல்தட்டில் அமைந்திருப்பது பரவெளியின் சின்னமாம். இது ஏழாவது ஞானபூமி. இது அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறது. பரப்பிரம்மமும் இந்த ஞான பூமியும் ஒன்றேயாம். யோக சாஸ்திரம் இதைச் சஹஸ்ராரம் எனவும் கூறுகிறது. ஆயிரம் இதழ்களை உடைய தாமரைப் பூ என்பது இதன் பொருள். ஆயிரம் எண்ணிக்கையில் அடங்காதது என்பதைக் குறிக்கிறது. இதை அடையப்பெறுகிறவன் பரம்பொருளில் இரண்டறக் கலக்கிறான். இப்பர வெளியே வெட்டவெளி எனவும் சிதாகாசம் எனவும் சிதம்பரம் எனவும் இயம்பப் பெறுகிறது. இதைச் சொல்லால் விளக்க முடியாததினால் சிதம்பர ரகசியம் எனவும் இது பெயர் பெறுகிறது. இது மனம் மொழிக்கு எட்டாதது ஆயினும் இதை ஒருவாறு அறிந்துகொள்ளுதற்கு உபமானம் ஒன்றைக் கையாளலாம். மானுட வாழ்க்கைக்கு இன்றியமையாத நீர் மூன்று நிலைகளில் இருக்கிறது. ஆலங்கட்டி, உறைபனி, மனிதன் அமைக்கின்ற ஐஸ் ஆகியவைகள் வடிவங்களில் இருக்கின்றன. ஆனால் நீரின் பெரும்பகுதி இளகி ஓடும் திரவபதார்த்தமாகவே இருக்கிறது. கடலில் பெரும்பகுதி திரவபதார்த்தம். வடதுருவத்திலும், தென் துருவத்திலும் மலைமலையாக உறைபனி அமைந்திருக்கிறது. இனி இதனுடைய மூன்றாவது கூறு ஆவியாக மாறிக் காற்றில் கலந்திருக்கிறது. நீராவி கட்புலனாவதில்லை. அதை முன்னிட்டு அதைச் சூன்யம் எனலாகாது. கட்புலனாகாத நீராவிக்கு நிகர் நிர்க்குணப் பிரம்மம். அறிவுப் பெருவெளி என்றும், சுட்டறிவைத் தாண்டிய பேரானந்தம் எனவும் இது பகரப்பெறுகிறது. இது மூலநிலை. இதை அடைவது வாழ்க்கையின் குறிக்கோள். இதை அடையப்பெற்றுள்ள எண்ணரிய சான்றோர்களுள் தாயுமானவர் ஒருவர் ஆகிறார்.

இந்த ஏழு சின்னங்களிலும் அடங்கியுள்ள தத்துவங்கள் ஆத்ம சாதனத்துக்கு உரியவைகளாம். தத்துவங்களை ஞாபகமூட்டுவதற்கே ஆங்கு இத்தகைய சின்னங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. தத்துவ நோக்கோடுபார்த்தால் இவைகளை அமைத்திருப்பதன் நோக்கம் நன்கு நிறைவேறுகிறது. இவைகளை மக்கள் ஓர்ந்து ஆராய்ந்து தங்கள் அனுஷ்டானத்தில் கொண்டு வருவார்களாக. (முற்றும்)

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

14. நல் நெடும் காற்றின் மைந்தன்

கிட்கிந்தா காண்டத்தில் ராம இலக்குவர் அனுமனைச் சந்தித்துப் பேசியபோது, அனுமனுடைய சொல்லாற்றலைக் கண்டு வியந்த ராமன் அவனுக்குச் 'சொல்லின் செல்வன்' என்ற பட்டத்தை வழங்குகின்றான். அனுமனுடைய சொல்வன்மையைப் பற்றி ராமன் பாராட்டியது எவ்வளவு பொருத்தமானது என்பதை ராமாயணத்தில் அனுமன் பேசும் இடங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். சொல்லின் செல்வனின் சொல்லாற்றலுக்கு ஒரு சவாலாக அமைந்தவை இரண்டு இடங்கள்:

1. ராமனின் ஆணைப்படி இலங்கை வந்து சீதையைக் கண்டு அவளிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அவளுக்கு ஆறுதல் கூறுவது.

2. அரக்கரிடம் தன்னைச் சிறைப்படுத்திக் கொண்டு ராவணனிடம் சென்று சீதையை விட்டுவிடுமாறு கேட்டுக்கொள்வது.

இந்த இரண்டிலும் அசோகவனச் சீதையிடம்தான் அனுமன் தன் சொல்வன்மை முழுவதையும் வெளிக்காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதோ அஞ்சனைச் சிறுவன் சீதைக்குத் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் முறையைப் பாருங்கள்! தலையில் சூட்டிய கரங்களுடன் பேசுகின்றான் அனுமன்:

''அன்னையே! தூயவனாகிய நின் துணைவன் உன்னைப் பிரிந்த பின்னர் நட்புக்கொண்ட தோழன் சுக்ரீவன் என்பவன்; காய் கதிர்ச் செல்வனாகிய சூரியனின் மைந்தன் அவன்; வானரங்களுக்கெல்லாம் அரசன். அந்தச் சுக்ரீவனின் தமையன் பெயர் வாலி என்பதாகும். அவ்வாலி ராவணனைத் தன் வாலில் கட்டி ஏழு கடல்களையும் தாவிச் சென்றவன்; தேவர்களாலும், அசுரர்களாலும் கடைய முடியாத பாற்கடலைத் தான் ஒருவனாகவே கடைந்து அமுதத்தை அவர்களுக்குக் கொடுத்தவன்; அப்படிப்பட்ட வீரனாகிய வாலியை உன் நாயகன் ஒரே அம்பினால் கொன்று சுக்ரீவனை அரசனாக்கினான். அக்குற்றமற்ற சுக்ரீவனின் மந்திரிகளில் நானும் ஒருவன்; ஆகாயத்தை அளாவிச் செல்லும் வாயுவின் மைந்தன்; என் பெயர் அனுமன்.

"குறிப்பிட்ட காலத்திற்குள் உன்னைத்தேடிக் கண்டுபிடித்துச் செய்தி கொண்டுவர வேண்டும் என்ற எங்கள் மன்னன் சுக்ரீவன் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு எழுபது வெள்ளம் வானர வீரர்கள் உன்னைத்தேடி ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் சென்றுள்ளனர்; அங்கும் காணவிட்டால் வேறு வேறு அண்டங்களுக்கும் தேடிச்செல்லும் திறனுடையவர்கள் அவர்கள்; இந்தக் கடல்போன்று பல கடல்களைத் தாவும் வல்லமை உடையவர்கள் அவ்வானர வீரர்கள்.

"தேவீ! அரக்கன் உன்னை எடுத்துச் சென்றபோது நீ துணியில் முடிந்து போட்ட உன் நகைகள் ரிஷ்யமுக பர்வதத்தில் விழுந்திருந்தன; தற்செயலாக அங்கு வந்த நாங்கள் அவற்றை எடுத்துப் பாதுகாத்து வைத்திருந்தோம்; அவற்றை உன் நாயகனிடம் காட்டினோம். அதிலிருந்து தென்திசைக்குத்தான் நீ கடத்தப் பட்டிருக்கவேண்டும் என்று தேர்ந்து, என்னைத் தனியாக அழைத்துச் சிறப்பான செய்திகள் சில சொல்லி இத் தென்திசைக்கு அனுப்பினான் ராமபிரான். அவனுடைய அருள் பெற்றவனாதலாலே உன் சேவடிகளைத் தரிசிக்கும் பேறு பெற்றேன் நான்.

"தாயே! அன்று உன் அணிகலன்களை எம்பிரான் பார்த்தபோது அவர் அடைந்த நிலையை இன்று உனக்கு விவரித்துச் சொல்ல என்னால் இயலவில்லை. ஆனால் ஒன்று நிச்சயம்; அவ் அணிகலன்கள்தாம் உன் மன்னனுக்குப் புத்துயிரூட்டின என்பதை நீ நினைவிற்கொள்ள வேண்டும். பெண்டிர்க்குத் திருமாங்கல்யம் இருந்தால்தான் மற்ற அணிகளை அணிய வாய்ப்பு உண்டு என்று சொல்வார்கள். ஆனால் இங்கோ, உன்னுடைய மற்றைய அணிகலன்களை ராமபிரான் பார்த்ததனால்தான் உன் திருமாங்கல்யம் நிலைத்திருக்க முடிந்தது என்பதைத் தெரிந்துகொள்.

'' இது இவ்வாறு இருக்க; அவ் வாலியின் மைந்தனான அங்கதன் தலைமையில் இரண்டு

வெள்ளம் அளவுள்ள வானர வீரர்கள் தென் திசைக்கு வந்தோம். அவர்களுள் என்னை நோக்கி 'இலங்கைக்குச் செல்வாயாக' என்று அங்கதன் ஏவியதால் நான் இங்கு வந்தேன்; உன்னை நேரில் காணும் பேறும் பெற்றேன். அன்னையே! நீ நீடுழி வாழ்வாயாக! உன்னைக் கண்டதால் உன்னைப் பார்க்காமல் திரும்பிப் போகும் பழியினின்றும் தப்பினேன். ராமன் அங்கு வெறும் மூச்சுக்காற்றினால் தாங்கப்படும் உடம்புடன்தான் இருக்கின்றான். அவனுடைய மெய் உணர்வு உயிராகிய நீ இங்கு இருக்கும் போது அங்கு விடுவதற்கு ராமனிடம் எந்த உயிர் இருக்கின்றது? உன்னை விட்டுப் பிரிந்த ராமனுடைய உடல் இயங்குகின்றதே தவிர உணர்வு இயங்கவில்லை!

"தேண்டி நேர் கண்டேன்! வாழி!
 தீதிலேன்! எங்கோன் ஆகம்
பூண்ட மெய் உயிரே போகப்,
 பொய் உயிரோடு நின்றான்;
ஆண்தகை நெஞ்சினின்றும்
 அகன்றிலை; அழிவுண்டாமோ?
ஈண்டு நீ இருந்தாய்!
 ஆண்டு அங்கு எவ்வுயிர் விடும்இராமன்?"

— உருக்காட்டுப் படலம் 37

[தேண்டி-தேடி; ஆகம் பூண்ட மெய் உயிரே போக-உடம்பிற் பொருந்திய உணர்வாகிய உண்மையான உயிராகிய நீ பிரிந்துவிட்டதனால்; பொய் உயிரோடு நின்றான்-மூச்சுக்காற்றினால் இயங்கும் பொய்யான உயிரை மட்டும் வைத்துக்கொண்டிருக்கின்றான்; ஆண்தகை-ராமன்]

இந்த நீண்ட சுய அறிமுக உரையில் அனுமன் சீதைக்கு அந்தச் சமயம் தேவையான சில முக்கியமான கருத்துக்களைத் தெரிவிக்கின்றான்.

1. சீதையைப் பிரிந்த ராமன் அவளைத் தேட முயற்சி எடுக்கவில்லை என்று சீதை முணுமுணுத்துக் கொண்டிருந்தது அனுமன் செவியில் விழுந்து விட்டது. எனவே, ராமனுடைய ஏற்பாட்டின்படிதான் எழுபது வெள்ளம் வானரசேனை சீதையைத் தேடிக்கொண்டிருக்கின்றதென்றும், அச்சேனையைச் சேர்ந்த ஒருவனாகிய தன்னால் சீதை கண்டுகொள்ளப் பட்டாள் என்றும் தெரிவிப்பதன்மூலம் ராமன் மேல் சீதைகொண்டிருந்த வருத்தத்தைப் போக்கிவிடுகின்றான் அனுமன்.

2. தன்னைப்பற்றிய அறிமுக உரையில் வாலியைப்பற்றிய செய்தி தேவை இல்லாதது எனினும், சீதையின் மனத்திற்குத் தைரியம் ஊட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு ராவணனைப் பூச்சியாக நினைத்து விளையாடிய வாலியின் வலிமையையும், அப்பேர்ப்பட்ட வாலியையும் ஒரே அம்பினால் கொன்றவன் ராமன் என்ற செய்தியையும் வெளியிடுகின்றான் சொல்லின் செல்வன்.

3. ராவணனை எதிர்த்துப் போரிடுவதற்கு ராம இலக்குவர் துணையின்றி இல்லை என்றும் அவர்களுக்கு நல்ல படைபலம் இருக்கின்றது என்றும் காட்டவே எழுபது வெள்ளம் வானர சேனை ராமன் கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கின்றது என்கின்றான். மேலும் பெருங் கடலைத் தாண்டும் வன்மை தனக்குத்தான் உண்டு என்பது உண்மையாயிருப்பினும் வானரப்படையினரெல்லாம் அவ்வாறு தாண்டும் பலம் படைத்தவர்கள் என்று அனுமன் சொல்வதும் சீதைக்குத் தைரியம் ஊட்டுவதற்காகத்தான் என்பது தெளிவு.

4. 'ராமனுக்குத் தன்மீது இரக்கம் இல்லை; கருணையில்லை; அன்பு இல்லை; அதனால்தான் இன்னும் தன்னைத் தேடி வராமல் இருக்கின்றான்' என்பது சீதையின் மற்றொரு குற்றச்சாட்டு. அதற்குப் பதில் சொல்பவன்போன்று சீதையின் அணிகலன்களைக் கண்ட ராமனின் நிலையை விவரிக்க முயற்சிக்கின்றான் அனுமன். அந்த அணிகலன்களைப் பார்த்திராவிட்டால் ராமன் உயிர் போயிருக்கும் என்பதை நாகரிகமாக அந்த நகைகள்தாம் சீதையின் மாங்கல்யத்தைக் காப்பாற்றின என்று குறிப்பிடுவதன் மூலம் விளக்குகின்றான்.

5. இறுதியாக, சீதையைப் பிரிந்த ராமன் உணர்வல்லாத உடம்புமட்டும் தாங்கியவனாக இருந்தான் என்பதை நயம்பட உரைக்கின்றான் நன்னெடும் காற்றின் மைந்தனான அனுமன். ராமனுடைய உயிர் சீதை. அது அசோக வனத்திற்கு வந்துவிட்டது. எனவே ராமனிடம் என்ன இருக்கிறது விடுவதற்கு? உடலின் இயக்கத்திற்குத் தேவையானது பொய் உயிர் என்றும்; உணர்ச்சிகளின் இயக்கத்

திற்கு இன்றியமையாதது மெய் உயிர் என்றும், இதில் ராமனிடமிருந்து சீதையாகிய மெய் உயிர் பிரிந்த பின்னர் இன்னுயிர் இன்றி வைகும் இயந்திரப் பொம்மையாக ராமன் இருந்தானே தவிர உணர்வும் உள்ளமும் கொண்ட மெய் உயிர் இயக்கும் மனிதனுக அவன் நடமாடவில்லை என்றும் சீதைக்குக் கூறுவதன்மூலம், ராமன் தன்னை மறந்துவிடவில்லை என்று சீதை நம்பிக்கைகொள்வதற்கு வழிவகுக்கின்ருன் தன் குலப் பெருமையைத் தனதாக்கிக்கொண்ட அனுமன்.

15. உய்தல் வந்துற்றதோ?

அனுமனின் பொருள் பொதிந்த இந்தப் பேருரையைக் கேட்டதும் சீதைக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது; ராமன் பிரிவாகிய வெப்பத்தால் வாடிப்போன மேனி, ராமனைப்பற்றிய செய்திகேட்ட உவகையால் பூரித்துப் பெருத்துத் தோன்றியது; எரிமூச்சாக எழுந்த பெருமூச்சுக்கள் ஓய்ந்து அடங்கின; கண்களில் ஆனந்தக்கண்ணீர் அருவியாகப் பாய்ந்து ஓடியது.

"எனக்கும் ஒரு வாழ்வு வந்துள்ளதோ?" என்ற வியப்புடன் அனுமனிடம், "ஐயனே! நீ பார்த்த என் பெருமானின் மேனி அழகைச் சிறிது சொல்வாயாக!" என்று வேண்டினுள் சீதை. பத்து மாதங்களாகத் தன் கண்களால் பார்க்க முடியாத ராமபிரானின் திருமேனி அழகை அனுமன் வாயிலாகக் கேட்டாவது மகிழ்வோமே என்ற ஏக்கம் சீதையின் வேண்டுகோளில் தொனிப்பது காணலாம். தனக்கும் ஒரு வாழ்வு வந்துற்றதோ என்று சீதை எண்ணி விம்மியது அவள் எவ்வளவு துயரத்தில் மூழ்கியிருந்தாள் என்பதைத் தெளிவுறுத்தும். சீதையின் இந்த உணர்ச்சி வெள்ளத்திற்குக் கம்பன் எப்படி உருவம் கொடுக்கின்ருன் என்பதைப் பாருங்கள் :

இஃது அவன் இசைத்தலோடும்,
எழுந்தபேர் உவகை பொங்கி,
வெய்து உறல் ஒடுங்கும் மேனி
வானுற விம்மி ஓங்கி,
"உய்தல் வந்துற்றதோ!" என்று
அருவிநீர் ஒழுகு கண்ணுள்,
"ஐய! சொல்! ஐயன் மேனி
எப்படிக்கு அறிதி?" என்ருள்.

உருக்காட்டுப் படலம்—38.

[அவன் - அனுமன்; இசைத்தலோடும்- சொன்னபோது; வெய்து உறல் ஒடுங்கும் மேனி - பிரிவுத்துன்பம் என்ற வெப்பத்தினுல் வாடிப்போன சீதையின் உடல்; வான் உற விம்மி ஓங்கி - ராமனைப்பற்றிய செய்தி கேட்டதால் உடல் பெருக்கும் படியான மகிழ்ச்சி அடைந்து.]

சுந்தர காண்டத்தில், ஏன் ராமாயணத்திலேயே, ஒரு திருப்பு முனையாக அமைந்திருக்கும் சொற்ருெடர் "உய்தல் வந்துற்றதோ!" என்ற சீதையின் வாக்காகும். இது வரையில், பிரிவுத் துயரில் வாடும் பெண்ணுக, மழையின்றி வாடும் மருந்து செடி போன்றவளாக, துயர் தாங்காது நெஞ்சால் ஒன்றும் உய்வழி காணுமல் நெகும் நங்கையாக, ஐயனின் பிரிவையும் அரக்கரின் கொடுமையையும் தாங்காமல் தற்கொலை செய்ய முயன்ற பேதையாகச் சீதையைப் பார்க்கின்ருேம். ஆனுல் இனிமேல் அவள் அப்படி இருக்கப் போவதில்லை. காகுத்தனின் கருணை மழைக்காக அரக்கர் பாலைவனத்தில் காத்திருந்த ஜானகிக்கு அனுமன் ஒரு பசுஞ்சோலையைக் காட்டி விடுகின்ருன். எனவே இனி, சீதையின் வாழ்வில் துயரத்துக்கு இடமில்லை.

"உய்தல் வந்துற்றதோ!" என்ற சொற்ருெடர் சீதைக்குக் கிடைத்த விடுதலையை மட்டும் குறிப்பதாகக் கொள்ள வேண்டுவதில்லை. இரக்கமில்லாத அரக்க மனம் படைத்தவர்களால் துன்புறுத்தப்படும் மனிதர்களின் பிரதிநிதியாகவே சீதை பேசுகின்ருள். எனவே உய்தல் வந்தது சீதைக்கு மட்டுமன்று. தீயவரின் தீமைக்குப் பலியான உயிரினங்களுக்கெல்லாம் உய்தல் வந்து விட்டதாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். ராமன் இந்த உலகத்திற்கு வந்ததே அந்த நோக்கத்தோடு தானே! அரக்கர் செய் பாவத்தினின்றும் அறத்தோரை உய்விக்கத்தானே தோன்றினுன் அறத்தின் மூர்த்தி! தீர்க்க தரிசனத்தோடு கௌசிகன் அன்று சொன்னுனல்லவா :

"இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
இனி இந்த உலகுக்கு எல்லாம்
உய்வண்ணமன்றி மற்ருேர்
துயர்வண்ணம் உறுவதுண்டோ?"

பாலகாண்டம் அகலிகைப் படலம்—24.

ராமனுடைய கைவண்ணத்தால் தாடகை அழிந்தாள்; கால் வண்ணத்தால் அகலிகை எழுந்தாள். இது ராமனுடைய வரலாற்றைக் குறிப்பாக விளக்க வந்த (Symbolic) நிகழ்ச்சி தான். இதனுடைய விவரணம் தானே ராமாயணம்!

அகலிகைப் படலத்தில் வரும் மேற்காட்டிய இரண்டு வரிகளும் அசோக வனச் சீதைக்கும் பொருத்தமாக அமைவன காணலாம். அனுமன் வந்து சீதைக்குச் செய்தி சொன்ன வண்ணம் இந்த உலகுக்கெல்லாம் உய்தல் வந்து விட்டதை உணர்த்துவதோடு இனிமேல் உலகில் துயர் வண்ணம் இருக்காது என்பதையும் குறிப்பிடுகின்றதல்லவா?

கிட்கிந்தா காண்டத்தில் முதன் முதலில் ராமனைப் பார்த்த அனுமன் அவனுடைய பெருமையைப் பற்றிப் பேசும் போது :

"யானும், என்குலமும், இவ்வுலகும் உய்ந்தவம்"
நட்புக் கோட்படலம்—1.

என்று கருதுவதாகக் கம்பன் பாடுகின்றான். எனவே ராமனின் தோற்றம் உலகத்தை உய்விக்கும் நோக்கம் கொண்டதாகவே இருந்தது என்பது வெளிப்படை.

சீதைக்கும் அவள் போன்றோர்க்கும் உய்தல் வந்துற்றது என்றால் ராவணனுக்கும் அவனைப் பின்பற்றியவர்க்கும் அழிவுகாலம் வந்துவிட்டது என்பது தெளிவாகின்றதல்லவா? ராவணன் இனி உய்தல் அரிது என்று கும்பகர்ணன் தன் மனத்தில் நினைத்து மிகத் துயரமடைந்தான் என்பதை,

"......என்றும் வரம்பின்றி வாழ்வானுக்கு
உய்யுமாறு அரிது என்று, தன் உள்ளத்தில்
உணர்ந்து ஒரு துயருற்றான்."

— யுத்தகாண்டம், கும்பகர்ணன் வதைப் படலம் 354.

[வரம்பின்றி வாழ்வான்-ராவணன்]

என்ற கம்பனின் வரிகள் நமக்குத் தெளிவாக்கும். மேலும், ராமனுடன் ஏற்பட்ட பகையினால் அரக்கர் குலமே நாசமாகப்போகிறது என்று கும்பகர்ணன் நம்பினான் என்பதை,

" வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ, பொன்றும் காலமே?"
யுத்தகாண்டம், கும்பகர்ணன்—79

[பொன்றும் காலம் - அழிவு காலம்]

என்ற வரிகள் விளக்குகின்றதைக் காணலாம்.

எனவே, சீதையின் வாக்கிலிருந்து தோன்றிய "உய்தல் வந்துற்றதோ!" என்ற சொற்றொடர் ராமாயணக் கதையின் அடிப்படையை நாம் உணர்ந்து கொள்ளத் துணைபுரிகின்றது என்பது தெளிவு.

இதுவரையில், அனுமன் சீதையிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் நிகழ்ச்சியை ஆதிகவியான வான்மீகியும், ராம சரிதத்தைப் பக்திக் காவியமாக்கிய துளசியும், ராமாயணத்தை நாடகக்காப்பியமாக ஆக்கித் தந்த கம்பனும் எவ்வாறு தங்கள் காப்பியங்களில் விவரித்துள்ளார்கள் என்பதைக் கண்டோம். இனி, அனுமனும் சீதையும் மேற்கொண்டு என்ன பேசினார்கள் என்பதை அடுத்த பகுதியில் காண்போம்.

ஜயப்பூரில் கோவிந்தனுடைய ஆலயத்தில் அர்ச்சகர்களாக அமர்ந்திருந்தவர்கள் முதலில் பிரம்மச்சாரிகளாக இருந்தார்கள். ராஜா அவர்களைத் தம்மிடம் வரும்படி சொல்லியனுப்பியபொழுது அவர்கள் அங்குச் செல்ல மறுத்துவிட்டனர். ராஜா தங்களிடம் வரட்டும் என்று சொல்லியனுப்பினார்கள். பின்பு ராஜா மந்திரிகளோடு ஆலோசனை செய்து அந்த பிரம்மச்சாரி அர்ச்சகர்களுக்கெல்லாம் விவாகம் செய்து வைத்துவிட்டார். அதன் பிறகு அவர்கள் தாமாகவே ராஜாவிடம் இதைமுன்னிட்டு, அதைமுன்னிட்டுஓடிக்கொண்டிருந்தனர். போகும்பொழுதெல்லாம் பிரசாதத்தைக் கையில் எடுத்துச் சென்று அரசனுக்கு வழங்கினார்கள். குடும்பிகள் ஆன பிறகு அவர்களின் தேவைகள் அதிகரித்தன. சுதந்திர உணர்வும் அவர்களைவிட்டுப் போய்விட்டது.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-156

898. वीरगोष्ठीप्रिया வீரகோஷ்டீப்ரியா— வீரர்களுடைய கூட்டத்தில் விருப்பம் வைப்ப வள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

வீர்யம் படைத்திருப்பவர்கள் வீரர்கள் ஆகி ருர்கள். வீர்யமஸி வீர்யம் மயி தேஹி என் பது பிரார்த்தனை. வாழ்க்கையில் பண்பாடு அடைந்துவருவதற்கேற்பச் சாதாரண மனிதன் வீரனுகப் பரிணமிக்கிருன். அவன் எடுத்துக் கொள்ளும் செயல்களனைத்தும் தர்மத்திற்கு ஒத்தவைகளாகின்றன. நுண்ணிய கர்மமும் எண்ணித் துணிக என்பது கோட்பாடு. செயல் ஒன்றைச் செய்து கொண்டிருப்பதற்கிடையில் அதைக் குறித்து மனிதனுக்குச் சந்தேகமோ மனத்தளர்வோ உண்டாகலாகாது. நல்ல கிருத்தியங்களுக்கு விக்னங்கள் வேண்டிய வாறு வந்தமைகின்றன. அவைகளைக் குறித் துத் தளர்வுறுபவன் வீரனுகமாட்டான். விக்னங்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக் கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு விடா முயற்சியும் மனிதனுடைய உள்ளத்தில் உரு வெடுக்கவேண்டும். தளர்வுறுபவன் பாராட்டு தலுக்குரியவன் ஆகமாட்டான். விடாமுயற்சி யுடன் தொடுத்த கர்மத்தில் ஈடுபடுபவன் திண்ணியன் ஆகிருன். சோதனைகள் எவ் வளவுக்கெவ்வளவு அதிகரிக்கின்றனவோ அவ் வளவுக்கவ்வளவு சிரத்தையும் உள்ளத்தில் உருவெடுக்கவேண்டும். அத்தகைய தளரா மனப்பான்மை படைத்திருப்பவனே பெரு வாழ்வுக்குத் தகுதியுடையவன் ஆகிருன்.

அம்பிகையினிடத்து மாருத பக்தி வைத் திருப்பவன் நல்ல வீரனுகிருன். அம்பிகைக் கென்றே அரும்பணிகள் ஆற்றி வருபவன் அவளுடைய அன்புக்கு இலக்காகிருன். அம்பி கையின் ஆராதனையை வீரர்கள் பலர் கூடி யிருந்து மிக விமரிசையுடன் நிறைவேற்று கிருர்கள். அம்பிகையின் மகிமைகளைக் குறித்து அன்னவர்கள் ஊக்கத்தோடும், வீரா வேசத்தோடும் பேசிக்கொள்கிருர்கள். அத் தகைய செயல்களும், பேச்சுக்களும் அன் னைக்கு மகிழ்வூட்டுகின்றன. மற்றும் பல பக் தர்கள் அமைதியாக அமர்ந்துகொண்டு அம்பி கையின் தியானத்தில் ஆழ்ந்து மூழ்கியிருக் கின்றனர். அன்னவர்களின் செயல்களையும் அம்பிகை மகிழ்வோடு ஆதரிக்கின்ருள். அம்பி கையின் வழிபாட்டில் ஈடுபடும் ஆத்ம சாதகர் களின் எண்ணிக்கை அதிகரித்தல்வேண்டும். ஒரே லட்சியத்தில் பல பேர் கூடியிருக்குங் கால் அது பாராட்டத்தக்க கோஷ்டி அல்லது திருக்கூட்டமாகிறது. திருக்கூட்டம் பெருகி வருவதும் அம்பிகைக்குப் பெருமகிழ்வை யூட்டு கிறது. இக்காரணங்களையெல்லாம் முன்னிட்டு நல்ல ஆத்ம சாதகன் ஒருவன் ஆர்வத்துடன் நல் லார் கூட்டத்தை வளர்த்து வரக் கடமைப்பட் டிருக்கிருன் என்பது இந்த நாமத்தின் கருத்து.

899. वीरा வீரா — வீரியமே வடிவெடுத் திருப்பவள் என்பது இந்த நாமத்தின்பொருள்.

நிறை நிலையை எட்டிய மாது என்பது இந்த நாமத்தின் பொருள். பகவதியின்கண் அமைந்துள்ள ஆறு மகிமைகளுள் வீரியமும் ஒன்ருகிறது. எங்கு எவ்வுயிரிடத்துப் பராக்ர மத்தையும் பெருவாழ்வையும் பார்க்கின் ருேமோ ஆங்கு அம்பிகையின் சாந்நித்தியம் மிளிர்கிறது என்பது வெளிப்படை. அவள் தன்னுடைய மகிமைகளையெல்லாம் பலப்பல மூர்த்திகளின் வாயிலாக வெளிப்படுத்துகிருள். உலக வைபவத்தில் மாது ஒருத்தி பாராட்டு தற்கேற்ற கணவனையும் ஒழுக்கத்தில் தலை சிறந்த செல்வர்களையும் உடைத்திருப்பாளா கில் அன்னவளை ஒரு வீரமாது என்று மொழிய வேண்டும். அத்தகைய தகைமை அவளுக்கு அன்னையின் அனுக்ரஹத்தில் வாய்க்கிறது. அத்தகைய வீர மாதரசிகளின் தொகை சமஷ்டி எனப்படுகிறது. அந்தச் சமஷ்டியாயிருப்பவள் லலிதாம்பிகை. சதாசிவனை அவள் தனக் கேற்ற கணவனுக உடைத்திருக்கிருள். கண பதியையும், கார்த்திகேயனையும் ஈன்றெடுத்த சிறப்பு அவளுக்கு உண்டு. அறிவுக்கு உறை விடம் விநயகன். ஆற்றலுக்கு உறைவிடம் குமரன். எங்கெல்லாம் அறிவும், ஆற்றலும் ஒன்றுகூடி மிளிர்கின்றனவோ ஆங்கெல்லாம் அம்பிகையின் வீர சாந்நித்தியம் திகழ்கிறது. வீரத்தைப் போற்றுபவன் அம்பிகையை உபா சிக்கிருன். வீரத்தைப் போற்றுதற்கேற்ப அவன் தானே படிப்படியாக நல்ல வீரனுகி

றன். பிரபஞ்ச அமைப்பிலே அன்னை பராசக்தி படைத்திருக்கிற பெரிய திட்டம் இதுவாம்.

900. **ஸ்ரீ நைஷ்கர்ம்யா** – நிராசையில் நிலைத்திருந்து வினையாற்றுபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிரபஞ்சத்தின்கண் உள்ள உயிர் வகைகளனைத்தும் ஆசைக்கு அடிமைப்பட்டுச் செயல்களில் உழன்று வருகின்றன. ஆசை எவ்வளவுக்கெவ்வளவு ஆழ்ந்ததோ வினையின் வேகம் அவ்வளவுக்கவ்வளவு பெரியதாம். வினையைத் தவிர்க்க எவ்வுயிர்க்கும் சாத்தியப்படாது. பிறகு வினை நிறைவேறுதற்கேற்பக் கீழ்நிலையில் உள்ள வாழ்வு மேல்நிலையை நோக்கிப் போகிறது. மேல் நிலைகள் அனைத்திலும் தலை சிறந்ததாயிருப்பது மானுடப்பிறவி. மற்ற உயிர்களிடத்திலிருக்கும் ஆசையைவிடப் பன்மடங்கு அதிகமாக ஆசைக்கு அடிமைப்பட்டிருப்பவன் மனிதன். இந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு அல்லும் பகலும் அவன் ஓயாது உழைத்து வருகிறான். ஓர் ஆசை நிறைவேறுவதற்கு முன்பு மற்றோர் ஆசை அவன் உள்ளத்தில் உருவெடுக்கிறது. இங்ஙனம் ஆசைக்கு அடிமைப்பட்டிருக்கும் மானுடன் ஆழித்துரும்பு போன்று அல்லல்பட்டுக்கொண்டிருக்கின்றான். பல பிறவிகளில் அரிய பாடம் ஒன்றை அவன் அறிய வருகிறான். வேண்டியவாறு விறகுக் கட்டைகளைப் போட்டு எரிகின்ற தீயை எங்ஙனம் திருப்திப்படுத்த முடியாதோ அங்ஙனம் ஆசைகளுக்கு அடிமைப்பட்ட பாங்கில் அவைகளை நிறைவேற்றுவதன் வாயிலாக அவ்வாசைகளை ஒழித்துத்தள்ள மனிதனுக்கு இயலாது. ஆசை அகலுவதன் வாயிலாக உண்டாகும் அகமகிழ்வு ஆசையை நிறைவேற்றுவதன் வாயிலாக அமைவதில்லை என்னும் உண்மையை நீண்ட ஆராய்ச்சியின் பிறகு மனிதன் அறிந்துகொள்ளுகிறான். அதன் பிறகு அவன் அதிவேகம் நிராசையில் நிலைநிற்க முயலுகிறான்.

தனக்காகவெனக் கர்மங்களைப் புரிகிறவன் அப்பாவியாகின்றான். அம்பிகைக்காகக் கர்மம் புரிகிறவன் பரமபக்தனும், போற்றுதற்குரிய வீரனுமாகிறான். அம்பிகைக்காகப் புரியும் செயல்கள் தனக்காகச் செய்யும் செயல்களைவிட எண்ணிக்கையில் பன்மடங்கு அதிகமாகின்றன. ஆயினும் வினைத்தளையில் அவன் கட்டுண்டவன் அல்லன். விச்ராந்தியே வடிவெடுத்தவனாக அவன் மிளிர்கிறான். மனத்தெளிவு தானாக அவனுக்கு வந்து அமைகிறது. அப்பொழுது அன்னையின் மகிமையை உள்ளபடி அறிந்துகொள்ள அவன் வல்லவனாகிறான்.

அன்னை பராசக்தி பிரபஞ்ச நடைமுறைக்கேதுவான பஞ்சகிருத்தியங்களை ஓயாது சாதித்துக்கொண்டே இருக்கிறாள். சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் ஆகியவைகள் பஞ்ச கிருத்தியங்களாம். இவைகளை முறையே படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் எனச் செந்தமிழில் சொல்லுகிறோம். அணுமுதல் அண்டம்வரையில் எல்லாப் பகுதிகளிலும் இந்த ஐம்பெரும் தொழில்கள் அம்பிகையின் ஆதிக்கத்தில் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. அப்படி அவைகள் நிகழ்வதற்கிடையில் இம்மியளவும் அக்கருமத்தில் அவள் கட்டுண்ணாதவளாக இருக்கிறாள். இதுவே அம்பிகையினிடத்துள்ள அதிசயமாம். கண்ணபிரான் போர்க்களத்தில் வைத்து அர்ஜுனனுக்குப் புகட்டிய பாடமும் இதுவேயாம். எந்த ஆத்மசாதகன் இக்கோட்பாட்டை உள்ளபடி அறிந்துகொள்ளுகிறானோ, அறிந்துகொண்டபடி வாழ்க்கையில் அதைக் கடைப்பிடிக்கிறானோ அவனே யோகியாகிறான். வாழ்க்கைத் தத்துவத்தை உள்ளபடி அறிந்தவனாகின்றான். பிறவியில் மேலாம் பயனாகிய அம்பிகையின் அருளுக்கும் பாத்திரமாயிருப்பவன் அவனேயாம். அன்னையின் இந்த அதிசயத்தை எந்த ஆத்ம சாதகன் சரியாக அறிய வருகிறானோ அவனுடைய ஜீவிதமும் இக்கோட்பாட்டுக்கு விளக்கமாகிறது. செயலற்றுச் சும்மாகிடப்பவன் வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்தவனல்லன். ஆசைக்கு அடிமைப்பட்டிருப்பவன் படாடோபத்துடன் செயல்கள் பலவற்றைப் புரிகிறான். அன்னவனும் வாழ்க்கைத் தத்துவத்தை அறியமாட்டான். பயன்படுகின்ற வியவஹாரங்கள் பலவற்றை நிகழ்த்திக்கொண்டிருப்பதற்கிடையில் உள்ளூர தன் சொருபத்தில் யார் ஒருவன் நிலைத்திருக்கிறானோ அன்னவனே மானுடப்பிறவியின் சிறப்பை அறிய வருகிறான். அன்னவனே செயற்கரிய செயல்கள் பலவற்றைச் செய்து சாதிக்கிறான். அதற்கிடையில்

அன்னவனே நைஷ்கர்ம சித்தியாகிய கர்ம அதீதத்தில் நிலைத்திருக்கிறான்.

901. नादरूपिणी நாதரூபிணீ — ஓசை வடிவினள் என்பது இதன் பொருள்.

பிரபஞ்சம் முழுதும் ஓசை வடிவத்திலிருக்கிறது. அந்த ஓசையின் தொகை பிரணவம் அல்லது ஓங்காரம் எனப்படுகிறது. பிரணவத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. அவைகள் முறையே மாத்ரப் பிரணவம் எனவும், அமாத்ரப் பிரணவம் எனவும் இயம்பப்படுகின்றன. செவிக்கு எட்டுகிற பகுதி மாத்ரப் பிரணவம் எட்டாத பகுதி அமாத்ரப் பிரணவம். மேலும் இவை இரண்டும் உச்சரிக்கப்படுவது, உச்சரிக்கப்படாதது எனவும் இயம்பப்படுகின்றன. தோற்றத்துக்கு வந்துள்ள பிரபஞ்சம் யாவும் மாத்ரப் பிரணவத்தின் விளைவு. தோற்றத்திற்கு அப்பாலுள்ள பரவஸ்துவோ சொல்லுக்கு எட்டாதது அப்படியிருந்தும் சொல்லுக்கு எட்டுகிற பகுதியும், எட்டாத பகுதியும் ஒரே வஸ்துவின் இரண்டு கூறுகளாம். சொல்லுக்கு எட்டுகிற பகுதிக்கு நாதப்பிரம்மம் என்பது மற்றொரு பெயர். வித்தின்றி மரமில்லை. வித்து காரணம், மரம் காரியம். அதே விதத்தில் நாதம் காரணம், பிரபஞ்சம் காரியம். காரணமாயிருக்கிற நாதத்துக்கு நாதவிந்து என்பது மற்றொரு பெயர். நாதமானது வித்தாகவிருந்து பிரபஞ்சத்தைத் தோற்றத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. இந்த நாதத்தின் வெவ்வேறு கூறுகளாகப் பிரபஞ்சத்திலுள்ள யாவும் அமைந்திருக்கின்றன. ஆகையால் அவைகளுக்குப் பதார்த்தம் என்பது பொதுப்பெயர். பதமும் அதனுடைய விளக்கமும் என அது இயம்பப்படுகிறது. விதைக்கேற்ற செடி அல்லது மரம் உண்டாவது போன்று சொல்லுக்கேற்ற ஸ்தூலப் பொருள் உண்டாகிறது. ஒவ்வொரு ஜீவனும் ஒருசொல் வடிவினன் அல்லது ஓசை வடிவினன். இத்தகைய ஜீவன் அம்பிகைக்கு அமைந்துள்ள ஏதேனும் ஒரு நாமத்தை முறையாக உச்சரிப்பானாகில் இவனுடைய ஸ்தூல வடிவமும், அதற்கேற்றவாறு திருந்தியமைகிறது. இதுவே மனிதனுக்கு அமைந்திருக்கிற பெரிய பேறும்.

902. विज्ञानकलना விக்ஞானகலனா — பரஞானத்தை உண்டுபண்ணுபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஒரு நாட்டின் சிறப்புக்களைப்பற்றி வேண்டியவாறு புத்தகங்களில் படிக்கலாம். அப்படிப்பினின்று அந்த நாட்டின் பண்புகளையெல்லாம் நன்கு யூகிக்கவும் செய்யலாம். அத்தகைய ஏட்டுக்கல்வியின் விளைவாகவும் சிந்தனை சக்தியின் வல்லமையாலும் அந்த நாட்டைப்பற்றிப் பெரிய சொற்பொழிவுகள் வேண்டியவாறு நிகழ்த்தலாம். விஷயங்களைப் பிழைபோகாமலும் எடுத்துப் பகரலாம். அங்ஙனம் அறிவைப் பெறுவதும் அதைப் பயன்படுத்துவதும் வெறும் கலைஞானத்தின் விளைவாம். நூல்களினின்று பெற்றிருக்கிற புள்ளி விவரங்களை ஏட்டுக்கல்வி என்றுதான் இயம்பவேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது பழமொழி. ஒரு நாட்டைப்பற்றி நூல்கள் பல கற்றான பிறகு அந்த நாட்டை நேரில் சென்று பார்ப்பதின் விளைவாக வருகின்ற ஞானத் தெளிவுக்கு விக்ஞானம் என்றுபெயர்.

இக்காலத்தில் பிரபஞ்ச சம்பந்தமான கல்வியை (Science) விக்ஞானம் என்று கூறுகிறோம். பழைய ஐதிகப்படி விக்ஞானம் என்பது எதைக் குறிப்பிடுகிறது என்பதை நமக்கு நாமே தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும். கடவுளைப்பற்றிச் சாஸ்திரங்கள் மூலமாக அறிந்து கொள்ளுவது ஞானம். சாதனங்கள் புரிந்து மனத்தெளிவடைந்து ஞானக்கண்பெற்றுக் கடவுளைச் சுவானுபூதியில் அறிந்துகொள்ளுவது விக்ஞானம். ஆக ஞானம் விக்ஞானமாக வடிவெடுப்பதே சாதனத்தின் குறிக்கோளாம். இதைக் குறித்து ராமகிருஷ்ண பரமஹம்ச தேவர் இங்ஙனம் பகர்கின்றார். பசுவின் பாலைப் பலபேர் கேட்டிருக்கிறார்கள். அப்படிக் கேட்டிருப்பதை விடக் கண்கொண்டு பார்ப்பது சிறந்தது. பார்ப்பதிலும் பாலைக் கையாளுவது சிறந்தது. கையாளுவதைவிட மேலானது பாலைப்பருகிச் சுவைப்பதாம். பாலைச் சுவைப்பதற்கு நிகர் பரம்பொருளைச் சுவானுபூதியில் அறிந்துகொள்ளுதல். சுவானுபூதியில் அறிந்து கொள்ளுகின்றவனே வாழ்க்கை சம்பந்தமான ஐயங்களனைத்தையும் தாண்டியவனாகிறான். நதி கடலைப்போய்ச் சேருவதற்கு நிகராக விக்ஞானியானவன் தனக்குப் பிறப்பிடமாகிய பரம்பொருளைச் சென்றடைந்தவனாகின்றான்.

பாவ்ஹாரி பாபா

(சுவாமி விவேகானந்தர்)

[262 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பணிவும் ஆத்ம ஞானமும் உருவெடுத்து வாழ்ந்து வந்த மகான் ஒருவருடைய வாழ்க்கையை ஆராய்வோம். காசியை அடுத்த குசி என்னுமிடத்திற்குப் பக்கத்தில் ஒரு கிராமம் இருக்கிறது. ஆங்குப்பிராமணகுடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. அக்குடும்பத்தில் பிற்காலத்தில் பாவ்ஹாரி பாபா என்று அழைக்கப்பட்ட பெரியார் ஒருவர் பிறந்தார். அவர் சிறுவராக இருந்தபொழுது காஜிப்பூரில் தம் மாமனுடன் வசித்துக் கல்வி பயின்று வந்தார்.

சந்நியாசிகள், யோகிகள், வைராகிகள், பந்திகள் என நான்கு பிரிவுகள் ஹிந்து துறவிகளிடையே உண்டு. சந்நியாசிகள் என்பவர்கள் அத்வைதக் கொள்கையைப் பின்பற்றி வரும் சங்கராச்சாரியர் பரம்பரையைச்சார்ந்தவர்கள். யோகிகள் என்பவர்கள் அத்வைதக் கொள்கையைப் பின்பற்றுபவர்கள் எனினும் யோகப் பயிற்சிகளில் சிறப்புற்று விளங்குவார்கள். வைராகிகள் எனப்படுபவர்கள் விசிஷ்டாத்வைதக் கொள்கையைப் பின்பற்றுபவர்கள். அவர்கள் ராமானுஜ ஆச்சாரியர் போன்றவர்களுடைய சிஷ்யர்கள் ஆவார்கள். பந்திகள் என்பவர்கள் விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய இரண்டையும் பின்பற்றுபவர்கள் ஆவார்கள். பாவ்ஹாரிபாபாவின் மாமா ராமானுஜரைப் பின்பற்றினவர் ஆவார். அவர் வாழ்வு முழுவதும் பிரம்மச்சாரியாக இருந்தார். காஜிப்பூருக்கு வடக்கே இரண்டு மைல் தூரத்தில் கங்கைக் கரையில் அவருக்குக் கொஞ்சம் நிலம் இருந்தது. அதில் வீடு கட்டி வாழ்ந்து வந்தார். அவர் பாவ்ஹாரி பாபாவைத் தத்தெடுத்துத் தம்சொத்துக்கு வாரிசாக வளர்த்து வந்தார். இதற்குமேல் பாவ்ஹாரி பாபாவின் குடும்பத்தினரைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை.

பிற்காலத்தில் அவர் சிறந்து விளங்குவதற்கான மேலாம் இயல்புகளின் அறிகுறிகள் எதுவும் அவரிடம் இளமையில் தென்பட்டதாகத் தெரியவில்லை. நியாயம், வியாகரணங்களை அவர் கவனத்துடன் கற்று வந்தார். அவர் சுறுசுறுப்பே வடிவெடுத்தவராக இளமையில் விளங்கினர். படிக்கும் காலத்தில் அவர் தம் சக மாணவர்களை வேடிக்கை செய்து மகிழ்ச்சி அடைவார்.

எதிர்காலத்தில் பரம ஞானியாக விளங்கிய பாவ்ஹாரிபாபா தம் மாணவப் பருவத்தில் பழங்காலத்தில் கல்வி பயின்று வந்த இந்திய மாணக்கர்களுடைய வாழ்க்கைத் திட்டத்தையே பின்பற்றி ஒழுகினர். அவர் கல்வியில் கருத்துடையவராக இருந்தார். மொழிகளைக் கற்பதில் பேரார்வம் உடையவராக இருந்தார். மகிழ்ச்சியும், விளையாட்டும் நிரம்பிய அவருடைய மாணவ வாழ்க்கையில் இவற்றைத் தவிர அவர் எதிர்காலத்தில் மகத்தான தியாகமும், தவமும் உடையவராக விளங்குவதற்கான அறிகுறி எதுவும் வெளிப்படையாகத் தெரியவில்லை.

அவ்விளைஞரின் வாழ்க்கையில் ஏற்பட்ட ஏதோ ஒரு நிகழ்ச்சி வாழ்வின் உயர்ந்த லட்சியத்தைப்பற்றிச் சிந்திக்குமாறு அவரைத் தூண்டியிருக்கவேண்டும். அது வரையிலும் புத்தகத்தைப் படிப்பதில் செலுத்தப்பட்ட அவருடைய கவனம் மனதின் அடித்தளத்தை ஆராய்ச்சிபண்ணும் விஷயத்தில் ஈடுபட்டது நூலறிவில் மட்டும் திருப்தியடையாது மதம் கூறும் உண்மையை அறிய வேண்டுமென்ற ஆவல் அவரிடம் ஏற்பட்டது.

அவரை வளர்த்து வந்த மாமா மரணமடைந்தார். அவ்விளைஞனின் அன்புக்குப் பாத்திரமான மாமாவின் மரணம் அவரைத் துயரத்தில் ஆழ்த்தியது. அவர் உள்ளத்தில் மாமா இருந்த இடத்தில் அழியாத மெய்ப்பொருள் காட்சியை நிலைநாட்டத் தீர்மானம் செய்து சாதனை செய்தார்.

இந்தியாவில் குரு முக்கிய இடம் பெற்றிருக்கின்றார். ஒவ்வொரு துறைக்கும் குரு அவசியமாகக் கருதப்படுகிறார். வழிகாட்டும் குறிப்பேடுகளாக இந்துக்களால் புத்தகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குருவிடமிருந்து சிஷ்யனுக்கு ஒவ்வொரு கலைஞானமும் வருகிறது. மத உண்மைகள் குருவிடமிருந்துதான்

சிஷ்யனுக்கு வந்தாகவேண்டும். பூர்வீகத்திலிருந்து அகவுலகத்தைப் பற்றிய இரகசியத்தை அறிந்து கொள்வதற்கு ஆர்வமிகுந்த சாதகர்கள் தனி இடங்களுக்குச் சென்று அக ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார்கள். இன்றைக்கு ஒரு காடோ, குன்றோ, புனிதமான இடமோ ரிஷியோடு சம்பந்தப்படாதது இல்லை. "ஓடுகின்ற நீரினிடத்தும், சஞ்சரிக்கின்ற சந்நியாசிகளிடத்தும் மாசு படிவதில்லை" என்ற பழமொழி இருந்து வருகிறது.

இந்து துறவிகள் க்ஷேத்திர யாத்திரை செய்வதில் வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழிப்பார்கள். தங்களைத் தூயநிலையில் வைத்துக் கொண்டு தாங்கள் செல்லும் இடங்களிளெல்லாம் சமய உண்மைகளைப் புகட்டுவார்கள். இந்தியாவில் நான்கு திக்குகளிலும் நான்கு புண்ணிய க்ஷேத்திரங்கள் உள்ளன. அந்நான்கு புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் யாத்திரை செல்வது அவசியம் என்று கருதப்படுகிறது.

இக்கருத்துக்களெல்லாம் அவ்விளைஞரின் உள்ளத்தில் இடம் பெற்றிருக்கலாம். ஆனால் இவற்றிற்கெல்லாம் மேலாக ஞானப்பசி அவரிடம் இருந்தது. அவருடைய யாத்திரையைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. அவரிடம் தென்னிந்திய மொழி ஞானம் இருந்தது. வங்காள மொழி ஞானமும் அவரிடம் இருந்தது. ஆகையால் தென்னிந்தியாவிலும், வங்காளத்திலும் அவர் அதிக காலம் தங்கியிருந்தார் என்று ஊகிக்க இடமிருக்கிறது. அவருடைய இளமைப்பருவத்து நண்பர்கள் அவர் சென்றிருந்த ஓர் இடத்தைப் பற்றி மிகவும் வலியுறுத்தியிருக்கிறார்கள். கத்தியவார் என்னும் பிரதேசத்திலுள்ள கிர்னர் என்னும் மலையுச்சியில் யோகத்தைப் பற்றிய இரகசியங்களெல்லாம் அவருக்கு முதன் முதலில் உபதேசிக்கப்பட்டன என்று கூறுகிறார்கள். அம்மலை புத்தமதத்தினருக்கு மிகப் புனிதமாக விளங்குகிறது. அம்மலையினடியில் பெரிய பாறை இருக்கிறது. அப்பாறையில் தெய்வத்தன்மையுடைய அசோக அரசரின் கட்டளைகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அம்மலையின் கீழ்ப்பகுதியில் மரங்கள் அடர்ந்த காட்டினால் மறைக்கப்பட்ட பெரிய கோபுரங்கள் பல நூற்றாண்டுகளாக யாருக்கும் புலப்படாமல் இருந்தன. கிர்னர் மலைத்தொடரைச் சேர்ந்த குன்றுகள் என அவைகளை மக்கள் நெடுங்காலம் கருதி வந்தார்கள். புத்தமதம் எந்த மதத்தினுடைய புதிய தோற்றமாகக் கருதப்படுகிறதோ அந்தப் பழைய மதம் இன்னும் அம்மலையைப் புனிதமாகவே கருதி வருகிறது. உலகப் பிரசித்திபெற்ற புத்தமதம் நவீன இந்துமதத்தில் கலந்து போய்விட்டது. தத்தாத்ரேயர் என்னும் அவதூதர் அம்மலையில் தங்கியிருந்தமையால் அம்மலையை இந்துக்கள் புனிதமாகக் கருதுகிறார்கள். சித்தி பெற்ற யோகிகளை இன்றும் அம்மலையின் உச்சியில் காணலாம் என்ற வதந்தி நிலவி வருகிறது.

காசிக்கு அருகில் கங்கைக் கரையிலுள்ள குகையில் ஒரு சந்நியாசி யோகம் பயின்று வந்தார். பாவ்ஹாரிபாபா அவருடைய சிஷ்யரானது பாவ்ஹாரிபாபாவின் வாழ்க்கையில் ஏற்பட்ட இரண்டாவது திருப்பமாகும். பாவ்ஹாரிபாபாவும் அந்தச் சந்நியாசியைப் போன்றே காஜிப்பூருக்கருகில் கங்கைக்கரையில் பூமியில் ஒரு குகை தோண்டி அதில் வாழ்ந்து வந்தார். சமசீதோஷ்ணமும், இரைச்சல் இல்லாத இடமும் மன அமைதிக்கு ஏற்றவை என்று யோகிகள் கருதுகிறார்கள். ஆகையால் அவர்கள் அத்தகைய இடங்களையும், குகைகளையும் தாங்கள் வசிப்பதற்குத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். அந்தக் காலத்தில்தான் பாவ்ஹாரிபாபா காசியிலுள்ள ஒரு சந்நியாசியிடத்தில் அத்வைதம் கற்றுக்கொண்டார்.

யாத்திரையிலும், சாஸ்திர ஆராய்ச்சியிலும், சாதனையிலும் பல ஆண்டுகளைக் கழித்தபின் தாம் இளமையில் வளர்ந்த கிராமத்துக்கே பாவ்ஹாரிபாபா திரும்பவும் வந்துசேர்ந்தார். பண்டைக்கால ரிஷிகள் கல்விபயின்று வரும் தம் மக்களைப் பார்த்து "குழந்தைகளே! உங்கள் முகத்தில் பிரம்ம தேஜஸ் திகழ்கிறது" என்று பகர்வார்கள். பாவ்ஹாரிபாபாவின் மாமா உயிரோடு இருந்திருந்தால் ஊருக்குத் திரும்பி வந்த பாவ்ஹாரிபாபாவின் முகத்தைப் பார்த்து ரிஷிகள் கூறியது போன்றே பிரம்ம தேஜஸ் திகழ்கிறது என்று கூறி இருப்பார். ஆனால் அவர் அப்பொழுது உயிரோடு இல்லை. பாவ்ஹாரிபாபாவின் இளமைப் பருவத்து நண்பர்கள்தாம் அப்பொழுது அவரை வரவேற்றார்

கள். அவர்கள் அற்ப எண்ணங்களிலும் லௌகீக உழைப்பிலும் ஈடுபட்டவர்களாக அல்லது ஈடுபடப்போகிறவர்களாக விளங்கினார்கள். ஆனால் அவர்களும் பாவ்ஹாரிபாபாவின் முகத்தில் ஓர் அற்புதமான மாற்றம் இருப்பதைப் பார்த்தார்கள். அவரிடமிருந்த அருள் தன்மையை அவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. அவர்கள் உள்ளத்தில் அவர் அடைந்திருந்த அருள்தன்மை எவ்வித ஆன்மீக விழிப்பையும் உண்டுபண்ணவில்லை. இவ்வுலக நிலைக்கு அப்பாற்பட்ட மர்மம் அவரிடம் இருக்கிறது என்றுமட்டும் அவர்கள் எண்ணிவந்தார்கள். அவரிடம் எக்கேள்வியையும் கேட்காது அவருக்கு அவர்கள் மரியாதை செலுத்தினார்கள்.

அவருடைய மகிமை எல்லார்க்கும் விளங்கும் வண்ணம் வெளிப்பட ஆரம்பித்தது. பூமிக்கடியில் ஒரு குகை தோண்டினார். காசியில் வசித்து வந்த தம் நண்பர் போன்று தாமும் அக்குகைக்குள் சென்று பலமணி நேரம் தங்கியிருப்பார். உணவு விஷயத்தில் பயங்கரமான ஒரு கட்டுப்பாட்டை மேற்கொண்டார். சமையல் கலையில் நிபுணராக இருந்தார். இஷ்டதெய்வமாகிய இராமச்சந்திரர் வழிபாட்டிலும், நல்லுணவு சமைப்பதிலும், தாம் சமைத்த உணவை இஷ்டதெய்வத்துக்கு நிவேதனம் செய்து அதை அன்பர்களுக்கும், ஏழைகளுக்கும் படைப்பதிலும் நாள் முழுவதும் கடுமையாக உழைப்பார். இரவு படுக்கைக்குப் போகும்வரையில் மற்றவர்களுக்குச் சேவை செய்வதிலேயே ஈடுபட்டிருப்பார். ஆசிரமத்திலிருப்பவர்கள் யாவரும் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது தாம் மட்டும் தனியாகக் கங்கையை நீந்திக் கடந்து அக்கரைக்குச் செல்வார். அங்கு இரவு முழுவதையும் பிரார்த்தனையிலும், சாதனையிலும் கழிப்பார். விடிவதற்கு முன் ஆசிரமத்துக்குத் திரும்பிவிடுவார். ஆசிரமத்துக்கு வந்து அன்பர்களை எழுப்பிவிடுவார். பிறகு தம் வழக்கமான பூஜையிலும், அன்பர் பணியிலும் ஈடுபட்டு விடுவார்.

அவர் தாம் உட்கொள்ளும் உணவைக் குறைத்துக்கொண்டே வந்தார். கைப்பிடியளவு வேப்பிலை அல்லது சிறிய அளவு மிளகு—இந்த அளவுக்கு அவர் தினசரி உணவைக் குறைத்துக்கொண்டார். இரவில் கங்கையைக் கடந்து அக்கரைக்குப் போவதை நிறுத்திவிட்டுத் தம் குகையிலேயே எல்லா நேரமும் தங்கியிருக்க ஆரம்பித்தார். நாட்கணக்காகவும், சில சமயம் மாதக்கணக்காகவும் குகைக்குள் தியானத்தில் மூழ்கியிருந்து பிறகு வெளி வருவாராம். அப்படி இருக்கும்பொழுது அவர் எதை உண்டு வாழ்ந்து வந்தார் என்பது யாரும் அறியார். காற்றையே உணவாகக் கொண்டு வாழ்ந்திருப்பார் என்று மக்கள் எண்ணியதால் "காற்றையே உணவாக உண்டு வரும் தந்தையார்" என்று பொருள் படுமாறு அவரைப் பாவ்ஹாரி பாபா என்று அழைத்தார்கள்.

அவ்விடத்தை விட்டு அவர் அதன் பிறகு நகரவே இல்லை. "தனித்திரு" என்று யோக நூல் கூறுகிறது. தனித்திருப்பது ஓர் அரிய சாதனையாகும். மனபரிபாகம் அடைந்தவர்கள்தாம் தனிமையில் இனிமை காணமுடியும். மனபரிபாகம் அடையாதவர்களுக்குத் தனிமை பெருந்தண்டனையாகும். தனிமையில் இருக்கும் பொழுதுதான் மனதின் இயல்புகளெல்லாம் எண்ணங்களாகத் தோன்றி வரும். தனிமையில் நெடுங்காலம் இருந்து ஒருவருக்குப் பைத்தியம் பிடிக்காமலிருந்து விட்டால் அவரை மனபரிபாகம் அடைந்தவரென்றே சொல்லலாம். பாவ்ஹாரி பாபா தனிமையில் நெடுங்காலம் வாழ்ந்திருந்தார். ஒருசமயம் அவர் குகைக்குள் நெடுங்காலம் தங்கி விட்டார். மக்கள் அவரை இறந்து போய்விட்டார் என்று எண்ணிவிட்டார்கள். நீண்டகாலத்துக்குப் பிறகு அவர் குகையை விட்டு வெளியே வந்தார். வெளியே வந்ததும் ஏராளமான சாதுக்களுக்கு விருந்து படைத்தார். தியான நேரம் போகப் பாக்கி நேரத்தில் தம் குகைவாயிலின் மேலே இருந்த அறையில் தங்கி இருப்பார். அப்பொழுது அவரைக் காணவரும் பக்தர்களுக்குத் தரிசனம் தருவார். அவர் புகழ் எங்கும் பரவ ஆரம்பித்தது. இராய்கக்கன் சந்திரராய் பகதூர் என்ற பெயருடைய கனவான் காஜிப்பூரில் இருந்தார். அவர் பெருந்தன்மையும், ஆன்மீக நாட்டமும் உடையவர் அவர் பாவ்ஹாரி பாபாவைப் பலருக்கும் அறிமுகம் செய்துவைத்தார்; எனக்கும் அறிமுகம் செய்து வைத்தார். (தொடரும்)

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (284) *பிறரிடத்துக் குற்றம் காணுதிருந்து பழகு என்பது அன்னை சாரதாதேவியாரின் உபதேசமொழி. குற்றத்தை எடுத்துக் காட்டினல்தானே மற்றவர்கள் திருந்துவார்கள்.*

அன்னை சாரதாதேவியார் தமது ஜீவிதத்தில் எந்த நல்லொழுக்கத்தைப் பழகினரோ அதே நல்லொழுக்கத்தை அவர் மற்றவர்களுக்கும் எடுத்துப் போதித்தார். அவர் பரமஹம்ச தேவரோடு தக்ஷிணேசுவர ஆலயத்தில் வாழ்ந்திருந்தபொழுது தீவிரமான ஆத்ம சாதனங்களில் ஈடுபட்டிருந்தார். அக்காலத்தில் அவர் நிறை நிலாவைப் பார்த்து இங்ஙனம் பிரார்த்தனை பண்ணினர். ''வெண்ணிலாவே! நீ உலகனைத்துக்கும் இனிமையையே வழங்குகின்ருய். யாருக்கும் நீ இன்னுதது செய்வதில்லை. உன்னைப் போல் நானும் மாசற்றவள் ஆவேனுக. வெண்ணிலாவே உன்னிடத்தும் ஆங்காங்குச் சிறு கறைகள் தென்படுகின்றன. அத்தகைய மாசு ஏதும் என் உள்ளத்தில் படியாதிருக்கும்படி நீ என்னை ஆசிர்வதிப்பாயாக. யாரிடத்துமே நான் குற்றம் காணலாகாது. ஆங்காங்கு இருக்கும் குணங்களே என் உள்ளத்தில் படிவனவாகுக.'' இது அன்னையாரின் பிரார்த்தனை. அதன்படியே அவருடைய ஜீவிதம் புனிதமானதாக அமைந்திருந்தது. எத்தகைய குணக்கேடரிடத்தும் கேடு காணுத தூய மனம் படைத்தவராக அவர் வாழ்ந்திருந்தார்.

பிற்காலத்தில் அன்னையாரின் தோழியாகிய யோகினி அம்மை வேலைக்காரி ஒருத்தியிடம் அமைந்திருந்த குறைகளை முன்னிட்டு அவள் மீது சீற்றம் கொண்டு வன்மொழிகளை வேண்டியவாறு கையாண்டாள். அதைக் கேட்ட அன்னையார் ''யோகினி யாண்டும் இன்சொற்களையே இனிது எடுத்து வழங்கு. யாரையும் கடிந்துகொள்ளவேண்டாம்'' என்ருர். அதற்கு மறுமொழியாக யோகினிஅம்மை விருவிருப்புடன் கொடுத்த விடையாவது: ''தாயே நான் ஏன் கோபித்துக் கொள்ளுகிறேன் என்பதைத் தங்களிடம் சொல்லுதலில் பயன் ஏதுமில்லை. பிறர் செய்த குற்றத்தை எவ்வளவுதான் எடுத்து விளக்கினலும் தாங்கள்தாம் அதைக் குற்றமாகக் கருதுவது இல்லையே.'' அருள் அன்னையார் இயம்பிய மறுமொழியாவது: ''குற்றம் காணுகிற பாங்கிலேயே உலகம் போய்க் கொண்டிருக்கிறது. நான் ஒருத்தி மட்டும் குற்றம் காணுவிட்டால் அது உலகத்துக்கு நஷ்டம் ஆகாது.''

அன்னையார் படைத்திருந்த பொறுப்புணர்வும் அருள்நிலையும் உலகைப் பெரிதும் ஒழுங்குப்படுத்துவதற்கு உதவின. அன்னையார் கையாண்டு வந்த பூமாதேவிக்கு நிகரான பொறை நிலையை வேறு யாரும் எளிதில் பெற முடியாது. ஆயினும் உலகிலுள்ள குறைநிலைகளை நிறை நிலைகளாக மாற்றியமைப்பதற்கு அன்னையார் கையாண்ட முறையே சாலச் சிறந்த முறையாகும்.

இனி, நம் போன்றவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதுதான் ஈண்டு எழுகிற கேள்வியாகும். நாம் நெருங்கிப் பழகுகிற மக்களிடத் துக்காணும் குறைகளை அன்போடும், அனுதாபத்தோடும் எடுத்துக் காட்டலாம். அப்படிக் காட்டுதலிலும் சீர்மை ஒன்று உண்டு. ஏளனம் பண்ணுகிற போக்கிலோ, அவமானப் படுத்துகிற போக்கிலோ குற்றத்தை எடுத்துக் காட்டினல் அதினின்று நலன் ஏதும் விளையாது. தக்க சந்தர்ப்பம் பார்த்து அமைதியாகவும், மறைமுகமாவும் அதை நம்மோடு சம்பந்தப்பட்டவர்களிடம் எடுத்துக் காட்டுவது முறை.

நமக்கு வேற்ருராகவிருப்பவர்களிடம் காண்கிற குறைகளைப் பெரிதும் கருத்தில் வாங்கிக் கொள்ளலாகாது. பார்க்குமிடமெல்லாம் குறை காண்கிற மனப்பான்மையை நாம் வளர்த்தால் நாம் ஒருபொழுதும் முன்னேற்றம் அடையமாட்டோம். அகத்தில் இருப்பதைத்தான் நாம் புறத்தில் காண்கிருேம். அகத்தில் தெய்விகத்தை வளர்க்க வளர்க்கப் புறத்திலும் அத்தெய்விகத்தைக் காணும் நல்லியல்பு தானுக வந்து வாய்க்கிறது.

கேள்வி: (285) *யோகத்தால் நோயைக் குணப்படுத்த முடியுமா?*

யோகத்தில் பல தரங்கள் இருக்கின்றன. சுயநலம் கருதாது பிறர்க்குப் பணிவிடை

பண்ணுவது கர்மயோகம். ஒழுக்கத்தின் வாயிலாக மனதையும் இந்திரியங்களையும் பண்படுத்துவது ராஜயோகம் அல்லது அஷ்டாங்க யோகம். இறைவனிடத்தும் உயிர்களிடத்தும் பூணுகிற பேரன்புக்குப் பக்தியோகம் என்னும் பெயர் வந்துள்ளது. ஆத்மாவானது உடலின் கூறுகளுக்கு அப்பாற்பட்டது என்பதைப் பழக்கத்தால் நிலைநாட்டுவது ஞானயோகமாகும். இந்த ஞானயோகத்தின்படி உடலைத் தாக்குகிற நோயைச் சகித்துப் பழகுதல் ஓர் ஆத்மசாதனமாகிறது. இந்தச் சாதனம் திதிக்ஷை எனப் பெயர் பெறுகிறது. உடலை வாட்டுகிற நோயை மனதில் வாங்காது இருந்தால் அன்னவன் மன அமைப்பில் நோயற்றவன் ஆகிறான்.

ராஜயோகத்துக்கு முன்னோடியாயிருப்பது ஹடயோகம். உடலை யாண்டும் நோயற்றதாக வைத்திருப்பதே இந்த யோகத்தின் குறிக்கோளாகும். உண்பதிலே, உழைப்பதிலே, உறங்குவதிலே, ஓய்வு எடுத்துக்கொள்ளுதலிலே யாண்டும் ஒழுங்குப்பாட்டோடு இருப்பவனைப் பெரிதும் நோய்வந்து தாக்குவதில்லை. கடினமான நோய் ஏதாவது வந்தால் அது பிராரப்தத்தின்விளைவாம். சிறிய நோய்கள் காலத்தையும் இடத்தையும் சீத உஷ்ணத்தையும் அடிப்படையாகக் கொண்டவைகள். உணவை மாற்றியமைப்பதன் வாயிலாகவும், யோகாசனங்கள் வாயிலாகவும்,பிராணயாமத்தின் வாயிலாகவும் நோய் வாராது தடுக்கலாம் என்றும், வந்த நோயை நீக்கலாம் என்றும் ஹடயோக சாஸ்திரம் விரிவாக விளக்குகிறது. ஆனால் ஹடயோக நிபுணன் யாரையும் இக்காலத்தில் காண்பது அரிது. வெறும் நூலறிவைக் கொண்டு பொருந்தாத சிகிச்சை முறைகளை மானுடன் ஒருவன் கையாள முயன்றால் அதன் விளைவாக நோய் பெரிதும் வலுத்துவிடும். ஆதலால் விஷயம் தெரியாது ஹடயோக சிகிச்சை முறைகளை யாரும் கையாளலாகாது. சான்று ஒன்று எடுத்துச் சொல்லலாம். பொருந்தாத பாங்கில் பிராணயாமம் பண்ணி மண்டையிடியையும், நரம்புத்தளர்ச்சியையும் தேடிக்கொண்டவர்கள் பலபேர் இருக்கின்றனர். அன்னவர்களைப் பார்த்து மற்றவர்கள் எச்சரிக்கையுடன் நடந்துகொள்வார்களாக.

கேள்வி: (286) பழநிக்குப் போகிறவர்கள் காவடி எடுக்கிறார்கள். சுப்பிரமணியருக்கும், காவடிக்கும் என்ன சம்பந்தம்?

கடவுள் வழிபாடு சம்பந்தமான செயல்களும் விரதங்களும் வாழ்க்கை முறைகளும் பல இருக்கின்றன. அவைகளை முறையாகக் கையாண்டால் மனிதனுடைய மனப்பான்மை திருந்தப் பெறுகிறது. மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்தறன் என்பது கோட்பாடு. சமய அனுஷ்டானங்கள் பெரிதும் மனதைப் பண்படுத்துவதற்கென்றே அமைந்திருக்கின்றன. பழநிக்குச் செல்லும் பக்தர்கள் நெடுநாளாகக் காவடி எடுத்துச் செல்லும் வழக்கத்தைக் கையாண்டு வந்திருக்கின்றனர். இன்றைக்குப் பயணம் பெரிதும் புகைவண்டியிலும், மோட்டார்வண்டியிலும் நடைபெறுவதால் பழநிக்குக்காவடி எடுத்துச்செல்லும் பழக்கம் பின்னணிக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அந்த ஸ்தலத்தைச் சென்றடைந்தவர்களில் பலர்மலையைச் சுற்றிவரும்பொழுதும், மலையின் மீது ஏறும்பொழுதும் முருகன் சந்நிதி வந்து சேரும் வரையில் காவடியைத் தோளில் எடுத்துச் சென்றுவருகின்றனர். அவைகள் பெரிதும் பால் காவடிஎன்றும், இளநீர்க்காவடி என்றும், சர்க்கரைக் காவடி என்றும் பெயர் பெறுகின்றன. பக்தி பூர்வமாக அவைகளை ஆராதனைக்காக ஆண்டவன்முன்னிலைக்குத் தூக்கிச்செல்லுவது அதன் நோக்கமாகிறது. பழைய முறைப்படி ஐம்பது மைல் அறுபது மைல் தூரத்திலிருந்தவர்கள் அவரவர் ஊரிலிருந்தே காவடிகளை எடுத்துக்கொண்டு வழிநெடுக முருகனுடைய நாமத்தையே ஓதிக்கொண்டு நடந்து போனார்கள். அப்படிச் செய்ததின் விளைவாக அவர்கள் பண்பாடு அடைந்ததுமன்றி அக்காட்சியைப் பார்த்தவர்கள் உள்ளத்திலும் பக்தி பெருக்கெடுத்தது. நெடுந்தூரத்திலிருந்து வந்த அக்காலத்தில் சர்க்கரைக் காவடிதான் பழக்கத்திலிருந்து வந்தது. பழனி ஸ்தலத்தை எட்டிய பிறகே பால்காவடி தயிர்க்காவடி முதலியன கையாளப்பட்டன. பார்க்கிற மக்கள் எல்லார் உள்ளத்திலும் பண்பையும், பக்தியையும் ஊட்டுதற்குக் கந்தனின் வழிபாட்டுக்குக் காவடி எடுக்கும் பழக்கம் யாண்டும் நிலைத்திருப்பது முற்றிலும் அவசியமாகிறது.

வாசுதேவ மனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

ஆத்மாவின் சித் ரூபத்தை (அறிவு மயம்) அறிந்துகொள்வோம். சூரியன் முதலிய இதரப் பிரகாச வஸ்துக்களின் உதவி இல்லாமல் தானே பிரகாசித்துக்கொண்டு அதன் பேரில் சுமத்தப்பட்ட சகல ஜடபதார்த்தங்களை யும் விளங்கும்படி செய்வதுதான் சித்ரூபம் எனப்படுகிறது. இந்த லக்ஷணம் ஆத்மாவில் இருக்கிறது. எப்படியெனில் கார் இருளிலும் வேறு ஒன்றின் உதவியின்றி ஆத்மா தானே பிரகாசிக்கிறது. அதாவது தன் சரீரத்தைக் கூடப் பார்க்க முடியாத மை இருட்டில் ஒருவன் இருந்தாலும் தான் இருப்பதைத் தானே உணர்கிறான். தன்னைத்தானே உணர்கிற, அறிகிற இந்த அறிவைத்தான் ஆத்மப்பிரகாசம் என்கிறார்கள். இந்த ஆத்மப் பிரகாசத்தின் துணைகொண்டே இதரப் பிரபஞ்சப் பொருள்களையெல்லாம் அறிகிறான். ஆத்மாவை அறிவதற்கு இப்பிரபஞ்சப் பொருள்கள், வெளிச்சங்கள் உதவமாட்டா. ஆத்மப்பிரகாசமே இப்பிரபஞ்சப் பொருள்களையெல்லாம் அறிய உதவுகிறது. இந்த ஆத்மாவின்பேரில் சுமத்தப்பட்டிருக்கிற சரீரத்தின் தர்மங்களான குழந்தை, இளமை, முதுமை ஆகிய நிலைகளையும் அந்நிலைகளில் ஏற்படும் காரியங்களையும் மற்றவற்றின் உதவியின்றி ஆத்மா நன்றாக அறிகிறது. ஆகவே ஆத்மா சித்ரூபம் அதாவது அறிவும் உணர்வும் உடையது, அறிதலும் உணர்தலும் அதன் லக்ஷணம் என்று தீர்மானமாகிறது.

கேள்வி: நமக்குச் சர்வக்ஞத்வம் (எல்லாம் அறிந்த நிலை) இல்லாததால் எல்லாப் பதார்த்தங்களையும் விளங்கச் செய்யும் சக்தி நமக்கு எப்படி வரும்?

பதில் : பிரபஞ்சம் இருவகைப்படும். வெளிப் பிரபஞ்சம், உள் பிரபஞ்சம் என அவைகள் பிரிக்கப்படுகின்றன. இவ்விரு பிரபஞ்சங்களும் நம்மால்தான் விளங்கும்படி செய்யப்படுகின்றன. இப்பிரபஞ்சத்தால் நாம் பிரகாசப் படுத்தப்படவில்லை. எப்படியெனில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் (நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி) என்ற பஞ்ச பூதங்களையும்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற அவைகளின் தன்மாத்திரைகளையும்; சூக்ஷ்ம பூதங்கள், ஸ்தூல பூதங்கள், பிரம்மாண்டம், பதினான்கு லோகங்கள் என்பனவற்றையும்; நான்குவித ஸ்தூல சரீரங்களையும்; பலவிதமான பெயர், உருவம், குணம், தர்மம், மாறுபாடு அடையும் சக்தி ஆகியவைகளையும் நாம் அறிகிறோம். இவைகள் எல்லாம் அடங்கப்பெற்றதாக, இவைகளின் நிலைக்களமாக, மேடையாக, அரங்கமாக இருப்பது வெளிப் பிரபஞ்சம் எனப்படுகிறது. இப் பிரபஞ்சத்தை இங்ஙனம் துருவி ஆராய்ந்து நாம்தாம் அறிகிறோம். நம்மை இப்பிரபஞ்சம் அறிகிறதில்லை. இங்ஙனம் உள் முகமாக விசாரித்துப் பார்க்கும்போது வெளி உலகைப் பிரகாசப் படுத்தும் தன்மை நமக்கு இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

இனி, உள் உலகத்தைப் பிரகாசப்படுத்தும் தன்மை நமக்கு இருப்பதை அறிந்து கொள்வோம். உள் உலகம் என்பது அன்னமய கோசம் முதல் ஜீவன் முக்தி நிலைவரை பலவாறாகப் பிரிந்துள்ளது. அதாவது: அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆனந்தமயம் என்று ஐந்து கோசங்களையும் ஸ்தூல, சூக்ஷ்ம, காரணமாகிய சரீரத்திரயங்களையும், சரீரத்தின்ஆறுவித மாறுபாடுகளையும் (குழந்தைப் பருவம்-பிள்ளைப் பருவம், மாணவப் பருவம்-வாலிபப் பருவம் முதிர்ந்த மனிதப் பருவம்-வயோதிகப் பருவம்) நமது வாழ்க்கை முறை, பண்பாடு, சமூகப் பொறுப்புக்களையும் (வர்ண ஆச்ரம தர்மங்களையும்) ஆறுவித ஊர்மிகளையும் (ஊர்மி என்றால் அலை. அலை கடலில் தோன்றித்தோன்றி மறைகிறது. அது போன்று ஓயாமல் இந்த ஜீவ யாத்திரையில் திரும்பத் திரும்ப ஒவ்வொரு பிறவியிலும் வருகின்ற கிழத்தனம், மரணம், பசி, தாகம், ராகம், துவேஷம் ஆகிய இந்த ஆறுக்கும் ஊர்மிகள் என்று பெயர்) அறியாமை, மந்த தன்மை, சுறுசுறுப்பு, விருப்பு, வெறுப்பு ஆகியவைகளையும், மனம்,வாக்கு,காயம் என்னும் திரிகரணங்களையும், ஜாக்கிரத, சொப்பன,

சுஷுப்தி ஆகிய அவஸ்தா திரயங்களையும், ஞானேந்திரியம், கர்மேந்திரியம் ஆகிய பத்து இந்திரியங்களையும், பஞ்சபிராணன், பஞ்ச உப பிராணன்களையும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களையும், சங்கல்பம், தீர்மானம், கவனம், பற்றுதல் ஆகியவைகளையும், இவன் விசுவன், இவன் தைஜசன், இவன் பிராக்ஞன் என்கிற பாகுபாடுகளையும், இது பிராதிபாஸிகம், இது வியவஹாரிகம், இது பாரமார்த்திகம் என்று ஸத்தின் மூவித நிலைகளையும், ஸாத்விக, ராஜஸ, தமோகுணங்களையும், சுக, துக்க அனுபவங்களையும், ஞான அக்ஞானங்களையும், இது பிரியமானது, இது வெறுப்புக்குரியது, இது உபேக்ஷை, இது சாதன சதுஷ்டயம் [நித்திய அநித்திய வஸ்து விவேகம், இஹ அமுத்ர அர்த்த பல போக விராகம், இம்மையிலும் மறுமையிலும் கிடைக்கக்கூடிய விஷய போகங்களில் பற்றின்மை சமாதி ஷட்கம், முமுக்ஷுத்வம்] இவை மைத்ரீ, கருணை, முதிதை, உபேக்ஷை, இது அஷ்டாங்க யோகம், இது சிரவணம், மனனம், நிதித்யாசனம், இது சமாதி, இது பிரமாணம், இது அறியப்படுவது, இவன் அறிகிறவன், இது தாபத்ரயம், இது ஆதி (மனதில் உள்ளது), இது வியாதி (சரீரத்தில் உள்ளது), இது ஆரோக்கியம்,இது பக்தி, இது வைராக்கியம், இது மந்தம், இது தீவிரம், இது அதிதீவிரம், இது ஸகுண உபாசனை, இது மனோ நாசம், இது வாசனா க்ஷயம் (சம்ஸ்காரங்களின் அழிவு), இது விதேஹகைவல்யம், இது ஜீவன் முக்தி ஆகிய இவைகள் யாவற்றையும் அடக்கிக் கொண்டிருப்பது, இவையாவும் அடங்கப் பெற்றது, இவை யாவற்றுக்கும் ஆதாரமாய் இருப்பது உள்பிரபஞ்சம் எனப்படுகிறது. இவ்வேற்றுமைகள், வெவ்வேறு பெயர், ரூபம், குணம், மாறுதல்கள், சக்திகள் இவைகள் ஒவ்வொன்றும் தனித்தனியே நம்மால் அறியப்படுகிறது. இந்த உள் பிரபஞ்சம் நம்மை அறிவதில்லை. நாம் அதை அறிகிறோம். ஆகவே ஆத்மா எல்லாவற்றையும் அறிவதாலும், வேறு ஒன்றினாலும் ஆத்மா அறியப்படாததாலும் ஆத்மா சித் ரூபமானது என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

கேள்வி: ஆத்மா சித்ரூபி. அது யாராலும் அறியப்படுவதில்லை என்று சொல்லப்பட்டது. மனதுக்கு எல்லாம் தெரிகிறதே, ஆத்மாவையும் அதே மனதால் அறியமுடியாதா?

பதில்: மனம் என்பது உண்டாகி அழியக் கூடியது. ஸங்கல்ப, விகல்ப ரூபமானது, அளவுக்கு உட்பட்டது. மண்ணால் ஆன குடம் போன்று பஞ்சபூதங்களால் ஆனது. காமம் முதலிய விகாரங்களால் கலங்குவது. ஞாபகம் மறதி இவைகளுடன் கூடியது. இப்பேற்பட்ட மனம் ஜடம் என்று தெரிந்துகொள்ளவேண்டும். இந்த மனதுக்குப் பிரகாசத்தன்மை இல்லை. இப்படிப்பட்ட ஜடமான மனது சுயம் பிரகாசமுடைய சித்தை எப்படி அறிய முடியும்? ஒரு விதத்திலும் அறிய முடியாது.

கேள்வி: அப்படியானால் मनसैवानु द्रष्टव्यम्—மனதால்தான் ஆத்மாவை அறியவேண்டும் என்கிற வேத வாக்கியத்தின் பொருள் என்ன?

பதில்: அக்னியில் தங்கத்தை வைத்துக் காய்ச்சினால் காய்ச்சப்பட்ட தங்கத்துக்குப் பிரகாசம் உண்டாகிறது. இதனால் தங்கத்தினிடத்தில் ஏற்கனவே இல்லாத பிரகாசத்தைப் புதிதாக அக்னி உண்டுபண்ணவில்லை. அக்னியினால் தங்கம் காய்ச்சப்பட்டவுடன் அதன்மேல் உள்ள அழுக்குநீங்கி அதன் இயல்பான பிரகாசத்துடன்விளங்குகிறது. புதிதாகப் பிரகாசம் உண்டுபண்ணப்படவில்லை. புதிதாகத் தங்கத்தில் அக்னியினால் பிரகாசம் உண்டாக்கப்படுகிறது என்றுகொள்வோமேயானால் சூளையில் வைக்கப்பட்டிருக்கும் செங்கல்லிலும் மண்பானையிலும் இந்தப் பிரகாசம் உண்டு பண்ணப்படவேண்டுமே. அப்படி இல்லையே. இதேபோன்றுமேலே சொன்னவேதவாக்கியத்துக்கு அர்த்தம் பண்ணவேண்டும். மனது ஆத்மாவின் ரூபமாக மாறி ஆத்மாவின் பிரதிபிம்பத்துடன் கூடிக்கொண்டு ஆத்மாவை மறைக்கிறதும் பொய்யானதும் அனாதியுமான அக்ஞானத்தைப் போக்குகிறது. இந்த அக்ஞானம் நீங்கியதும் ஆத்மா தானாகவே விளங்குகிறது என்றுதான் அந்த வேத வாக்கியத்துக்கு அர்த்தம் சொல்லவேண்டும். மனதும் ஆத்மாவால்தான் அறியப்படுகிறது. மனதினால் ஆத்மா அறியப்படவில்லை. இதற்கு ஓர் உதாரணம் சொல்லலாம். இருளைப் போக்கத் தீபத்தைப் பயன்படுத்துகிறோம், விளக்கு,

திரி, எண்ணெய் இந்த மூன்றுமட்டும் இருந் தால் இருள் நீங்காது. வெளிச்சத்துக்குக் காரணமாக இருக்கும் எங்கும் நிறைந்துள்ள அக்னியும் இந்த உபகரணங்கள் இல்லாமல் தானாகவே இருளைப் போக்கமுடியாது. இருந்த போதிலும் அந்தத்திரியுடன் சேர்ந்த அக்னி தீபம் என்கிற பெயர்கொண்டு இருளைப் போக்குகிறது. இதேபோன்று விளக்கு ரூப மான சரீரத்தில் கர்மா (வினைப்பயன்) என் கிற எண்ணெயுடன் கூடிய மனது என்கிற திரியில் அக்னிரூபமான ஆத்மா சேர்ந்து அத னுடன் ஒன்றாகக் கலந்து ஜீவன் என்கிற பெயரையும் ஏற்று விஷயங்களை மறைக்கும் அஞ்ஞான இருளை நீக்கித் தீபம் புறவஸ்துக் களை விளக்குவது போன்று உள்ளேயும் வெளியேயும் உள்ள விஷயங்களைப் பிரகாசப் படுத்துகிறது. தீபமானது எப்படித் தான் ஒளி மயமாய் இருந்துகொண்டு தனது பிரகா சத்தால் தன்னுடன் சேர்ந்த பொருள்களையும் பிரகாசப்படுத்துகிறதோ அப்படியே ஆத்மா வும் அந்தக்கரணத்தில் இருந்துகொண்டு தனது சைதன்யத்தால் தானே பிரகாசித்துக்கொண்டு தன்னுடன் தொடர்பு கொள்கிற எல்லா வஸ்துக்களையும்பிரகாசப்படுத்துகிறது.ஆகவே ஆத்மா சித்ரூபம் என்று தீர்மானமாகிறது.

இனி ஆத்மா ஆனந்தரூபமானது என்பதை அறிந்துகொள்வோம்.சாஸ்வதமானதும், வேறு ஒன்றின் மூலம் ஏற்படாததும், நிரதிசயமான தும், தன்னைவிட வேறு உயர்ந்தது இல்லாத தும் ஆன சுகம், இன்பம் எதுவோ அதுவே ஆனந்தம் எனப்படுகிறது. இதுதான் ஆத்மா வின் சொரூபம். மாலை, சந்தனம், ஸ்திரீ இவைகளை அனுபவிப்பதனால் ஏற்படும் சுகம் அநித்தியமானது. ஏனென்றால் அது ஒரு வஸ்துவின் உதவியால் உண்டானது. எல்லா உயிர்வகைகளும் சரீர சுகத்தில் பெரு விருப் பம் வைத்திருக்கின்றன. அதனால் பெரிதும் கவர்ந்து இழுக்கப்படுகின்றன. இத் தன்மை யினால் அது ஆத்ம சொரூபம் ஆகமாட்டாது. முன்பு விளக்கப்பட்ட லக்ஷணங்களுடன் கூடிய ஆனந்தமே ஆத்ம சொரூபம் ஆகும். சுஷுப்தி யில் அடையும் ஆனந்தத்தில் ஆத்ம சொரூப ஆனந்தத்தின் அடையாளம் இருப்பதால் அந்த ஆனந்தமே நாம் என்று அறியவும்.

கேள்வி: ஆழ்ந்த உறக்கத்தில் துக்கமின்மை காணப்படுகிறதே தவிர ஆனந்த அனுபவம் காணப்படுவதில்லையே. ஆகவே கனவற்ற உறக்கத்தில் ஆனந்தத்தின் அடையாளம் உண்டு என்று எப்படிச் சொல்வது?

பதில்: உலகில் தூங்கி எழுந்தவன் "நான் இவ்வளவு காலம் சுகமாகத் தூங்கினேன்" என்று தான் தூக்கத்தில் அனுபவித்த சுக சொரூபத்தைச் சொல்கின்றான். ஆகையால் சுஷுப்தியில் எல்லாருக்கும் சுவானுபவத்தில் ஆனந்தம் இருப்பது உறுதியாகிறது.

கேள்வி: அப்படியானால் மேலே சொல்லப் பட்ட ஆனந்த லக்ஷணதிரயம்—நித்யத்வம், நிர்உபாதித்வம், நிரதிசயத்வம் (அழியா தது, எதிர்ச் செயல் இல்லாதது, பிறபொரு ளின் துணையின்றி, சேர்க்கையின்றி ஏற்படு வது, அதைவிடமேலான ஆனந்தம் வேறில்லை, ஆனந்தத்தில் மிக மேலானது, ஒப்பற்றது) சுஷுப்தி ஆனந்தத்தில் இருக்கின்றதா?

பதில்: முதலில் வேறு ஒன்றின் ஆசிரயம் இன்மை (துணை இன்றி) பற்றித் தெரிந்துகொள் வோம். சந்தனம், புஷ்பம், ஸ்திரீ முதலான விஷயங்கள் உபாதிகள். இவைகளால் அடையும் சுகம் சௌபாதிகம்—சஉபாதிகம்— உபாதியோடு கூடியது எனப்படுகிறது. இந்த உபாதிகளில் ஒன்றுகூட சுஷுப்தியில் இல்லை. ஆனாலும் எல்லாராலும் சுஷுப்தியில் சுகம் அனுபவிக்கப்படுகிறது. ஆகையால் சுஷுப்தி யில் வேறு காரண மற்ற சுகம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். அடுத்து அதன் உயர்ந்த தன்மை அதனிலும் மிக்கது இல்லாதது எப்படி என்று தெரிந்து கொள்வோம். தைத்ரீய உபநிஷதத்தில் மனுஷ்ய ஆனந்தம் முதல் ஹிரண்யகர்ப்பரின் ஆனந்தம்வரை பதினொரு வகையான ஆனந்தங் கள் சொல்லப்பட்டுள்ளன. இவை ஒன்றுக் கொன்று நூறு மடங்கு அதிகமானவை என விளக்கப்பட்டுள்ளன. இவை உயர்வு தாழ்வு உள்ளவை. இந்த ஆனந்தங்கள் எல்லாவற் றுக்கும் மேற்பட்டது பிரம்மானந்தம். இதை விட உயர்ந்த ஆனந்தம் இல்லை. ஆகவே இது நிரதிசயமானது எனப்படுகிறது. இந்தப் பிரம்மானந்தமும் சுஷுப்தி ஆனந்தமும் ஒன்றேயாகும்.

இஸ்லாம் அறிஞர்களுக்கு ஓர் அறிவிப்பு

இந்தியாவாகிய நம் தாய்நாட்டில் எல்லா மதஸ்தர்களும் ஐக்யபாவனையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கிடையில் பண்பாட்டின் சமரசமும் அமைதியாக நிகழ்ந்து வருகிறது. கொள்கையை அனுசரித்து இந்நாட்டில் முறையாக மதம்மாறுதலுக்கும் அனுமதி உண்டு. ஆனால் இந்த அனுமதி வேறு எந்த இஸ்லாமிய நாட்டிலும் கிடையாது. இஸ்லாமிய மதத்தினின்று வேறு மதத்துக்கு மாற்ற முயலுபவனும், மாறிப்போகிறவனும் அப்போதைக்கப்போதே பாகிஸ்தானத்தில் கொல்லப்படுவார்கள். பிழைப்புக்காக அராபி நாட்டிற்குச் சென்றிருக்கிற ஹிந்துக்கள் ஆங்கு ஐயப்பன் கோயில் ஒன்றை அண்மையில்கட்டி எழுப்பினார்கள். இஸ்லாமிய நாட்டில் ஏனைய மதங்களுக்கு உற்ற ஆலயத்துக்கு ஆங்கு இடமில்லையென்று அக்கோயில் உடனடியாகப் புல்டோசர்கொண்டு தரைமட்டமாக்கப்பட்டது. அதுவே இஸ்லாமிய மதவெறிபிடித்துள்ள புறநாட்டவர்களுடைய போக்கு ஆகும். பொதுப்பட இஸ்லாமியர்கள் மதவெறி பிடித்தவர்கள். பரந்த மனம் படைத்திருப்பவர் மிகச் சிலர்.

சமத்துவமும், சகோதர பாவனையும் இஸ்லாம் மதத்தில் ஆழ்ந்து அனுஷ்டிக்கப்படுகின்றனஎன்னும் கொள்கை பலர்க்கிடையில் நிலவி வருகிறது. ஆனால் அது உண்மையன்று. அல்லாவின் வழிபாட்டின் பொழுதுதான் அவர்களுக்கிடையில் சமத்துவத்தைக்காணலாம். அத்தகைய சமத்துவம் ஒரு புறம் இருக்கத் திருட்டுப் புரட்டுச் செய்கின்ற குற்றவாளிகளுடைய கண்ணைப் பிடுங்குதலும், கை கால்களை வெட்டுதலுமாகிய காட்டுமிராண்டித் தனத்திற்கு அவர்களுடைய மதம் இடம் தருகிறது. இது பாராட்டத்தக்கதன்று. நாகரீகம் வாய்ந்த வேறு எந்த மதமும் இதற்கு ஆதரவு தராது. அரசியல்துறையில் தந்தையைக் கொன்று மகன் சிம்மாசனம் ஏறுவது உலகெங்குமுள்ள முஸ்லீம் ஆட்சியின் பழக்க வழக்கமாம். கூட்டில் பறவைகளை அடைத்து வைத்திருப்பது போன்று பெண்கள் பலரை வீட்டில் மனைவிமார்களாக அடைத்து வைத்திருந்து தங்களுக்கு விருப்பம் இல்லாதபொழுது 'தளாக்கு' என்று சொல்லி அவர்களை விரட்டியோட்டுவதும் அநாகரீகமான பழக்கமாம். படையெடுத்துச் செல்லும் இஸ்லாமியர்கள் விலங்குகள் போன்று பெண்களைத் தாக்குவது தங்கள் செயல் என்பதை அண்மையில் கீழ் வங்காளத்தில் நிரூபித்துக்காட்டினார்கள். தமிழ் நாட்டில் ராவுத்தர் என்னும் பெயர் பெற்றுள்ள முஸ்லீம்கள் இன்றைக்குப் பாகிஸ்தானத்திற்குள் சென்றால் அணுகத் தகுதியற்றவர்கள் என்று அவர்கள் விரட்டியோட்டப் படுவார்கள். இதுவே இஸ்லாமியப் பண்பு.

அண்மையில் திருநெல்வேலி மாவட்டத்தில் மீனாட்சிபுரத்தில் ஹிந்து மதத்தைச் சேர்ந்த பலபேர் திட்டமிட்டுத் தாராளமாகக் கைக்கூலி கொடுத்து இஸ்லாமிய மதத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குத் தாராளமாகப் பண உதவி இஸ்லாமிய நாடுகளிலிருந்து வருகிறது எனத் தெரியவருகிறது. இம் முயற்சிக்கு இணக்கம் தருகிற இந்திய முஸ்லீம்கள் தாய்நாட்டுக்குத் துரோகிகள் ஆவார்கள். ஏனைய நாடுகளுக்கு ஐந்தாம்படை ஆவார்கள்.

இத்தகைய பொருந்தாத இயக்கம் மறைமுகமாகத் தமிழ்நாட்டில் பரவிவருகிறது. இதை எதிர்த்து ஹிந்துமக்களுக்கிடையில் கிளர்ச்சி வடிவெடுத்து வருகிறது. இதன் விளைவாக ஹிந்து இஸ்லாமிய ஒற்றுமை குலைந்துபோய் வேற்றுமையும், வெறுப்பும் வடிவெடுக்கும். தீராக் கோபம் போராய் முடியும். அதன் விளைவாக அமைதியாக வாழ்ந்துவரும் முஸ்லீம்களும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். எனவே இந்த நிலைகுலைவின்கண் அறிஞர்களாயிருக்கும் இஸ்லாமியர்கள் கருத்தைச் செலுத்தி இந்தப் பொருந்தாத செயலைத் தடுக்கத் தீவிரமாக முயல்வார்களாக. இல்லையேல் இஸ்லாமியர்கள் தங்களுக்குத் தாங்களே தேடிக்கொள்ளும் கஷ்டதசைக்குத் தாங்களே பொறுப்பாளி ஆவார்கள். ஹிந்து சமுதாயம் இது விஷயத்தில் குமுறிக் கொண்டிருக்கிறது. சண்டை சச்சரவு வலுப்பதற்கு முன்பே சரியான முறையில் அணைபோட்டு இதைத் தடுக்க இஸ்லாமிய அறிஞர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அமரநாத யாத்திரை

(272ஆம் பக்கத் தொடர்ச்சி)

[சுவாமி குஹானந்தர்]

நான்கு வாயில்களின்மூலமாகவும் தரிசிக்கும் படி பசுபதிநாதருக்கு நான்கு முகங்கள் அமைந் துள்ளன. ரூ. 35.—செலுத்தி அனைவரின் சார் பில் அபிஷேகம் செய்தோம். பூஜை வழி பாட்டிற்குப் பிறகு ஓர் இடத்தில் அமர்ந்து ஐக்கிய வணக்கம் செய்தோம். அந்த ஆலயத் தில் 1008 லிங்கங்களை ஓர் இடத்தில் அமைத்து வைத்துள்ளனர். அதற்குள் சென்றால் முழுவ தையும் பார்த்த பிறகு தான் வெளியே வரும் படியான முறையில் பாதை அமைத்துள்ளார் கள். பின்பு புஜிமாதா என்னும் சக்தி ஆலயத் திற்குச் சென்று வழிபட்டோம். பகல் உண விற்குப் பிறகு பாலாஜி வாட்டர் கார்டனை வேன்மூலம் அடைந்தோம். அது ஓர் அழகான பூந்தோட்டமாக இருக்கிறது. பலப்பல வர்ணப் பூச்செடிகள் அழகாகக் கண்ணையும், மனதை யும் ஒருங்கே கவர்கின்றன. அங்கு ஓர் இடத் தில் ஒரு சிறிய குளம் உள்ளது. அதன் நடுவே மஹாவிஷ்ணு பள்ளி கொண்ட கோலத்தில் காட்சியளிக்கிறார். இருபக்கங்களிலும் நீரில் அப்படியே அவ்வடிவத்தினுடைய பிம்பம் பிரதிபலிக்கும்படி கலைத்திறனுடன் அமைத் திருக்கிறார்கள்.

சுயம்புநாதம் என்றழைக்கப்படும் புத்த விகாரத்துக்குச் சென்றோம். இது சிறிய குன் றின்மேல் அமைந்துள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு செங்கல், மண் ஆகிய வற்றால் கட்டப்பட்ட அரை வட்ட வடிவமான ஸ்தூபி உள்ளது. அதன் அருகே உள்ள தேசீய பொருட்காட்சிச் சாலைக்குச் சென்றோம். அங்கு நேபாள ராஜ்ஜியத்தினுடைய பழங் காலப் போர்க்கருவிகளைக் காட்சிப்பொருளாக வைத்துள்ளார்கள். மீண்டும் கோசி ஓட்ட லுக்குத் திரும்பினோம். அன்று மாலை கடை வீதிக்குச் சென்று துணி வகைகள், கடிகாரங் கள், குடைபோன்ற பல பொருட்களை வாங் கினோம்.

நேபாளத்திற்குப் பாட்னாவிலிருந்து பஸ் மார்க்கம் உள்ளது. பாதை அவ்வளவு சரியாக அமையாததால் பல இடங்களில் மண் சரிந்து பாதை அடைபட்டுவிடுவதும் உண்டு. பயணம் ஒருநாள் முழுதும் இருக்கும் என்பதால் விமா னத்தில் சென்றோம். விமானத்தில் சென்றுவர கட்டணம் ரூ. 300/- ஆகும்.

பொதுவாக நேபாளிகள் குள்ளமாகவும், அகன்ற முகம் உடையவர்களாகவும், உடல் உறுதி உள்ளவர்களாகவும் காணப்படுகிறார் கள். அங்கு நெல், மக்காச்சோளம் பயிர் செய்கிறார்கள். மக்கள் நல்ல உழைப்பாளிகளா கவும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக வும் உள்ளனர். இந்திய ரூபாய் ஒன்றுக்கு நேபாளத்தில் ஒரு ரூபாய் 45 பைசா தருகிறார் கள். ஆனால் வாழ்க்கைச் செலவுகள் நம் நாட்டைவிட இருமடங்கு அதிகமாக உள்ளது. இவர்களும் மற்ற மலைநாட்டு மக்களைப்போன்ற பழக்க வழக்கம் கொண்டு விளங்குகிறார்கள். சீதோஷ்ணநிலை நன்றாக இருப்பதால் பன் னாட்டு மக்களும் உல்லாசப் பயணமாக இங்கு வந்து தங்கிச் செல்கிறார்கள். விமான நிலையத் திலும், பாங்குகளிலும் நாணயமாற்றுச் சிரம மின்றிச் செய்து கொடுக்கிறார்கள்.

6—8—80 காலை விமானம் மூலம் பாட்னா திரும்பினோம். பாட்னா விமான நிலையத்தில் சுங்க இலாகா அதிகாரிகள் சில பொருட்களுக் குச் சுங்கவரி வசூலித்தார்கள்.

நேபாளத்திற்கு வராத 16 பேர்களும் டிரெக் கர் மூலம் பாவாபூரி, நாலந்தா, ராஜ்கீர் ஆகிய இடங்களுக்குச் சென்று திரும்பினர். பாவாபூரியில் மகாவீரருடைய சமாதி உள்ள ஜல்மந்திர் உள்ளது. அது ஸரிய ஏரியின் நடுவே அமைக்கப்பட்டுப் பாலத்தால் இணைக் கப்பட்டிருக்கிறது. ஆலயம் சலவைக்கற்களால் ஆனது.

நாலந்தாவில் ஹர்ஷர் காலத்தில் கட்டப் பட்ட பல்கலைக்கழகத்தின் இடிபாடுகளைக் கண் ணுற்று வியந்தோம். 200 அறைகளைக்கொண்ட அம்மூன்று அடுக்குக் கட்டடம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்பதை அறி யும்போது வியப்பு மேலிடுகிறது.

ராஜ்கீர் என்னும் ஊரில் மலைக்கோயில் உள்

ளது. வழியில் தண்ணீர் ஊற்றுக்களும், வெந்நீர் ஊற்றுக்களும் உள்ளன. வெந்நீர் நந்தி வாயிலிருந்து விழுவதுபோன்று அமைக்கப் பட்டுள்ளது. அனைவரும் அதில் குளித்தோம். மலைமீது பெரிய சாந்தி ஸ்தூபி உள்ளது. இது 22 லட்ச ரூபாய் செலவில் ஜப்பான் பிட்சு ஒருவரால் கட்டப்பட்டது. இதற்குச் சென்று திரும்பக் கயிறு லிப்ட் நாற்காலி அமைத்திருக்கிறார்கள். கட்டணம் ரூ. 1125 ஆகும். அதில் சென்று மேலே உள்ள ஸ்தூபியையும், புத்தரின் ஆலயத்தையும் கண்டோம். அமைதியும் ஆனந்தமும் நிறைந்த இடமாக அது உள்ளது.

கல்கத்தா

6–8–80 மாலை ஏழு மணிக்குக் கல்கத்தாவை நோக்கிப் புறப்பட்டோம்.

7–8–80 காலை 9-10 மணிக்கு எங்கள் ரயில் வண்டி ஜன நெருக்கடியும் சந்தடியும் நிறைந்த ஹௌரா சந்திப்பை அடைந்தது. எங்கள் ரயில் பெட்டியைப் பிரித்து யாத்ரீகர்கள் வண்டி தங்கும் பிளாட்பாரத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கவே காலை 10 மணி ஆகிவிட்டது. அதன் பிறகு எல்லாரும் குளித்து உணவு தயாரித்துச் சாப்பிட்டு முடியவே மணி 11 ஆகி விட்டது. ஹௌரா ஜங்ஷனில் இரவு பகல் எப்போதும் ஜனக்கூட்டம் அதிகம். அதே போன்று திருடர்களும் அதிகம். பகலில் விழித்துக்கொண்டு ரயில் பெட்டியில் அமர்ந்திருக்கும்போதே ஜன்னல் வழியாகத் திருடி விடுவார்கள். ஆதலால் ரயில்வே தலைமை அதிகாரியிடத்து விண்ணப்பம் கொடுத்து நான்கு ரயில்வே போலீஸ்காரர்களை எங்கள் பெட்டிக்குக் காவலுக்கு ஏற்பாடு செய்து விட்டுப் பகல் 12 மணிக்கு ஒரு பஸ்ஸில் ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதா தேவியார் அவதரித்த கமார்ப்புகூர், ஜெயராம்பாடியை நோக்கிப் புறப்பட்டோம்.

கமார்ப்புகூர் கல்கத்தாவிலிருந்து மேற்கே 108 கி.மீ. தூரத்தில் உள்ளது. வழி நெடுகப் பச்சைப் பசேலென்ற வயல்களுக்கிடையில் பாதை செல்கிறது. பாதிதூரம் சென்றதும் கமர்குண்டு என்னும் ஊருக்கு அருகே சாலையோரத்தில் காசி விஸ்வநாத சமிதியால் கட்டப்பட்டு உள்ள கொட்டகையில் வசதியாக அமர்ந்து, உடன் கொண்டு சென்றிருந்த உணவை உட்கொண்டோம். தாரகேசுவரர் என்னும் ஸ்தலத்தில் உள்ள சிவபெருமானுக்கு அப்பகுதி மக்கள் கங்கா தீர்த்தம் எடுத்துக் கால்நடையாகவே கொண்டு சென்று அபிஷேகம் செய்வது பழக்கமாக உள்ளது. அந்தச் சமயத்தில் அன்பர்கள் ஆயிரக்கணக்கில் காவடியில் தீர்த்தம் கொண்டு சென்றதை வழி நெடுகக் கண்டோம். அவர்கள் வந்து தங்கி இளைப்பாறிச் செல்ல இங்கு விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பயணத்தைத் தொடர்ந்தோம். வழியில் நிறைய ஓடைகளும், ஆறுகளும் செல்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன் பெய்த பெரு மழையினால் பாலங்கள் அடித்துச் செல்லப் பட்டு விட்டன. அவைகளுக்குப் பதில் மரப் பாலங்கள் அமைத்து ஓரளவு சரி செய்திருக்கிறார்கள். அதனால் பஸ் மெதுவாகச் செல்ல வேண்டியதாயிற்று. மாலை நான்கு மணியளவில் கமார்ப்புகூரை அடைந்தோம்.

அங்கு உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமத்துக்குச் சென்றோம். அங்கு உள்ள சுவாமிஜிக்கு ஏற்கனவே கடிதம் மூலம் எங்கள் வருகையைத் தெரியப்படுத்தியிருந்ததால் நல்ல முறையில் வரவேற்றார்கள். சுவாமி ஒருவரை அனுப்பி எங்களுக்குக் குருதேவரோடு தொடர்புடைய அனைத்து இடங்களையும் விளக்கிக் காட்ட ஏற்பாடு செய்தார்கள். அந்தச் சுவாமிஜி எங்களை அன்புடனும் உற்சாகத்துடனும் முதன் முதலில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவதரித்த இடத்தில் அமைத்துள்ள ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். அங்குச் சலவைக்கல்லால் ஆன விக்கிரகம் அவருடைய உண்மை வடிவ அளவிற்கு அமர்ந்துள்ள நிலையில் தத்ரூபமாக அமைந்துள்ளது. அந்தப் பீடத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவதரித்தபோது இருந்த ஹரிக்கேன் விளக்கு, உரல், அடுப்பு ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. கோபுரத்தின் உச்சியில் லிங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த ஆலயத்துக்கு எதிரே மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அதில் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் கமார்ப்புகூரில் இளமையில் நடந்தவைகளில் சிலவற்றை ஓவியமாகத் தீட்டி வைத்துள்ளனர். வயலில் செல்

லும்போது முதலில் சமாதிநிலையடைந்தது, உபநயனத்தன்று பிச்சை ஏற்றுக்கொண்டது, சிவராத்திரியன்று சிவவேடம் போட்டது, பெண்வேடம் புனைந்துகொண்டு துர்காதாஸ் வீட்டுக்குச் சென்றது போன்ற நிகழ்ச்சிகளை வரைந்து வைத்துள்ளனர்.

பக்கவாட்டில் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய முன்னோர்களின் குல தெய்வங்களான ரகுவீர், சீதளாதேவி முதலியோரை வழிபட்ட பூஜை அறையினைக் கண்டோம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறு வயதில் வசித்து வந்த வீடு, சமையலறை, மற்றவர்களுடன் உரையாடிய அறை, அவர் கையால் நட்டு வளர்த்துள்ள மாமரம் ஆகியவைகள் அருகருகே உள்ளன. சந்திரமணி தேவியார் வழிபட்ட சிவாலயம் ஆச்ரமத்தின் பின்புறம் உள்ளது. அங்குச் சென்று வழிபட்டோம். ஸ்ரீராமகிருஷ்ணர் குளித்த ஹல்தார்புகூர் ஏரி சாலையின் மறுபுறம் உள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ணரை மிகவும் நேசித்த சீதாநாத்பைன் என்பவரின் வீட்டைப் பார்த்தோம். மஹாசிவராத்திரியன்று சிவவேடம் தரித்து ஸ்ரீராமகிருஷ்ணர் நாடகம் நடித்த இடம் அங்கு உள்ளது. அக்காலத்தில் காசி, பூரிக்குச் செல்லும் வழியில் வந்து தங்கும் சத்திரம் அருகே உள்ளது. அங்கு அவர்களுக்கு அவர் நீர் கொண்டுவந்து கொடுத்தல், விறகு பொறுக்கிக் கொடுத்தல் போன்ற பணிவிடைகளைச் செய்திருக்கிறார். ஸ்ரீராமகிருஷ்ணரைக் குருதேவர் என்று பக்தர்கள் அழைப்பார்கள்.

குருதேவர் படித்த பள்ளி சற்றுத் தொலைவில் பழைய நிலையிலேயே உள்ளது. குருதேவர் தியானம் செய்த ஸ்மசானம், நாடகம் நடித்து விளையாடிய மாந்தோப்பு, சந்திரமணி தேவியார் குருதேவருக்குப் பைத்தியம் நீங்க வேண்டுமென்று வழிபட்ட கோபேஸ்வரர் சிவன் ஆலயம், குருதேவருக்கு உபநயனத்தின்போது பிச்சை கொடுத்த 'தனம்' என்ற கொல்ல மாதுக்கு அவளுடைய வம்ச வழியினர் கட்டிய கோயில் ஆகியவற்றைக் கண்ணுற்றோம்.

இவைகளை எல்லாம் காணும்போது குருதேவரின் இளமை நிகழ்ச்சிகளை நேரில் கண்டது போன்று ஓர் அனுபவம் உண்டாயிற்று. அனைவருக்கும் சுவாமிஜி பிரசாதம் அளித்து அன்புடன் வழி அனுப்பி வைத்தார்கள்.

கமார்ப்புகூரிலிருந்து புறப்பட்டுப் பஸ்மூலம் 3½ மைல் தொலைவில் உள்ள ஜெயராம்பாடியை அடைந்தோம். அங்கு ஸ்ரீ சாரதாதேவியாருக்கு ஆலயம் கட்டிவைத்துள்ளனர். ஸ்ரீசாரதாதேவியாரை அன்னையார் என்று அழைப்பதுண்டு. பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற மாலைப் பிரார்த்தனையில் கலந்துகொண்டோம். அன்னையாரின் முன்னோர்கள் வசித்த வீடு, அன்னையார் அங்கிருந்தபோது ஸ்ரீ சாரதானந்த சுவாமிகள் தங்கியிருந்த அறை, குருதேவருக்கு உடல் நலம் இல்லாதபோது அன்னையார் வழிபட்ட சிம்ஹவாஹினி ஆலயம் ஆகியவற்றைக் கண்டோம். பிறகு பஸ் மூலம் இரவு 2 மணிக்கு ஹௌரா ஸ்டேஷனை அடைந்து எங்கள் பெட்டியில்படுத்து உறங்கினோம்.

8—8—80 காலை 5 மணிக்கு எழுந்து பிளாட்பாரத்தில் உள்ள குழாய்களில் குளித்துப் பிரார்த்தனை, சிற்றுண்டி முதலியவைகளை முடித்துக்கொண்டு புளிச்சாதம், தயிர்ச்சாதம் தயார் செய்து உடன் எடுத்துக்கொண்டு காலை 9 மணிக்குப் பஸ்ஸில் ஸ்ரீ இராமகிருஷ்ணமடங்களின் தலைமை ஸ்தாபனமாகிய பேலூர் மடத்துக்குச் சென்றோம். அதன் காரியதரிசியாக உள்ள ஸ்ரீமத் வந்தனானந்த சுவாமிகளுக்கு முன்னமேயே எழுதித் தெரிவித்து இருந்தோம். அதன்படி அவர்களை முதலில் சந்தித்தோம். எங்களின் அதிர்ஷ்டவசமாக எங்களுக்கு ஏற்கனவே நன்கு தெரிந்திருந்த தமிழ் நாட்டுச் சுவாமியான ஸ்ரீமத் நந்தானந்த சுவாமிகள் அப்போது பேலூர் மடத்தில் தங்கியிருந்தார்கள். அவர்களை எங்களுடன் அனுப்பி எல்லா இடங்களையும் காட்டும்படி ஸ்ரீமத் வந்தனானந்த சுவாமிகள் அவரிடம் கூறினார்கள். பேலூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் ஹௌரா பகுதியில் கங்கா நதியின் கிளை நதியாகிய ஹூக்ளி நதிக்கரையில் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளால் விசாலமான இடத்தில் 1898ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. அது உலக ராமகிருஷ்ண மடங்களின் தலைமை ஸ்தாபனமாக இருந்து வருகிறது. அங்குப் பல சமயங்களின் கலை அழகைக் கலந்து ஸ்ரீராமகிருஷ்ணருக்கு மிக அழகிய கோயில் ஒன்று அமைத்து அதன் முன்பு ஒரு பெரிய பிரார்த்தனை மண்டபமும்

அமைத்துள்ளார்கள். கர்ப்பக்கிரஹத்தில் சல வைக்கல்லாலான குருதேவர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அந்தக் கோயிலும் குரு தேவர் வடிவமும் காண்பார் மனதைக் கவரக் கூடியனவாக உள்ளன. எல்லாரும் அங்குச் சென்று சிறிது நேரம் பிரார்த்தனையும் தியான மும் செய்தோம். அதன் பிறகு அருகில் உள்ள கங்கைக் கரையில் தூய அன்னையாரின் தேகத் தைத் தகனம் செய்த இடத்தில் அமைக்கப் பட்டுள்ள சிறிய ஆலயத்திற்குச் சென்று வழி பட்டோம். அதில் அன்னையாரின் திருவுருவப் படம் கங்கையைக் காணும்வகையில் வைக்கப் பட்டுள்ளது. அதை அடுத்து ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தரின் புனித உடல் தகனம் செய் யப்பட்ட இடத்தில் நிறுவி உள்ள கோயிலுக் குச் சென்று தரிசித்தோம். அங்குக் கீழ்ப்பகுதி யில் விவேகானந்தரின் திருவுருவம் பளிங்குக் கல்லால் செதுக்கப்பட்டுள்ளது. மேல்மாடியில் இந்துமத மூலமந்திரமான ஓங்காரம் பொறிக் கப்பட்டுள்ளது. அதையடுத்து ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் முதல் தலைவரும் ஸ்ரீ ராமகிருஷ்ண ரின் ஞானச்செல்வரென்று அழைக்கப்பட்ட வருமான ஸ்ரீமத் பிரம்மானந்த சுவாமிகளின் கோவிலுக்குச் சென்று வழிபட்டோம். இதில் அவருடைய திருவுருவச்சிலை அமைக்கப்பட் டுள்ளது. பிறகு ஸ்ரீமத் விவேகானந்த சுவாமி கள் ஸ்தாபிதம் செய்த ஸ்ரீராமகிருஷ்ணரின் கோவிலுக்குச் (Old temple) சென்று வழி பட்டோம். அதற்கு அருகிலுள்ள ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர் வாழ்ந்து வந்த அறையை அடைந்தோம். அதில் அவர் உபயோகப்படுத்திவந்த திண்டு, கமண்டலம், பாதுகைகள், கட்டில், மேஜை, நாற்காலி, எழுதுகோல் முதலியன அப்படியே பாதுகாக் கப்பட்டு வருகின்றன. அந்த அறையைக் காணும்போது அப்போதுதான் அங்கிருந் தவர் வெளிச் சென்றிருப்பது போன்று தோன்றுகிறது. அங்கு எங்கள் எல்லாருக்கும் நிறையப் பிரசாதம் கொடுத்தனுப்பினர்கள். தலைவர்ஸ்ரீமத் சுவாமி வீரேஸ்வரானந்தருடைய உடல் நிலை சரியில்லாததால் அவர்களைத் தரி சிக்க முடியவில்லை. சுவாமி வந்தனனந்தரிடம் விடைபெற்றுப் புறப்பட்டோம். கல்கத்தா செல்லும் யாத்ரீகர்கள் பேலூர் ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தைக் காணத் தவறுவதில்லை.

தக்ஷிணேஸ்வரம்

அதன் பிறகு சுவாமி நந்தானந்த அவர்கள் எதிர்க் கரையிலுள்ள தக்ஷிணேஸ்வரக் கோவி லுக்கு எங்கள் அனைவரையும் வேனிலேயே அழைத்துச் சென்றார். அங்குதான் ஸ்ரீ ராம கிருஷ்ணர் 26 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். அன்னை பவதாரணிக்கு வழிபாடு செய்தார். ஆன்மீகச் சாதனைகள் அனைத்தையும் செய்து முடித்தார். தூய இளைஞர்களைத் துறவுவாழ்க் கைக்கு உருவாக்கினர். தம் அனுபூதிகளை ஆன் மீக நாட்டமுடைய மக்களுக்கு எடுத்து வழங் கினர். சுருங்கச் சொல்லின் தற்போது உலகம் முழுவதும் பரவியுள்ள ராம கிருஷ்ண இயக்கத்தை உருவாக்கிய இடமே அதுதான். (தொடரும்)

செய்திகள்

நிகழ்பவை

21—8—81 வெள்ளிக்கிழமையன்று ஆடி விடு முறைக்குப் பின் ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுலப் பள்ளி திறக்கப்படுகிறது.

23—8—81 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீஜயந் தியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யா வன குருகுல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணிநேரம் அகண்டநாமபஜனையும், மாலை 6-30 மணியிலிருந்து 7.30 மணி வரை ஐக்கிய வணக் கமும் செய்வார்கள்.

2—9—81 புதன்கிழமையன்று ஸ்ரீ விநாயக சதுர்த்தி ஆகும். அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் பகல் பன்னி ரண்டு மணிநேரம் அகண்டநாம பஜனையும், நண்பகல் 11-00 மணியிலிருந்து 12-00 மணி வரை ஐக்கிய வணக்கமும், மாலை 7-00 மணிக்கு மேல் மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து விநாயகர் பூஜையும் செய்து விநாயக சதுர்த்தி யைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை பிரசார விலை ரூ.	16-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ...	6-00
இராமாயணம் ,, ...	5-00
தினசரி தியானம் ,, ...	4-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ,, ...	3-00
கர்மயோக விளக்கம் ...	10-00
ஞானயோக விளக்கம் ...	8-00
ராஜயோக விளக்கம் ...	8-00
பக்தியோக விளக்கம் ...	6-00
பரமஹம்சரின் பெருமை ...	6-00
விவேகானந்த விவரணம் ...	4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ...	4-00
விவேகானந்த உபநிஷதம் ...	4-00
கடவுளின் வடிவங்கள் ...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I ...	3-50
அனுஷ்டான வேதாந்தம் ...	3-00
எதிர்கால இந்தியா ...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் ...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ...	2-50
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம் ...	2-00
கண்ணன் என்னும் கடவுள் ...	2-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம் ஷை ...	3-00
சின்மயானந்த குரு ஷை ...	3-00
ஆனந்தமானபரம் ஷை ...	3-00
சுகவாரி ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம் ஷை ...	3-00
எங்குநிறைகின்றபொருள் ஷை ...	2-50
பரசிவ வணக்கம் ஷை ...	1-00
பஜனைப் பாடல்கள் ...	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்) ...	1-50
விபீஷணன் சரணாகதி ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை ...	1-50
அமரநாத யாத்திரை ...	1-25
சந்நியாசி ...	1-25
இறைவணக்கம் ...	1-00
குழந்தைகளின் களிக்கூடம் ...	1-00
சகோதரி நிவேதிதை ...	1-00
காயத்ரீ ...	1-00
இராவண தத்துவம் ...	1-00
வாலி மோட்சம் (நாடகம்) ...	1-00
தவப்புதல்வர்கள் ,, ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி ,, ...	1-00
தானவீரன் கர்ணன் ,, ...	1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம் ...	1-00
பிரஹ்லாதன் (நாடகம்) ரூ.	1-00
மார்க்கண்டேயன் ,, ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும் ...	1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்) ...	0-80
நன்மக்களைப் பெறுதல் ...	0-80
நோய்க்கு இடம் கொடேல் ...	0-80
பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்) ...	0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ...	0-75
*ஆத்ம சக்தி ...	0-75
*ஆலய வழிபாடு ...	0-75
*சக்தி தத்துவம் ...	0-70
*சிவதத்துவம் ...	0-70
*மனிதனது நிஜசொருபம் ...	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் ...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும் ...	0-60
*சூரிய நாராயணன் ...	0-50
*முருகக்கடவுள் ...	0-50
*விஷ்ணு தத்துவம் ...	0-50
தெய்வீக மகிமைகள் ...	0-50
சைவன் யார்? ...	0-50
கர்மகாண்டம்எது?ஞானகாண்டம்எது?	0-50
*கணபதி ...	0-40
வர்ணாச்ரம தர்மம் ...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்...	0-30
The Bhagavad Gita (10th Imp.) ...	20-00
Sri Lalitambika Sahasranama Stotram ...	10-00
The Indian National Education ...	8-00
Ramakrishna Lives Vedanta ...	8-00
Facets of Brahman or The Hindu Gods ...	5-00
Daily Divine Digest (DELUXE) ...	4-50
Daily Divine Digest (Ordinary) ...	2-50
Mahabharata (With plastic cover) ...	6-00
Ramayana (do) ...	4-00
The man Making Message of Vivekanada (With Plastic cover) ...	4-00
Sri Vishnu Sahasranama Stotram ...	4-00
The Bahagaved Gita (Small Size) ...	4-00
Siva Sahasranama Stotram ...	3-50
Bheeshma The Superman ...	3-50
Hinduism Hosts Christianity ...	3-00
Holy Bible—In the Light of vedanta ...	1-50
Reminiscences of Master Mahashaya ...	1-50
*Introducing the Gita ...	1-50
The Garland of Paraaparam ...	1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami ...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ.2-50 முதல் 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

Edited by SWAMI NITHYANANDA,

Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.